# பாலர் மலர்
# தமிழ் கல்விக் கழகம்





## 49th Annual Magazine - 2026

**BALAR MALAR TAMIL EDUCATIONAL ASSOCIATION INC**

www.balarmalar.nsw.edu.au +61 2 7226 2345

MaaMadurai

STREET FOOD

# Biryani vasam ini
# Sydney engum veesum!

திருக்குறள் 82 · விருந்தோம்பல்

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

*"Even if it were the nectar of immortality, it is not right to eat it alone while a guest waits outside."*



**Seeraga Samba Mutton Biryani**
OUR SIGNATURE · MADE FRESH DAILY



Madurai Chicken Biryani



Parotta & Chicken Salna



Chicken Kothu Parotta



Madurai Pepper Chicken



Madurai Kola Urundai



Madurai Jigarthanda

Dine-in ◆ Takeaway ◆ Catering ◆ Uber Eats ◆ DoorDash

**0424 077 120**

Shop P34, Portico Plaza, 17–19 Aurelia St, Toongabbie NSW 2146
**Opposite Woolworths**

**www.maamadurai.com.au**

Follow us on Instagram
@maamadurai.streetfood


பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்
வாழ்க தமிழ்
தன்னைத் தெரிந்து கொள்
தமிழை அறிந்து கொள்
BALAR MALAR TAMIL EDUCATIONAL ASSOCIATION INC



## Acknowledgement

We thank all our Balar Malar family members, volunteers, well wishers, business owners, designer and printers who supported us with their full co-operation for the successful publication of this year Annual magazine and look forward to the same in the years to come.

- Annual Day Committee

இந்த ஆண்டு மலர் உங்கள் கையில் தவழ எங்களுக்கு முழு ஆதரவு அளித்த பாலர் மலர் குடும்பத்தினருக்கும், சேவையாளர்களுக்கும், வியாபார பெருமக்களுக்கும், வடிவமைப்பாளர்களுக்கும் மற்றும் அச்சகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். வரும் காலங்களில் உங்கள் ஆதரவு தொடர வேண்டுகிறோம்.

- ஆண்டு விழா குழு

| | |
|---|---|
| Ashfield | பள்ளி நிர்வாக குழு |
| Cherrybrook | பள்ளி நிர்வாக குழு |
| Holsworthy | பள்ளி நிர்வாக குழு |
| Marsden Park | பள்ளி நிர்வாக குழு |
| Minto | பள்ளி நிர்வாக குழு |
| Newcastle | பள்ளி நிர்வாக குழு |
| Ourimbah | பள்ளி நிர்வாக குழு |
| Parramatta | பள்ளி நிர்வாக குழு |
| Quakers Hill | பள்ளி நிர்வாக குழு |
| Sevenhills / Blacktown | பள்ளி நிர்வாக குழு |
| Wollongong | பள்ளி நிர்வாக குழு |
| Main BM | நிர்வாக குழு |

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்

## BALAR MALAR TAMIL EDUCATIONAL ASSOCIATION INC

# 49-வது ஆண்டு விழா

# 49th Annual Day Celebration

**15th November 2026**
**Sunday**
**at 9:00 AM – 6:00 PM**

**BLACKTOWN LEISURE CENTRE STANHOPE,**
**STANHOPE PKWY & SENTRY DR,**
**STANHOPE GARDEN, NSW 2768.**

*Chief Guest*

**Ms. Lyndall Franks**
Community Languages Schools Program Coordinator
Student Support and Specialist Programs
NSW Department of Education

**Dr. S. Janakiraman**
The Consulate General of India, Sydney.

**Dr. Saroja Srinivasan and Mr. Srinivasan**
Balar Malar Founder

*We request the honour of your presence at our Annual Day celebrations to make the event a memorable one*

KINDLY NOTE: COMPLIMENTARY FOOD TOKENS WILL NOT BE PROVIDED THIS YEAR.
A VARIETY OF FOOD STALLS WILL BE AVAILABLE ON SITE FOR GUESTS
TO PURCHASE AND ENJOY MEALS THROUGHOUT THE DAY.

இந்த ஆண்டு இலவச உணவு டோக்கன்கள் வழங்கப்பட மாட்டாது.
விருந்தினர்கள் உணவு வகைகளை வாங்கி, நாள் முழுவதும் மகிழ்வதற்காக,
பலவிதமான உணவு அங்காடிகள் நிகழ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கும்.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | பாலர் மலர் தலைமை அலுவலர்கள் 2026 | 1 |
| 2 | பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆண்டறிக்கை | 2 |
| 3 | நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகள் கூட்டமைப்பின் வாழ்த்து மடல் | 7 |
| 4 | நியூசவுத் வேல்ஸ் சமூக மொழிப் பள்ளிகள் கூட்டமைப்பின் வாழ்த்து மடல் | 9 |
| 5 | வாழ்த்து மலர்கள் | 10 |
| 6 | ஆஷ்ஃபீல்டு பள்ளி விபரங்கள் | 15 |
| 7 | செர்ரிப்ரூக் பள்ளி விபரங்கள் | 42 |
| 8 | ஹோல்ஸ்வொர்த்தி பள்ளி விபரங்கள் | 65 |
| 9 | மார்ஸ்டன் பார்க் பள்ளி விபரங்கள் | 94 |
| 10 | மிண்டோ பள்ளி விபரங்கள் | 117 |
| 11 | நியூகாசில் பள்ளி விபரங்கள் | 144 |
| 12 | ஓரிம்பா பள்ளி விபரங்கள் | 161 |
| 13 | பாரமட்டா பள்ளி விபரங்கள் | 178 |
| 14 | குவேக்கர்ஸ் ஹில் பள்ளி விபரங்கள் | 217 |
| 15 | செவன்ஹில்ஸ் பள்ளி விபரங்கள் | 242 |
| 16 | உள்ளங்காங் பள்ளி விபரங்கள் | 325 |
| | | |
| | | |
| | | |

# Balar Malar Tamil Educational Association Inc.
# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்



## பாலர் மலர் தலைமை அலுவலர்கள் ( BALAR MALAR OFFICE BEARERS) - 2026

| பணிக்குழு | பெயர் | Committee/Role | Member's Name |
|---|---|---|---|
| தலைவர் | திருமதி. சித்ரா வெங்கடன் | President | Mrs. Chitra Venkatan |
| துணை தலைவர் | திரு. பிரகாஷ் முத்து | Vice President | Mr. Prakash Muthu |
| செயலாளர் | திருமதி. ஐஸ்வர்யா ஆனந்த் | Secretary | Mrs. Aishwarya Anand |
| இணை செயலாளர் | திரு. சங்கர் கணேஷ் | Joint Secretary | Mr. Shankar Ganesh |
| பொருளாளர் | திருமதி. விபன்சியா எரி | Treasurer | Mrs. Vipanjiya Eri |
| இணை பொருளாளர் | திரு. பார்த்திபன் சுப்பிரமணியன் | Joint Treasurer | Mr. Parthiban Subramanian |

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தின் 2026 ஆம் ஆண்டறிக்கை

## பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம் 49ஆம் ஆண்டு விழா - 2026

**தமிழ்ப்பணியின் தடங்கள்... பொன்விழாவை நோக்கிய பெருமிதப் பயணம் !**

கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந் தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ?

– திருவிளையாடல் புராணம்

தமிழின் தொன்மையையும் செம்மையையும் அதன் இலக்கிய வளத்தையும் பறைசாற்றும் இப்பாடல், தமிழ்மொழியின் தனிச்சிறப்பையும் பெருமையையும் நமக்கு உணர்த்துகிறது. இத்தகைய செம்மொழியின் இனிமையையும், தமிழர் பண்பாட்டின் செழுமையையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் உயரிய நோக்குடன், கடந்த 49 ஆண்டுகளாகத் தொய்வின்றித் தமிழ்ப்பணி ஆற்றி வருகிறது பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்.

தாய்மொழி என்பது வெறும் தொடர்பாடல் கருவியன்று; அது ஒரு இனத்தின் அடையாளம், பண்பாட்டின் உயிர்நாடி, தலைமுறைகளை இணைக்கும் பாலம். இத்தகைய உணர்வோடு, புலம்பெயர் மண்ணில் தமிழின் வேர்களை ஆழமாகப் பதியச் செய்து, அதன் விழுதுகளை அடுத்த தலைமுறைகளிடம் விரித்துச் செல்லும் அரும்பணியில் பாலர் மலர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

இன்று, பதினொரு கிளைகளுடன் விரிந்து பரந்துள்ள எங்கள் கல்விக் கழகத்தில் சுமார் 1,500 மாணவர்கள் தமிழ்க் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களின் அறிவுப் பயணத்திற்கு வழிகாட்டும் 350 ஆசிரியர்களும், உறுதுணையாக நிற்கும் 1,100 பெற்றோர்களும் பாலர் மலரின் வளர்ச்சிப் பயணத்தில் இன்றியமையாத தூண்களாக விளங்குகின்றனர்.

### கிளைகள் விரிவாக்கம் - தமிழ்ப்பணியின் புதிய எல்லைகள்

2026ஆம் ஆண்டு, பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தின் வளர்ச்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்துள்ளது. தமிழ்க் கல்வியை மேலும் பல பகுதிகளில் வாழும் தமிழ்ச் சிறார்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில், இவ்வாண்டு இரண்டு புதிய கிளைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், பத்தாவது கிளைப் பள்ளியாக ஒரும்பாவில் தமிழ்ப்பள்ளி தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, பதினொன்றாவது கிளைப் பள்ளியாகப் பரமட்டாவில் தமிழ்ப்பள்ளி தொடங்கப்பட்டு வெகு சிறப்பாக இயங்கி வருகிறது. இப்புதிய கிளைகளின் தொடக்கம், தமிழ்க் கல்வியின் எல்லைகளை விரிவுபடுத்துவதோடு, மேலும் பல குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மொழிக் கல்வியை வழங்குவதற்கான வாய்ப்பையும் உருவாக்கியுள்ளது.

பதினொரு கிளைகளாக விரிந்துள்ள இவ்வளர்ச்சி, நிர்வாகத்தின் தொலைநோக்குப் பார்வை, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பெற்றோர்களின் ஒத்துழைப்பு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாகும்.

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தின் 2026 ஆம் ஆண்டறிக்கை

## சாதனைகளால் சிறக்கும் கல்வியாண்டு

2026ஆம் ஆண்டு, பாலர் மலர் மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் வளர்ச்சியில் சிறப்புமிக்க ஆண்டாகத் திகழ்கிறது. சிட்னி, நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் மற்றும் ஆஸ்திரேலிய அளவில் நடைபெற்ற பல்வேறு தமிழ்ப் போட்டிகளில் எங்கள் மாணவர்கள் பங்கேற்று, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றிகளைத் தமதாக்கியுள்ளனர்.

பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற தமிழ்ப் போட்டிகளில் 500 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அவர்களுள் வெற்றிபெற்ற 170 மாணவர்களைக் கௌரவிக்கும் வகையில் தமிழ்ப் போட்டி விருது விழா சிறப்புற நடைபெற்றது. மாணவர்களின் உழைப்பையும் திறமையையும் அங்கீகரிக்கும் இத்தகைய நிகழ்வுகள் அவர்களது தன்னம்பிக்கையை வளர்ப்பதோடு, தமிழின் மீதான பற்றையும் மேலும் வலுப்படுத்துகின்றன.

மாணவர்களின் கல்விச் சாதனைகளில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக, பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் நியூ சவுத் வேல்ஸ் உயர்நிலைப் பள்ளித் தேர்வில் (HSC) தமிழ் பாடத்தில் மாநில அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். ஆண்டுதோறும் தமிழைப் பாடமாகக் கற்று, உயர்நிலைப் பள்ளித் தேர்வில் தமிழ் மொழியைத் தேர்வுப் பாடமாக எழுதும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. மாணவர்களுக்கு முறையான வழிகாட்டுதலையும் பயிற்சிகளையும் வழங்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், பெற்றோர்களின் பேராதரவும் இவ்வெற்றிகளின் அடித்தளமாக விளங்குகின்றன.

## ஒருங்கிணைந்த நிர்வாகம் - வலுவான கல்விக் கட்டமைப்பு

கல்விச் செயல்பாடுகளுடன் நிர்வாக ஒருங்கிணைப்பிற்கும் இவ்வாண்டு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பாலர் மலர் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் பதினொரு கிளைகளுக்கும் நேரடியாகச் சென்று, ஒவ்வொரு பள்ளியின் நடைமுறைகள், தேவைகள் மற்றும் சவால்களை அறிந்துகொள்ளும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. சிறந்த செயல்முறைகளைப் பிற கிளைகளுடன் பகிர்ந்துகொண்டு, கல்வி மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

2026ஆம் ஆண்டில் மக்கள் தொடர்பு அதிகாரியாக திரு.சக்தி சிவபாலன் கனகாசலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது கழகத்தின் நிர்வாக வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். அவருடன் இணைந்து மக்கள் தொடர்புப் பணிகளையும் கழகத்தின் ஒருங்கிணைப்புச் செயல்பாடுகளையும் மேலும் வலுப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், அவரது மேற்பார்வையில் பாலர் மலர் கல்விக் கழகத்தின் அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கான குழு அமைக்கப்பட்டுள்ளது. காலத்திற்கேற்ப நிர்வாகக் கட்டமைப்பை மேம்படுத்தி, கழகத்தின் எதிர்காலச் செயல்பாடுகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைப்பதே இம்முயற்சிகளின் நோக்கமாகும்.

## கலை வழிக் கல்வி - தமிழைக் கற்கும் புதிய பரிமாணம்

மொழி என்பது வெறும் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல; அது வாழ்வோடு கலந்து, உணர்வோடு இணைந்து, அனுபவத்தின் வழியாகப் பயிலப்பட வேண்டிய பண்பாட்டு அடையாளமாகும். இதன் அடிப்படையில், சில கிளைப் பள்ளிகளில் கலை வழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கலை, படைப்பாற்றல், பாடல்கள், ஓவியங்கள் மற்றும் பண்பாட்டுச் செயல்பாடுகள் வழியாகத் தமிழைக் கற்பதன் மூலம், மாணவர்களின் மொழித்திறனையும் கற்பனை வளத்தையும் தமிழின் மீதான ஈடுபாட்டையும் வளர்ப்பதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தின் 2026 ஆம் ஆண்டறிக்கை

**பொன்விழாவை நோக்கி...**

நாற்பத்தொன்பது ஆண்டுகள் என்பது வெறும் கால அளவல்ல; அது எண்ணற்ற மாணவர்களின் கல்விப் பயணம், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பெற்றோர்களின் நம்பிக்கை, நிர்வாகத்தின் தொலைநோக்குப் பார்வை மற்றும் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவு ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்ட பெருமைமிகு வரலாறு.

ஒரு சிறிய முயற்சியாகத் தொடங்கிய பாலர் மலர், இன்று பதினொரு கிளைகளுடனும் சுமார் 1,500 மாணவர்களுடனும் விரிந்து பரந்த கல்விக் குடும்பமாக வளர்ந்துள்ளது. ஒவ்வொரு மாணவரின் வெற்றியிலும், ஒவ்வொரு ஆசிரியரின் அர்ப்பணிப்பிலும், ஒவ்வொரு பெற்றோரின் ஆதரவிலும் பாலர் மலரின் வளர்ச்சிப் பயணம் உயிர்ப்புடன் தொடர்கிறது.

பொன்விழாவை நோக்கி நடைபோடும் இவ்வேளையில், கடந்த காலச் சாதனைகளைப் பெருமையுடன் நினைவுகூர்வதோடு, எதிர்காலத் தலைமுறைகளுக்கான புதிய இலக்குகளையும் நாம் வகுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. தமிழை ஒரு பாடமாகக் கற்பிப்பதோடு நின்றுவிடாமல், தமிழை நேசிக்கும், தமிழில் சிந்திக்கும், தமிழர் பண்பாட்டின் விழுமியங்களை உணர்ந்து வாழும் ஒரு புதிய தலைமுறையை உருவாக்குவதே எமது உயரிய நோக்கமாகும்.

எமது 49 ஆண்டுகாலத் தமிழ்ப்பயணத்திற்கு உறுதுணையாக விளங்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், முன்னாள் நிர்வாகிகள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் !**
**இன்பத் தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !**

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகத்தின் தமிழ்ப்பணி மேலும் பல தலைமுறைகள் தொடரட்டும்! தமிழ்மொழியின் இனிமையும் தமிழர் பண்பாட்டின் பெருமையும் உலகெங்கும் வாழும் தமிழ்ச் சிறார்களின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கட்டும்!

**தமிழ் வளர்ப்போம் ! தலைமுறைகளை இணைப்போம் !**



Balar Malar Tamil Educational Association Inc.

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்



**திரு. சக்தி சிவபாலன் கனகாசலம்**

பாலர் மலர் மக்கள் தொடர்பு அலுவலர்

2026 - 2031

**Mr. Sakthi Sivabalan Kanakasalam**

Balar Malar PRO

2026 - 2031



**திரு. ராஜேஷ் பிரபு துரைராஜ்**

பாலர் மலர் தலைமை கல்வி ஒருங்கிணைப்பாளர்

2026

**Mr. Rajesh Prabhu Durairaj**

Balar Malar Academic Coordinator

2026

# பாலர் மலர் தமிழ் கல்விக் கழக தகவல் தொழில்நுட்பக்குழு



**Mr. Vignesh Natarajan**
BMIT Coordinator



**Mr. Karthik Balaji Venkataraman**



**Mr. Manigandan Janarthanam**



**Mr. Nantha Kumar Raja**



**Mrs. Sasikala Narayanasamy**



**Mrs.Sharmila Nagarajan**

**Mrs. Saranya Arun Kumar**

**Prassanna Srinivasan**

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
P O Box 4102, HOMEBUSH NSW 2140
ABN: 84 778 609 835 info@nswfts.org.au www.nswfts.org.au **IBNID: 183-635**

1977ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆண்டு கலாசார விழாவை முன்னிட்டு, நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பின் சார்பில் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சரோஜா சீனிவாசன் அவர்களின் இல்லத்தில் சுமார் பத்து மாணவர்களுடன் தொடங்கிய பாலர் மலர், பல தலைமுறைகளின் அர்ப்பணிப்பாலும் தன்னார்வத் தொண்டாலும் வளர்ந்து இன்று 11 கிளைகளைக் கொண்ட தமிழ்க் கல்வி அமைப்பாகத் திகழ்கிறது. பரமட்டா மற்றும் ஒரிம்பா ஆகிய இடங்களில் இரண்டு புதிய கிளைகளைத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கும் முக்கியமான முன்னேற்றமாகும். இதன் மூலம் மேலும் பல குடும்பங்களுக்கு தமிழ்க் கல்வி கிடைக்கிறது. இந்த வளர்ச்சிக்குப் பங்களித்த நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழை ஒரு பாடமாகக் கற்று, நமது மொழி, பண்பாடு மற்றும் விழுமியங்களுடன் தொடர்பைப் பேணிவரும் மாணவர்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், பிள்ளைகளின் தமிழ் கற்றலை ஊக்குவிக்கும் பெற்றோர்களின் ஆதரவும் பாராட்டுக்குரியவை.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு நடத்திவரும் ஆசிரியர் மற்றும் மாணவர் பயிற்சிப் பட்டறைகள், முனைவர் இளங்கோ வேந்தனார் நினைவு தமிழ்ப் புலமைத் தேர்வுக்கான பங்களிப்பு, விடைத்தாள் திருத்தும் பணி உள்ளிட்ட முயற்சிகளில் பாலர் மலர் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவுக்கு நன்றி.

எங்கள் கூட்டமைப்பு இவ்வாண்டு நான்காம் மற்றும் ஐந்தாம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் மறுஆய்வு செய்து, திருத்திய பதிப்புகளை 2027ஆம் கல்வியாண்டுக்கு முன் மறுபதிப்பு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதேபோல், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளுக்கான பாடநூல்கள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டிகளையும், பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான ஆசிரியர் வழிகாட்டிகளையும் உருவாக்கி, 2027ஆம் கல்வியாண்டுக்கு முன் வெளியிட முயற்சி செய்து வருகிறது.

இது ஒரு முக்கியமான முயற்சியாகும். ஆஸ்திரேலியாவில் உள்ள அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளிலும் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழைக் கற்பிப்பதற்கும், மாணவர்களை உயர்நிலைப் பள்ளிச் சான்றிதழ் (HSC) தமிழ்ப் பாடத் தேர்வுக்குத் தயார்படுத்துவதற்கும் இந்தக் கற்றல் வளங்கள் உதவும் என நம்புகிறேன். இந்த முக்கியமான முயற்சிகளுக்கு பாலர் மலர் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழை ஆஸ்திரேலியாவில் முன்னுரிமை ஆசிய மொழியாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நோக்கில் நாங்கள் கையெழுத்து இயக்கம் ஒன்றை முன்னெடுத்து வருகிறோம். நமது பிள்ளைகளுக்கு தமிழைக் கற்பதிலும், அவர்களின் மொழித் திறனை வளர்ப்பதிலும் சமமான வாய்ப்புகளை உருவாக்க இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும்.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.
P O Box 4102, HOMEBUSH NSW 2140

மனுவில் கையொப்பமிடுங்கள்: https://c.org/PxjfCjD6KS
மனுவில் கையொப்பமிட்டு, தமிழ் உங்களுக்கு ஏன் முக்கியம் என்பதையும் பதிவிடுங்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து குறைந்தது 10 கூடுதல் கையொப்பங்களைப் பெறவும் உதவுங்கள்.

பாலர் மலருடன் இணைந்து பணியாற்றி, அடுத்த தலைமுறையினர் தமிழையும் தமிழர் விழுமியங்களையும் கற்றுத் தொடர தேவையான ஆதரவை வழங்க நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு தொடர்ந்து தயாராக உள்ளது. ஒன்றிணைந்து செயல்பட்டு, தமிழ் மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்போம். தமிழால் இணைவோம்!

பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெறவும், அதன் தமிழ்த் தொண்டு தொடர்ந்து வளரவும் எனது நல்வாழ்த்துகள்.

வாழ்க தமிழ் ! வளர்க பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகம் !



முத்துக்குமாரசாமி கோவிந்தராஜன்
தலைவர்
நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# NSW FEDERATION OF COMMUNITY LANGUAGE SCHOOLS INC.

12A Seaview Street, DULWICH HILL NSW 2203 Phone: 02 9558 6134
Fax: 02 9558 6176 E-mail: inf@nswfcls.org.au Website: www.nswfcls.org.au


Akan
Amharic
Arabic
Aramaic/ Syriac
Armenian
Assyrian
Bangla
Bhutanese
Bosnian
Bulgarian
Burmese
Cook Islands Maori
Chaldean
Chinese
Croatian
Czech
Danish
Dari
Dinka
Dutch
Edo
Estonian
Farsi/Persian
Filipino
Finnish
French
German
Greek
Gujarati
Hebrew
Hindi
Hungarian
Indonesian
Italian
Japanese
Kannada
Karen
Kirundi
Khmer
Korean
Kurmanji
Krio
Lao
Latvian
Lithuanian
Macedonian
Malay
Malayalam
Maltese
Mandaean
Maori
Marathi
Nepalese
Niuean
Nuer
Oromo
Polish
Portuguese
Pukapuka
Pulaar
Punjabi
Romanian
Roturan
Russian
Samoan
Sanskrit
Serbian
Sinhala
Slovak
Slovenian
Spanish
Swahili
Swedish
Tamil
Telugu
Thai
Tibetan
Tigrinia
Tongan
Turkish
Uighur
Ukrainian
Urdu
Urhi
Vietnamese



It is a pleasure to contribute this message to the Annual Day Magazine of the **Balar Malar Tamil Education Association Inc.**

Since its establishment in **1977**, Balar Malar has grown into an extraordinary community, with **11 branches**, more than **1,400 students**, over **350 volunteers**, and the support of **1,200 families**. This achievement reflects the dedication and commitment of everyone involved over nearly five decades.

I have had the privilege of attending many Balar Malar events over the years, and I continue to be amazed by the passion and dedication of your teachers and volunteers. What impresses me most is their willingness to continually learn and grow through professional development opportunities, always striving to provide the best possible education and support for their students and community.

The success of Balar Malar is built on the hard work of teachers, volunteers, leaders, and families who share a common goal: keeping Tamil language and culture strong for future generations while helping young people thrive in Australia's multicultural society.

As you celebrate another successful year, there is even more excitement ahead, with Balar Malar's Golden Jubilee next year, marking an incredible 50 years of service to the community.

On behalf of the NSW Federation of Community Language Schools, I congratulate the entire Balar Malar family on your achievements and thank the Management Committee for their tireless work. I am looking forward to the students' performances and to seeing their wonderful work featured in this commemorative magazine.

Congratulations and best wishes for a memorable Annual Day celebration and a wonderful Golden Jubilee year ahead.

Lúcia Johns

Lúcia Johns
President
NSW Federation of Community Languages Schools Inc.

# Andrew Charlton MP
MEMBER FOR PARRAMATTA

## BALARMALAR TAMIL SCHOOL
### 49th Year Cultural Celebrations and Annual Day

It is my great pleasure to extend my warmest congratulations to the Balarmalar Tamil School community on your 49th Year Cultural Celebrations and Annual Day.

Since its establishment in 1977, Balarmalar Tamil School has been sustained by generations of families, teachers and volunteers who have generously shared their time, knowledge and passion. Their commitment has given young people the opportunity to learn their language, celebrate their heritage and remain connected to the traditions and stories that have shaped their families.

Community language schools like Balarmalar are an important part of Australia's multicultural story. They bring people together, strengthen connections between generations and give young Australians a place to take pride in who they are and where they come from. The ability to speak and understand a heritage language is a precious gift, enriching not only individual families but our wider community.

This year's celebrations are especially meaningful as Balarmalar looks ahead to its Golden Jubilee in 2027. Fifty years will be an extraordinary achievement and, above all, a celebration of the people who have been part of the school's journey. Every student, parent, teacher and volunteer has played a part in building the strong and vibrant community that Balarmalar is today.

I warmly congratulate everyone who has contributed to Balarmalar Tamil School over the past 49 years. I hope this year's Annual Day is a joyful opportunity for the community to come together, celebrate your achievements and look forward with pride to this very special chapter in the school's history.

Congratulations to the entire Balarmalar Tamil School family, and my very best wishes for a wonderful Annual Day and your Golden Jubilee celebrations in 2027.

Warm regards,

Andrew Charlton

**The Hon. Dr Andrew Charlton MP**
Cabinet Secretary
Assistant Minister for Science, Technology and the Digital Economy
Federal Member for Parramatta

(02) 9689 1455 andrew.charlton.mp@aph.gov.au
www.andrewcharlton.com.au



Authorised by Dr Andrew Charlton, ALP, 75 George Street, Parramatta NSW 2150

# தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள்
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition Australian Society of Graduate Tamils (AsoGT)

## வாழ்த்துச் செய்தி

இவ்வருடம் தமிழ்ப்பணியில் 49 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் பாலர் மலர் தமிழ் கல்வி நிலையத்தின் மலர் வெளியீட்டையொட்டி, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள் குழு சார்பாக உளங்கனித்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருவகையடைகிறேன்.

இவ்வருடம் பாலர் மலர் தமிழ் கல்வி நிலையத்தின் ஏழு கிளைகளைச் சேர்ந்த 192 மாணவர்கள் நியூ சவுத் வேல்ஸ் மாநில தமிழ் ஊக்குவிப்பு போட்டிகளில் பங்கேற்று, 24 வெற்றிக்கேடயங்களையும் தேசிய போட்டிகளில் 3 தங்கப்பதக்கங்கள் 2 வெள்ளிப்பதக்கங்கள், எனப் பல்வேறு வெற்றிகளைப் பதிவு செய்து கல்வி நிலையத்திற்கும் எங்கள் போட்டிகளுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும், இளைஞர் பிரிவு விவாதப்போட்டியில் 9 குழுக்களும் , அதிமேற்பிரிவு வினாடிவினாப் போட்டியில் 14 குழுக்களும் இளைஞர் பிரிவு வினாடிவினாப் போட்டியில் 5 குழுக்களும் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றி இளைஞர் பிரிவுக்கான விவாதம், அதிமேற்பிரிவு வினாடிவினாப் போட்டிகளில் வெற்றிக்கேடயத்தை வென்றுள்ளார்கள். மாநில மற்றும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்று பரிசில்களை வென்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது உளங்கனிந்த பாராட்டுகள்.

இந்த வெற்றிப் பயணத்தில் மாணவர்களை ஊக்குவித்து வழிநடத்திய பெற்றோர்கள், அர்ப்பணிப்புடன் உழைத்த ஆசிரியர்கள், கல்வி நிலைய நிர்வாகத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வருடாவருடம் நடுவர்களாக பங்கேற்று தங்கள் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றும் பாலர் மலர் தமிழ் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும் இந்த தருணத்தில் எமது நன்றிகள் உரித்தாகின்றன.

பாலர் மலர் தமிழ் கல்வி நிலையத்தின் தமிழ்ப்பணி தொடர்ந்து விருத்தியடைந்து பல தலைமுறைகளுக்கும் தமிழின் மணத்தைப் பரப்பிச் செல்ல எனது இதயங் கனிந்த வாழ்த்துக்கள்.



சிவபாலன் பகீரதன்
நியூ சவுத் வேல்ஸ் மாநில இணைப்பாளர்
தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள் குழு
அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

# வாழ்த்துமடல்

பாலர்மலர் தமிழ் பள்ளி தனது கல்விப்பணியில் நாற்பத்தொன்பது ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து, தமிழ்மொழித் தொண்டில் தொடர்ந்து சிறப்புடன் பயணித்து வருவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர்கள் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும், தம் வேர்களையும், மரபுகளையும், நினைவுகளையும் தம்மோடு சுமந்து செல்வதோடு, தாம் வாழும் மண்ணிலும் தமிழுக்கென ஓர் இடத்தை உருவாக்கி, அதற்குரிய மதிப்பையும் மரியாதையையும் நிலைநாட்டத் தவறுவதில்லை. ஏனெனில், தமிழ் என்பது நமக்கு வெறும் மொழியன்று; அது நம் இனத்தின் அடையாளம், நம் பண்பாட்டின் உயிர்நாடி, நம் முன்னோர் நமக்களித்த அரும்பெரும் செல்வம். அத்தகைய செல்வத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்த உயரிய கடமையைத் தம் நெஞ்சில் ஏந்தி, பெற்றோர்களின் அர்ப்பணிப்பும், தன்னார்வலர்களின் உழைப்பும், ஆசிரியப் பெருமக்களின் தொண்டும் இணைந்திட, ஒரு சிறிய கிடங்கில் எளிமையாகத் தொடங்கிய பாலர்மலர் தமிழ் பள்ளி, இன்று பதினொரு கிளைகளுடன், ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தமிழமுது ஊட்டும் பெரும் ஆலமரமாகத் தழைத்து நிற்பது அளவற்ற மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது. இது ஒரு பள்ளியின் வளர்ச்சி மட்டுமன்று; புலம்பெயர் மண்ணில் தமிழ் வேரூன்றி, தலைமுறைகள் தோறும் தழைத்தோங்குவதற்கான நம்பிக்கையின் அடையாளம்.

"மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்றொரு பேதை உரைத்த சொல்லைக் கேட்டு உள்ளம் பதறி, "நெஞ்சு பொறுக்குதிலையே !" எனச் சீறிய மகாகவி பாரதியின் உணர்வை நம் நெஞ்சில் ஏந்தி, தமிழைக் காக்கவும் வளர்க்கவும் நாம் உறுதியேற்க வேண்டும். ஏழ்கடல் கடந்தாலும், தன் இனிய இசையாலும், செம்மையான இலக்கிய வளத்தாலும், காலத்தை வென்று நிற்கும் ஆற்றலாலும் தமிழ் என்றும் வாழும்; தலைமுறைகள் தோறும் தன் புகழை உலகெங்கும் பரப்பும்.

அந்தத் தமிழின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றும் பாலர்மலர் தமிழ் பள்ளி, மேலும் பல கிளைகளாக விரிந்து, இன்னும் பல ஆயிரம் இளந்தளிர்களுக்குத் தமிழின் இனிமையையும், அதன் இலக்கியச் செழுமையையும், பண்பாட்டுப் பெருமையையும் ஊட்டிட வேண்டும். தமிழ் கற்கும் ஒவ்வொரு குழந்தையின் நாவிலும் தமிழின் இனிமை தவழட்டும்; நெஞ்சில் தமிழ்ப்பற்று மலரட்டும்; வாழ்வில் தமிழர் மரபும் மாண்பும் நிலைத்திடட்டும்.

இப்பள்ளியின் வளர்ச்சிக்காகத் தங்கள் நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணிக்கும் தன்னார்வலர்களுக்கும், அறிவொளி ஏற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கும், துணைநின்று ஊக்கமளிக்கும் பெற்றோர்களுக்கும், ஆர்வத்துடன் தமிழைக் கற்று வரும் அன்பு மாணவச் செல்வங்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியையும் மனம் நிறைந்த வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.

பாலர்மலர் தமிழ் பள்ளியின்49ஆம் ஆண்டு விழா சிறப்புற நடைபெற வாழ்த்துகள்!

# வாழ்த்துமடல்

தமிழ் வளரட்டும்!
தமிழ்ப்பற்று தழைத்தோங்கட்டும்!
தமிழர் மரபும் மாண்பும் தலைமுறைகள் தோறும் நிலைத்திருக்கட்டும்!

வாழ்க தமிழ் ! வளர்க பாலர்மலர் தமிழ் பள்ளி !



அ.முத்துலிங்கம்
எழுத்தாளர்

# வாழ்த்துமடல்

பைந்தமிழ் வளர்க்கும் பாலர் மலர்த் தமிழ்க்கல்விக் கழகம்

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்பது தமிழ்க்களஞ்சியத்தின் அனுபவமொழி. தமிழ் ஆசிரியர்களாக இருப்பதை ஓர் ஏகாந்த அனுபவமாக மட்டுமின்றி, சமுதாயத்தொண்டாகவும் செய்து வருவது தான் நாம் அறிந்த வரலாறு. அதிலும் கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று குடியேறிய தமிழர்களின் வழித்தோன்றல்களுக்கு அன்னைத்தமிழைக் கற்பிக்கும் பணி, சிரம் மேல் கரம் குவித்துத் தொழ வேண்டிய நற்பணி. அப்பெரும்பணியில் தான், ஆஸ்திரேலியாவிலுள்ள பாலர் மலர் தமிழ்க் கல்விக்கழகம் தன்னை அர்ப்பணித்துச் செம்மையாகச் செயலாற்றி வருகின்றது.

கடந்த 49 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் தமிழ்ப்பணி ஆற்றி வரும் பாலர் மலர் தமிழ்ப்பள்ளி இன்னும் ஓராண்டில் பொன்விழாவில் காலடி பதிக்கவுள்ளது. அதாவது கணினியுகம் பரந்து விரிந்த காலத்தில் தான், பாலர் மலர்ப் பள்ளியும் கண்விழித்துள்ளது. இந்த ஐம்பதாண்டுகளில் உலகம் எத்தனையோ மாற்றங்களைக் கண்டு விட்டது. புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகமாகி விட்டன. இப்புதிய சூழலிலும் அரைநூற்றாண்டாய்த் தொய்வில்லாமல் அருந்தமிழைப் பாலர் மலர்த் தமிழ்ப்பள்ளி கற்பித்து வந்திருப்பதும், ஆயிரக்கணக்கான குழந்தைகளின் நாவிலும் மனங்களிலும் தமிழை நிலைநிறுத்தி இருப்பதும் பெரும் வரலாறு.

இம்மகத்தான சாதனையின் பின்னணியில் பாலர் மலர் தமிழ்க் கல்விக்கழகத்தின் தோற்றுநர்கள், ஆசிரியர்களின் அயராத் தொண்டுள்ளம், ஊக்கமும் உதவியும் நல்கிய தமிழ்ச்சான்றோர்கள், தன்னார்வலர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஆஸ்திரேலிய அரசு ஆகியோரின் ஈடிலாப்பணிகள் காலத்தின் பேரேட்டில் பொன்னெழுத்துக்களாய் மின்னும்.

இத்தொழில்நுட்பயுகத்தில் எண்ணற்ற வசதிகள் தோன்றிய வண்ணம் இருந்தாலும், வார இறுதிநாட்களில் ஆசிரியர்களின் இனிய செந்தமிழைக் கேட்கும் இன்பத்திற்கு ஈடேது? தமிழ் என்பது வெறும் மொழி மட்டுமன்று; அது வாழ்க்கைப்பாதைக்கான ஒரு விளக்கு. உடனிருந்தே நம்மைச் செதுக்கும் சிற்பி. தலைமுறைகளைக் காத்து நம் கரங்களில் ஒப்படைக்கும் தாய் என்று தமிழைக் கூறலாம். அத்தமிழ் கூறும் நல்வாழ்வைப் பயின்று மனிதர்களாகிய நாம் மாமனிதர்களாக உயர்வோம். பாலர் மலர் தமிழ்க் கல்விக்கழகம், வாழையடி வாழை என நூற்றாண்டுகளைக் கடந்து, ஆஸ்திரேலிய மண்ணில் இன்னமுதத் தமிழை வளர்த்திட நெஞ்சம் கனிந்த நல்வாழ்த்துகள். மானுடம் ஓங்கிட முத்தமிழ் வெல்க.

முனைவர் இரா.குறிஞ்சிவேந்தன்
பேராசிரியர் – தலைவர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்



பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# அரவணைப்பில்

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் ஆஷ்ஃபீல்டு பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

வணக்கம்.

பாலர் மலர் பள்ளிகளுக்குள் முதன்மைப் பள்ளியாகத் திகழும் ஆஷ்ஃபீல்ட் பாலர் மலர் பள்ளி, 1977 முதல் 2026 வரை, கடந்த 49 ஆண்டுகளாகத் தமிழ் பயிற்றுவிப்புச் சேலையைத் தொய்வின்றிச் சிறப்புடன் பணியாற்றி வருகிறது. இத்தனை ஆண்டுகளாக எத்தனையோ குழந்தைகள் இங்கே தமிழின் முதல் எழுத்தைக் கற்றுள்ளனர். இந்த நீண்ட, பெருமைமிகு பயணத்தின் தொடர்ச்சியாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" – மகாகவி பாரதியார்

கடல் கடந்த சிட்னி மண்ணில், ஒவ்வொரு சனிக்கிழமை மதியம் ஆஷ்ஃபீல்ட் பாலர் மலர் பள்ளியின் வகுப்பறைகளில் 'அ, ஆ' என்ற இனிய ஒலி எதிரொலிக்கிறது. அந்த ஒளியே எங்கள் பள்ளியின் இதயத்துடிப்பு. 2026-ஆம் ஆண்டில் அந்தத் துடிப்பு எவ்வளவு வலுவாக வளர்ந்தது என்பதை உங்களுடன் பெருமையுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

## 1. பள்ளியின் வளர்ச்சி

இவ்வாண்டு எங்கள் பள்ளியில் மொத்தம் 45 மாணவர்கள், இளம் பாலர் வகுப்பு (Pre-Kindy) முதல் 12-ஆம் ஆண்டு (Year 12) வரையிலான வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றனர். சிறிய விதையாகத் தொடங்கிய இந்தக் கிளை, இன்று நிழல் தரும் மரமாக வளர்ந்து வருகிறது.

## 2. சாதனைகள்

இவ்வாண்டு எங்கள் மாணவர்கள் அமைச்சர் விருதுகளில் (Minister Award) சிறப்பான இடங்களைப் பெற்றுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்:

சாத்விகா ஈச்சம்பாடி (Saathvika Eechampadi) : அமைச்சர் விருது (Minister Award), மூத்தோர் பிரிவில் (Senior) 'மிகவும் பாராட்டப்பட்டவர்' (Highly Commended) விருது பெற்றார். மேலும் வெல்லும் சொல் நிகழ்விலும் பல விவாதங்களில் பங்கு பெற்றுள்ளார்.

நிலன் சண்முகம் (Nilan Shanmugam) : அமைச்சர் விருது (Minister Award), இளையோர் பிரிவில் (Junior) 'தகுதி' (Merit) விருது பெற்றார்.

மேலும் நமது பாலர் மலர் போட்டிகளில் அனைத்து மாணவர்களும் பங்கு பெற்று சிறந்த தேர்ச்சிகளைப் பெற்றதுடன் காவ்யாஸ்ரீ சுரேஷ் அவர்கள் திருக்குறள் மனனப் போட்டியில் அனைத்துப் பள்ளி அளவில் மூன்றாம் இடமும், மா.தீ.ஷ. விஸ்வஜித் அவர்கள் அடிப்படை எழுத்தறிவுப் போட்டியில் அனைத்துப் பள்ளி அளவில் மூன்றாம் இடமும், மித்ராஸ்ரீ சுரேஷ், நிகழினி இளஞ்செழியன் மற்றும் தரேந்திரா சிவராமன் ஆகியோர் சிறப்பு பரிசுகளையும்,

கலாநிதி இளங்கோவேந்தனார் தேர்வில் குறிப்பாக வகுப்பு மூன்று, நான்கு மற்றும் உயர் வகுப்பு மாணவர்கள் தனி சிறப்பு விருதுகளையும்,

# பாலர் மலர் ஆஷ்ஃபீல்டு பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

ஆஸ்திரேலியா தமிழ் பட்டதாரிகள் நடத்தும் தமிழ் போட்டிகளில் காவ்யாஸ்ரீ சுரேஷ் அ பிரிவில் பல தேர்ச்சிகளையும், எழிலா இளஞ்செழியன் மற்றும் மித்ராஸ்ரீ சுரேஷ் ஆகியோர் அ பிரிவு தேர்ச்சிகளையும் பெற்று எமது பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

### 3. மாணவச் செல்வங்களின் ஈடுபாடு

தமிழ் மொழியின் மீது ஆழமான பிடிப்பை ஏற்படுத்தவும், மேடைப் பேச்சாற்றலை வளர்க்கவும் மாணவர்களுக்கென சிறப்பாகத் தமிழ்ப் பட்டிமன்றங்கள் மற்றும் விவாத மேடைகள் நடத்தப்பட்டன. இதில் இளையோர் (Junior) மற்றும் மூத்தோர் (Senior) பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தனித்தனி அணிகளாகப் பிரிந்து, சமூக மற்றும் கலாச்சாரப் பொருள்படும் தலைப்புகளில் அனல் பறக்கும் வாதங்களை முன்வைத்துத் தமது தமிழ் மொழி ஆளுமையை வெளிப்படுத்தினர்.

NSW சமூக மொழிப் பள்ளிகள் கூட்டமைப்பு (NSW Federation of Community Language Schools Inc.) நடத்தும் பன்மொழி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் நமது பள்ளியின் மாணவர்கள் கலந்துகொண்டு, நமது தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை மேடைகளில் வெளிப்படுத்தி வருகின்றனர்

வெளிநாட்டில் பிறந்து வளரும் குழந்தைகள் தமிழைப் படிப்பது சாதாரண விடயமல்ல. பள்ளி, விளையாட்டு, மற்ற வகுப்புகளுக்கு நடுவில் எங்கள் மாணவர்கள் ஆர்வத்துடன் வருகிறார்கள். நடனம், பாடல், பேச்சு, நாடகம், திருக்குறள் ஒப்புவித்தல், விவாதமேடைகள், மற்றும் இன்னிசை நிகழ்ச்சி ஆகியவற்றில் அவர்கள் காட்டிய உற்சாகம், தமிழ் இந்த மண்ணில் நிரந்தரமாக வாழும் என்ற நம்பிக்கையை எங்களுக்குத் தருகிறது.

### 4. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - திருக்குறள் (392)

எண்ணும் எழுத்தும் மனிதனுக்குக் கண்கள் என்கிறார் வள்ளுவர். அந்தக் கண்களைக் குழந்தைகளுக்குத் திறந்து வைப்பவர்கள் எங்கள் ஆசிரியர்கள். வேலை, குடும்பம் என்று பல பொறுப்புகளுக்கு நடுவில் நேரம் ஒதுக்கி, பாடங்களைத் தயாரித்து, பொறுமையுடனும் அன்புடனும் கற்பிக்கிறார்கள்.

### நீண்டகால சேவை விருது (Long Service Award)

இவ்வாண்டு எங்களுக்குப் பெருமை தரும் ஒரு சிறப்புத் தருணம் உண்டு. எமது பள்ளியில் நீண்ட கால சேவை விருதை பெரும் ஆசிரியர் திருமதி. அனு ரமேஷ் (Mrs.Anu Ramesh) அவர்கள் (B.Tech Textile Technology) நெசவு தொழில்நுட்பத்தில் இளங்கலை தொழில்நுட்பவியல் பட்டம் பெற்றவர். மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிக்கும் வல்லமை பெற்றவர்.

தமிழ் பாடங்களை ஆங்கில முறையில் எளிதாக்கி மாணவர்கள் விரும்பும் வகையில் நுட்பங்களுடன் கற்றுக்கொடுக்கும் திறமை பெற்றவர். மாணவர்களிடம் மிகவும் அன்பாகவும், நேர்த்தியாகவும்

# பாலர் மலர் ஆஷ்ஃபீல்டு பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

திறமையாகவும் வகுப்புகளை நடத்தக்கூடிய ஆற்றல் பெற்றவர். இவர் ஆஷ்ஃபீல்ட் பாலர் மலர் பள்ளியில் ஆசிரியர் பணியில் 5 ஆண்டுகளை நிறைவு செய்து விருது பெருவதில் எங்கள் பள்ளி பெரு மகிழ்ச்சி அடைந்து நெஞ்சார பாராட்டி வாழ்த்துகிறது.

### 5. பெற்றோர் தன்னார்வலர்களின் பங்களிப்பு

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" – திருக்குறள் (86)

வந்த விருந்தினரைப் பேணி, வரப்போகும் விருந்தினருக்காகக் காத்திருப்பவர் வானுலகத்தவர்க்கும் நல்ல விருந்தினர் என்கிறது குறள். எங்கள் பெற்றோர் தன்னார்வலர்கள் அதையே செய்து காட்டுகிறார்கள். பதிவு, நிதி, நிகழ்வு ஏற்பாடுகள் போன்ற நிர்வாகப் பணிகளை அவர்கள் பொறுப்புடன் கவனிக்கிறார்கள். நிகழ்ச்சிகளில் உணவும் உபசரிப்பும் வழங்கி, அனைத்து மாணவர்களையும் குடும்பத்தினராகக் கவனித்துக்கொள்கிறார்கள். இவர்களின் தன்னலமற்ற உழைப்பே இந்தக் கிளையைத் தொடர்ந்து நடத்திச் செல்கிறது.

### 6. எதிர்காலத் திட்டங்கள்

2027-ஆம் ஆண்டில் புதிய வகுப்புகள் / மாணவர் எண்ணிக்கை இலக்கு / புதிய நிகழ்வுகள் / ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றைச் செய்ய விரும்புகிறோம். இதற்கு ஆஷ்ஃபீல்ட் பள்ளியின் பெற்றோர்கள், தன்னார்வலர்களுடைய ஆதரவும் வழிகாட்டுதலும் இன்றியமையாதவை.

### நன்றியுரை

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் எல்லோருக்கும் என் மனமார்ந்த நன்றி. உங்கள் அனைவரின் கூட்டு முயற்சியால்தான் ஆஷ்ஃபீல்ட் கிளை தமிழை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்கிறது.

ஆஷ்ஃபீல்ட் பாலர் மலர் பள்ளி (Ashfield Balar Malar Tamil School) சிறப்பான முறையில் இயங்குவதற்குத் தொடர்ச்சியாகத் தங்களது பள்ளியின் வளாக வசதிகளை வழங்கி வரும் Ashfield Boys High School முதல்வர் திரு. ட்வெயின் ஹாப்வுட் (Dwayne Hopwood) அவர்களுக்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் எங்களது உளமார்ந்த நன்றிகளைத் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் வாழ்க! தமிழ் வளர்க!
நன்றி,

நெல்லையப்பன் சீதாராமன்



# Long Service Teachers Award

**Mrs. Anu Ramesh**

Anu Ramesh holds a Bachelor of Technology (B.Tech.) degree in Textile Technology from Anna University and moved to Australia with her family in 2020. She currently works as a Garment Technician at CAMILLA Australia, where she applies her knowledge and expertise in the textile and fashion industry. Alongside her professional career, she has always had a keen interest in teaching children and supporting their learning and development. Her passion for community service began in her hometown of Nagercoil, where she volunteered at Malar Nilayam Balar Malar, supporting children through learning and educational activities.

After moving to Australia, her interest in education and commitment to preserving the Tamil language inspired her to volunteer as a Tamil teacher at Ashfield Balar Malar School. Over the past five years, she has dedicated her time and effort to helping young learners develop their Tamil language skills. She is particularly passionate about supporting children who begin learning Tamil at a later stage, helping them bridge learning gaps, build confidence, and develop a strong foundation in the language.

Believing that every child can learn with the right encouragement and guidance, Anu strives to make learning a positive and engaging experience. She is committed to continuously improving her teaching methods and has participated in professional development opportunities, including a Masterclass conducted by Professor Emerita Beniko Mason of Shitennoji University Junior College, Japan, and a course on Learning Languages Through Games conducted by project officer Enaám Darido.

Through her dedication, patience, and willingness to serve, Anu continues to nurture a love for the Tamil language among the younger generation. Her five years of volunteer service reflect her commitment to education, community service, and the preservation of Tamil language and heritage for future generations.



# Long Service Teachers Award

**திருமதி. அனு ரமேஷ்**

அனு ரமேஷ் அண்ணா பல்கலைக்கழகத்தில் நெசவு தொழில்நுட்பத்தில் (Textile Technology) இளங்கலை தொழில்நுட்பவியல் (B.Tech)பட்டம் பெற்றவர். அவர் தனது குடும்பத்துடன் 2020-ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்தார். அவர் தற்போது CAMILLA Australia நிறுவனத்தில் ஆடை தொழில்நுட்ப வல்லுநராகப் (Garment Technician) பணிபுரிந்து வருகிறார்; அங்கு அவர் தனது அறிவு மற்றும் நிபுணத்துவத்தைத் ஜவுளி மற்றும் பேஷன் துறையில் பயன்படுத்தி வருகிறார். தனது தொழில்முறை வாழ்க்கையுடன் சேர்த்து, குழந்தைகளுக்குக் கற்பிப்பதிலும் அவர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சியை ஆதரிப்பதிலும் அவர் எப்போதும் தீவிர ஆர்வம் கொண்டுள்ளார். அவரது சொந்த ஊரான நாகர்கோவிலில் மலர் நிலையம் பாலர் மலரில் தன்னார்வலராகப் பணிபுரிந்து, கற்றல் மற்றும் கல்வி நடவடிக்கைகள் மூலம் குழந்தைகளுக்கு ஆதரவளித்தபோது சமுதாயச் சேவை மீதான அவரது ஆர்வம் தொடங்கியது.

ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்த பிறகு, கல்வி மீதான அவரது ஆர்வமும் தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியும் அவரை ஆஷ்ஃபீல்ட் பாலர் மலர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகத் தன்னார்வத் தொண்டு செய்யத் தூண்டின. கடந்த ஐந்து ஆண்டுகளாக, இளம் கற்பவர்களுக்கு அவர்களின் தமிழ் மொழித் திறன்களை வளர்க்க உதவ அவர் தனது நேரத்தையும் முயற்சியையும் அர்ப்பணித்துள்ளார். பிற்காலத்தில் தமிழ் கற்கத் தொடங்கும் குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதில் அவர் குறிப்பாக ஆர்வம் கொண்டுள்ளவர்; அவர்கள் கற்றலில் உள்ள இடைவெளிகளைக் குறைக்க, நம்பிக்கையை வளர்க்க மற்றும் மொழியில் வலுவான அடிப்படையை உருவாக்க உதவுகிறார்.

சரியான ஊக்கமும் வழிகாட்டுதலும் இருந்தால் ஒவ்வொரு குழந்தையும் கற்க முடியும் என்று நம்பும் அனு, கற்றலை ஒரு நேர்மறையான மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய அனுபவமாக மாற்ற முயற்சிக்கிறார். அவர் தனது கற்பித்தல் முறைகளைத் தொடர்ந்து மேம்படுத்த உறுதிபூண்டுள்ளார். மேலும், ஜப்பான் சிட்டென்னோஜி பல்கலைக்கழக ஜூனியர் கல்லூரியின் கௌரவப் பேராசிரியரான பெனிகோ மாசன் (Beniko Mason) அவர்கள் நடத்திய மாஸ்டர்கிளாஸ் மற்றும் திட்ட அதிகாரி இனாம் தாரிடோ (Enaám Darido) நடத்திய 'விளையாட்டுகள் மூலம் மொழிகளைக் கற்றல்' (Learning Languages Through Games) தொடர்பான படிப்பு உள்ளிட்ட தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளில் அவர் பங்கேற்றுள்ளார்.

அவரது அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் சேவை மனப்பான்மை மூலம், இளம் தலைமுறையினர் மத்தியில் தமிழ் மொழியின் மீதுள்ள பற்றை அனு தொடர்ந்து வளர்த்து வருகிறார். அவரது ஐந்து வருட தன்னார்வத் சேவை, கல்வி, சமூக சேவை மற்றும் வருங்கால சந்ததியினருக்காகத் தமிழ் மொழி மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான அவரது அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

# SCHOOL COMMITTEES - 2026

## Ashfield ஆஷ்ஃபீல்டு

| Committee/Role | Member's Name | பணிக்குழு | பெயர் |
|---|---|---|---|
| President | Mr. Nellaiappan Seetharaman | தலைவர் | திரு . நெல்லையப்பன் சீதாராமன் |
| Vice President | Mr. Dhilipraj Srinivasan | துணைத்தலைவர் | திரு. திலிப்ராஜ் ஸ்ரீநிவாசன் |
| Secretary | Mr. Sreejith Hariharan | செயலாளர் | திரு. ஸ்ரீஜித் ஹரிஹரன் |
| Joint Secretary | Mr. Balaji Shanmugam | இணை செயலாளர் | திரு. பாலாஜி சண்முகம் |
| Treasurer | Mr. Ramesh Padmanabha Pillai | பொருளாளர் | திரு. ரமேஷ் பத்மநாபபிள்ளை |
| Joint Tresurer | Mr. Sivaraman Purushothuman | இணைப்பொருளாளர் | திரு. சிவராமன் புருஷோத்தமன் |
| Principal | Mr. Gajendran Nagooran | அதிபர் | திரு. கஜேந்திரன் நாகூரான் |
| IT Advisor | Mr. Dhamodaran Ganesan | தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் | திரு. தாமோதரன் கணேசன் |

# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









இயற்கையின் மௌன மொழி

நாளை நேரம் மிகவும் அழகாக இருக்கிறது.
சூரியன் வானத்தில்
ஒரு தங்க விளக்கு போல இருக்கிறான்.
அவன் ஒளி மெதுவாக
மலர்களை எழுப்புகிறது.

புல்கள் அழகாக மலரும்
அலை சிரிப்பது போல
காலைக் தெரிகிறது.

மரங்கள் காற்றுடன் மெதுவாக முறுமுறுக்கின்
இலைகள் காற்றில் நடனம் ஆடுகின்றன
அலை மகிழ்ச்சியாக இருப்பது போல
தொன்றுகிறது.

பறவைகள் வானத்தில் பறந்து
அழகான பாடல்களைப் பாடுகின்றன
குளிரான காற்று
என் முகத்தை மென்மையாகத் தொடுகிறது.
அந்த நேரத்தில்
என் மனம் அமைதியாகிறது.

மாலை நேரத்தில்
வானம் பல நிறங்களில் மாறுகிறது.
சூரியன் மறையும் போது
வானம் ஒரு வண்ணச்சித்திரமான ஓவியம் போல
இருக்கிறது.
மேகங்கள் பெண்மையான புல்கள் போல
வானத்தில் மெதுவாக நகர்கின்றன.

இரவில் நிலவு ஒரு வெள்ளி கிண்ணம் போல
பிரகாசிக்கிறது.
மின்மினிகள் சிறிய விளக்குகள் போல
வானத்தில் மின்னுகின்றன.

மௌன மொழி

இந்த அழகான தருணி ரசிக்கும் போது
நான் என்ன நினைக்கிறேன்.

உன் சிரிப்பு
ஒரு அழகான மலரைப் போல இருக்கிறது.
உன் விழிகள்
அமைதியான கடல் போல இருக்கின்றன.

உன் குரல்
மென்மையான வார்த்தைகள் போல இருக்கிறது.
நீ என் பக்கத்தில் இருக்கும் போது
என் மனம் அமைதியாகிறது.

நம் நட்பும்
ஒரு சிறிய தாவரம் வளரும் போல.
அது ஒவ்வொரு நாளும் மெதுவாக
வளர்கிறது.
அதன் இதழ்கள் அது மெதுவாக மலர்கிறது.

மரங்கள் குறிய ஒலியில் பாடுவது போல
நம் இளமையும் இப்படியே நாளும்
மகிழ்ச்சியும் வளரட்டும்.

காற்றும் மழையும் மாறினாலும்
அது என்றும் அழகாக
இருக்க வேண்டும்.

— கார்த்திகா நேரு வளை, வகுப்பு 7



# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

**தகவல் பெருக்கம் நம் வாழ்க்கையை மேம்படுத்துகிறதா, சீரழிக்கிறதா?**

பண்டையக் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை தொழில்நுட்பம் வளர்ந்து வருகிறது. அப்பொழுது மக்கள் தொழில்நுட்பம் இலலாமல் நேரடியாகவே சந்தித்து தகவலை உரையாடித் தெரிந்துக் கொள்வார்கள். ஆனால் இன்றைய எண்ணிம உலகில் ஏற்பட்டுள்ள இணைய வளர்ச்சியினால் மக்கள் புலனம், டவரி, முகநூல் போன்ற சமூக ஊடகங்களை அதிகமாகப் பயன்படுத்திச் செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். ஆகவே, கட்டுக்கடங்காத தகவல்கள் இணையத்தில் வெள்ளம் போல் பெருகிவருகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சியில் மக்கள் அதிகமாக ஈடுபடுவது ஒரு நல்ல செயலாக இருந்தாலும் இந்த அதிவேகத் தகவல் பரட்சியினால் கவனச் சிதறல், நேரவீயம் போன்ற பெரிய பிரச்சினைகளையும் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. இப்போது பெருகி வரும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டால் கைப்பேசி, செயலிகள், வலைவொளி குறும்படங்கள், இணைய விளையாட்டுக்கள் என்று சிறுவர்கள் அதிக நேரத்தை இணையத்தில் செலவிடுகிறார்கள். பொய்யான தகவல்கள் மற்றும் மெயகிகர் நண்பர்களுடன் மனிக்கணக்கான நேரங்களை ஆர்வத்தோடு செலவிடும் போது நேரம் வழிவதை மறக்கிறார்கள், உண்மை எது, வதந்தி எது என்று முழப்மடைகிறார்கள். இதனால் பள்ளிக்குத் தாமதமாக வருகிறார்கள் மற்றும் வீட்டுப் பாடங்களை செய்யாமல் விடுகிறார்கள். எல்லையற்றத் தகவல் பெருக்கம் இளைஞர்கள் வாழ்வியலும் சமூகத்திலும் சிந்தனைச் சிதறலையும் கவனக்குவிப்புக் குறைபாட்டையும் அதிகரித்து ஒருவரின் தினசரி வேலைகளை நேரத்திற்குள் முடிக்க ஒரு தடையாகவே இருக்கிறது.

ஆனால் இத்தகைய சமூக ஊடக, இணைய வளர்ச்சியினால், புதிய செய்திகள், சேவைகள் மற்றும் வசதி வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் நமக்கு கலமாகத் தெரிய வருகின்றன. வீட்டிலிருந்த படியே அமேசான் போன்ற நிறுவனங்கள் மூலம் தேவையானப் பொருட்களை வாங்கலாம், போக்குவரத்து வழித்தடங்களையும் உடனுக்குடன் அவற்றின் சேவைகளையும் பார்க்கலாம். இது மட்டுமிலலாமல் மற்ற கலாசாரங்களைப் பற்றிய செய்திகளைப் பார்த்து கற்றுக் கொள்ளலாம். உதாரணமாக சீனப்புத்தாண்டு திருவிழா கொண்டாட்டம் மற்றும் அவர்களின் கலாச்சாரம் வரலாறு பற்றித் தெரிந்துக் கொள்ளலாம். உலகம் முழுதும் மக்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால், ஒரு சாதாரண மனிதனின் சிறிய முயற்சிகளும் சிந்தனை ஆக்கங்களும் ஒரு சில நிமிடங்களில் மக்களிடையே பிரபலமாகத் தகவல் பெருக்கம் உதவுகிறது. கொரியா நாட்டின் "கங்னம் ஸ்டைல்" என்ற பாட்டை இப்பொழுது நிறைய மக்கள் அறிந்துள்ளார்கள். ஒரு தனிமனிதனின் திறமையும், பெருமையும் சாதனையும் உலகிற்குத் தெரிய வருகிறது. ஆகவே, தகவல் பெருக்கம் விரல் நுனியில் உலக அறிவைப் பெரிய பெரிதும் உதவுகிறது

இந்தக் காலத்தில், தகவல் பெருக்கம் என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். ஆனால் மக்கள் சிந்திக்க வேண்டும், எது தப்பு எது சரி என்று ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற திருக்குறளுக்கேற்ப, எந்த கருத்தை எவர் சொன்னாலும், உண்மையை ஆராய்ந்து அறிவதே உண்மையான அறிவாகும். தகவல் பெருக்கம், நம் வாழ்க்கையை சிறப்புற செல்வதும் சீரழிப்பதும் நாம் அவற்றை பகுத்தறிந்து பயன்படுத்தும் விதத்தை பொறுத்தது. "ஆயிரம் தகவல்கள் நம்மைச் சூழ்ந்திருந்தாலும், நம் சிந்தனையே நம்மை வழிநடத்தும் ஒளியாகும்."

**எழுதியவர்: கார்த்திக்வேலன் ஜெகநாதன் வகுப்பு 11 ஆஷ்ஃபீல்ட் பாலர்மலர்**








# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



சீனிவாச இராமானுஜன்

சீனிவாச இராமானுஜன் 22 டிசம்பர் 1887 ஆம் ஆண்டு, ஈரோட்டிலிருந்து அருகே உள்ள கிராமத்தில், ஏழை குடும்பத்தில் பிறந்தார். அவர் குணித்தில் ஆர்வமாக இருந்தார். பின்பு பள்ளியை தாண்டி தனது மிகவும் தீர்வைகளிலாக இருந்தார். 12 வயதில் இருந்தபோதே குணிக்க தொடங்கினை கணக்கிட்டிருந்தார். பாடசாலையில் அவரால் குணிக்கை எப்படியாக செய்தார். அவருடைய 16வது வயதில் குணித ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அவர் பல சூத்திரங்களை தானாகவே படித்தார், பல குணிதத் தொடர்களை திருப்பியும் கண்டுபிடித்தார். 1913 ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த புகழ்பெற்ற பிரிட்டிஷ் குணிதவியலாளர் ஜி.எச் ஹார்டுக்கு தோராயமாக 120 பிரதிகளுடன் குணித தொடர்களை அடுத்து அனுப்பினார். அந்த குணிதத் தொடர்கள் பேராசிரியர் ஹார்டியை பிரமிப்பில் ஆழ்த்தின. இதனால் இராமானுஜரை கேம்பிரிட்ஜுக்கு அழைத்தார். இங்கேயே சேர்ந்து ஆராய்ச்சி செய்தனர். பி ஆராய்ச்சிகள் இராமானுஜன் செய்தார். சில கண்டுபிடிப்புகள், அதிலேயே தணிணியாகும் நிற்கிற ஆழியவில்லை. இவர் உலகத் தியாக வரலாற்றில் ஒப்பற்ற குணித மேதை ஆனார். இவர் 1919 ஆம் ஆண்டில் இறந்தார்.

தினவரித்
6ஆம் வகுப்பு ஆசிரியர் பாலர்மலர்




## கரும்பலகைக்கு அப்பால்...

இன்றைய வகுப்பறையில் இணையவழிக் கற்றல் ஏன் இடம்பெற வேண்டும்? பாரம்பரியமாக, கல்வி என்பது ஒரு மர மேசையில் அமர்ந்து, குறிப்பேட்டைத் திறந்து வைத்துக்கொண்டு, வகுப்பின் முன்புறத்தில் இருக்கும் ஆசிரியர் சொல்வதைக் கேட்பதாகவே இருந்துவந்துள்ளது. நம் அடிப்படைக் கல்விக்கும் ஒருவருடன் ஒருவர் பழகும் முறைக்கும் பாரம்பரிய வகுப்பறை அடித்தளமாக இருந்தாலும், அந்த நான்கு சுவர்களுக்கு வெளியே உள்ள உலகம் வேகமாக மாறி வருகிறது. மாணவர்களை நவீன வாழ்க்கைக்கு உண்மையாகத் தயார்படுத்த, பள்ளி மணி அடித்தவுடன் கற்றல் நின்றுவிடக் கூடாது.

இணையவழிக் கல்வியை பாரம்பரிய வகுப்பறை போதனையுடன் இணைப்பது என்பது இனி ஒரு கூடுதல் நன்மை மட்டுமல்ல—அது இன்றைய மாணவர்களுக்கு இன்றியமையாததாகும். வகுப்பறைக் கற்பித்தல், தொழில்நுட்பத்தால் ஒருபோதும் ஈடுசெய்ய முடியாத பலன்களை வழங்குகிறது. நேருக்கு நேர் விவாதம், கூட்டுக்குழுப் பணிகள், செய்முறைப் பரிசோதனைகள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து நேரடி வழிகாட்டுதல் என்று பலவிதத்தில் உதவியாகவிருப்பினும், ஒரு பாரம்பரிய வகுப்பறை முப்பது வெவ்வேறு மனங்களுக்குள் ஒரே வேகத்தில் செயல்படுகிறது. இங்குதான் எண்ணிமத் தளங்கள் கைகொடுக்கின்றன. இணையவழிக் கருவிகள் சிக்கலான கருத்துக்களை மாணவர்கள் தங்கள் சொந்த வேகத்தில் மீள்பார்வை செய்யவும், விரிவாகக் செயல்பாடுகளில் ஈடுபடவும், அல்லது தேர்வுகளுக்குத் தயாராகும் போது பாடங்களை மீண்டும் பார்க்கவும் அனுமதிக்கின்றன. இது செயலற்ற முறையில் கேட்பதை, சுறுசுறுப்பான, தனிப்பயனாக்கப்பட்ட கற்றலாக மாற்றுகிறது.

படிக்கும் பழக்கங்களைத் தனிப்பயனாக்குவதைத் தான்டி, எண்ணிம கற்றலை (digital learning) ஒருங்கிணைப்பது அத்தியாவசியமான வாழ்க்கை திறன்களை வளர்க்கிறது. உயர்கல்வி மற்றும் நவீனப் பணியிடங்களில் வெற்றி என்பது டிஜிட்டல் கல்வியறிவு, நேர மேலாண்மை மற்றும் சுய வழிகாட்டுதல் ஆராய்ச்சி ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இணையதளங்களைப் பயன்படுத்துதல், வலை ஆதாரங்களை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்தல் மற்றும் டிஜிட்டல் முறையில் பணிகளைச் சமர்ப்பித்தல் ஆகியவை, மாணவர்கள் பட்டம் பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தங்கள் நேரத்தை நிர்வகிக்கவும், சுதந்திரமாகப் பணியாற்றவும் கற்றுக்கொடுக்கின்றன.

இணையவழிக் கல்வி உலகளாவிய அறிவுப் பொக்கிஷத்திற்கான ஒரு சாளரத்தைத் திறக்கிறது. ஊடாடும் உருவகப்படுத்துதல்கள், மெய்நிகர் அருங்காட்சியகச் சுற்றுப்பயணங்கள் மற்றும் உலகளாவிய கற்றல் சமூகங்கள் ஆகியவை எந்தப் பாடப்புத்தகமும் ஈடு செய்ய முடியாத ஆற்றல்மிக்க அனுபவங்களை வழங்குகின்றன. காகிதத்தில் அருவமாகத் தோன்றும் ஒரு அறிவியல் கருத்து, ஊடாடும் நிகழ்நிலை மாதிரி(interactive online model)மூலம் உயிர்ப்பிக்கப்படுகிறது; ஒரு வரலாற்றுத் தலைப்பு எண்ணிம காப்பகங்கள்(digital archives)மூலம் ஆராயப்படும்போது உருமாற்றமடைகிறது.

ஆகவே, பாரம்பரிய வகுப்பறையை இணையவழி சாளரத்துடன் இணைத்து வாழ்க்கைத் திறன்களை வளர்த்து ஆற்றல்மிக்க அனுபங்களைப் பெறுவோம்.

**எழுதியவர்: ஸ்ரீவர்ஷன் செந்தில்குமார் வகுப்பு 12 ஆஷ்பீல்ட் பாலர்மலர்**



# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்











# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

# ஆஷ்ஃபீல்டு பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



# Ashfield Pre Kindy - Kindy



# Ashfield Year 1



# Ashfield Year 2



# Ashfield Year 3



# Ashfield Year 4



# Ashfield Year 6



## Ashfield Year 8



## Ashfield Year 10



# Ashfield Year 11 & 12



# Ashfield Bridging Class



# Ashfield Teachers



# Ashfield Admin Team



# Ashfield School



## எமது ஆசிரிய பெருமக்கள்

| Ashfield | ஆஷ்ஃபீல்டு |
|---|---|
| Mrs. Nalinakumari Shanmugasundaram | திருமதி. நளினகுமாரி சண்முகசுந்தரம் |
| Mrs. Janaki Karthik | திருமதி. ஜானகி கார்த்திக் |
| Mrs. Anu Ramesh | திருமதி. அனு ரமேஷ் |
| Mrs. Sangeetha Gopalan | திருமதி. சங்கீதா கோபாலன் |
| Mrs. Sharanya Kannan | திருமதி. சரண்யா கண்ணன் |
| Mrs. Sinduja Mariyappan | திருமதி. சிந்துஜா மாரியப்பன் |
| Mrs. Valarmathi Synthia Robinson | திருமதி. வளர்மதி சிந்தியா ராபின்சன் |
| Miss. Kirthika Nadimuthu | செல்வி. கிர்த்திகா நாடிமுத்து |
| Miss. Lumiya Gajendran | செல்வி. லூமியா கஜேந்திரன் |
| Mr. Senthil Kumar Anbunathan | திரு. செந்தில் குமார் அன்புநாதன் |
| Mr. Elanchezhiyan Murugesan | திரு. இளஞ்செழியன் முருகேசன் |
| Mr. Gajendran Nagooran | திரு. கஜேந்திரன் நாகூரான் |

## பாலர் மலர் ஆஷ்ஃபீல்டு தமிழ்ப் பள்ளி முடிவுகள் - 2026

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்பு விருது |
|---|---|---|---|---|
| **முன் பள்ளி வகுப்பு ஆசிரியர்: திருமதி. சரண்யா கண்ணன்** | | | | |
| மென்மை சண்முகம் | மித்ராஸ்ரீ சுரேஷ் | | | |
| விவிக்ஷா, மாணிக்கா தீபக்குமார் ஷர்மிளா | எழிலா இளஞ்செழியன் | | | |
| | தீரன் திலீப்ராஜ் | | | |
| | ரசிகா பிரதீப்ராம் | | | |
| | ஆதிரா சிவராமன் | | | |
| | மேதினி ராஜன் | | | |
| **பாலர் வகுப்பு ஆசிரியர்: திருமதி. சரண்யா கண்ணன்** | | | | |
| சுகரூபிணி ஞானமணிகண்டன் | லவினேஷ்தரன் முரளிதரன் | | | |
| நிகழினி இளஞ்செழியன் | | | | |
| ஸ்கார்லெட் காயத்திரி ஸ்கோபி | | | | |
| **ஒன்றாம் வகுப்பு ஆசிரியர்: திருமதி. வளர்மதி சிந்தியா இராபின்சன்** | | | | |
| தரேந்திரா சிவராமன் | ப்ரிஷா ப்ரதீப்ராம் | சஞ்சித் சபரிஷ் | | |
| | நியோ க்ரீட் ரிட்சி | | | |
| **இரண்டாம் வகுப்பு ஆசிரியர்: திரு. இளஞ்செழியன் முருகேசன்** | | | | |
| | சுஜாலெட்சுமி பிரகாஷ் | சூர்யாவிக்னேஸ்வரா பிரகாஷ் | | |
| | | காவியாகீர்த்தனா பிரகாஷ் | | |
| **மூன்றாம் வகுப்பு ஆசிரியர்: திரு. கஜேந்திரன் நாகூரான்** | | | | |
| ஷெரில் ஹோப் சாலமன் | | | | |
| ஆத்யா வினோத் | | | | |
| காவ்யஸ்ரீ சுரேஷ் | | | | |
| **மூன்றாம் வகுப்பு (இணைப்பு)ஆசிரியர்: திருமதி. அனு ரமேஷ்** | | | | |
| தனுஷா தாமோதரன் | மித்ரா ஸ்ரீஜித் | | | |
| **நான்காம் வகுப்பு ஆசிரியர்: திருமதி. சங்கீதா கோபாலன்** | | | | |
| அனன்யா ரமேஷ் | நவிஷ்கா சான்வி விக்னேஸ்வரன் | | | |
| | சாத்விகா திலிப்ராஜ் | | | |
| | ஸ்ரீவருண் செந்தில்குமார் | | | |
| **நான்காம் வகுப்பு ஆசிரியர்(இணைப்பு): திரு. கஜேந்திரன் நாகூரான்** | | | | |
| நேஷ்வின் சதீஷ் | | | | |
| **ஐந்தாம் வகுப்பு: ஆசிரியர்: திரு. செந்தில்குமார் அன்புநாதன்** | | | | |
| | ஸ்ரீரிஷா நெல்லையப்பன் | | | |
| | நிலன் சண்முகம் | | | |
| **ஆறாம் வகுப்பு ஆசிரியர்: செல்வி. கிர்திகா நாடிமுத்து** | | | | |
| விஸ்வஜித் மாணிக்கா தீபக்குமார் ஷர்மிளா | அச்சுதன் கேசவன் | | | |
| | சில்வியா க்ரேஸ்லின் சாலமன் | | | |
| **எட்டாம் வகுப்பு ஆசிரியர்: செல்வி. லூமியா கஜேந்திரன்** | | | | |
| | | ஹாசிதா சுதாகர் | | |
| AVANTIKA BARATH | ஆவன்டிக பரத் | KG | High Achievement | சிறப்பு விருது |
| ARYAWARAN SIVAKUMARAN | ஆர்யவரன் சிவகுமாரன் | KG | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| GRACIA WALTER | கிரேசியா வால்டர் | KG | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| KAVINILLA VIGNESH | கவிநிலா விக்னேஷ் | KG | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| KESHITHA BHARATH | கேஷித பாரத் | KG | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| PALANI HEBERT | பழனி ஹெபர்ட் | KG | Sound Achievement | பாராட்டு விருது |
| NILAN RAJAGANAPATHY | நிலன் ராஜகநாபதி | KG | Sound Achievement | பாராட்டு விருது |
| RACHEL ANTON | ரேச்சல் அன்டன் | KG | High Achievement | சிறப்பு விருது |
| RINAAZ HUSSAIN | ரினாஸ் உசேன் | KG | High Achievement | சிறப்பு விருது |
| SAMRATH VETRIVENDAN | சம்ரத் வெற்றிவேந்தன் | KG | High Achievement | சிறப்பு விருது |
| SKYLA JOSEPH | ஸ்கைலா ஜோசப் | KG | High Achievement | சிறப்பு விருது |
| VIDHURAN KARUPPASAMY | விதுரன் கருப்பசாமி | KG | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ADRITHA MURALIDHARAN | அத்ரிதா முரளிதரன் | KG | Not Evaluated | மதிப்பிடப்படவில்லை |
| AADHAV SRI HARI | ஆதவ் ஸ்ரீ ஹரி | Smart Class | Sound Achievement | பாராட்டு விருது |
| ADITHYA KUMARAN SENTHILNATHAN | அதித்ய குமரன் செ | Smart Class | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ANANYA KARTHIK | அனன்யா கார்திக் | Smart Class | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ANSHI PRAKASH KUMAR | அன்ஷி பிரகாஷ் குமார் | Smart Class | High Achievement | சிறப்பு விருது |
| HASINI SATHYAN | ஹாசினி சத்யன் | Smart Class | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| MAYA SHIVARAJA | மாயா சிவராஜா | Smart Class | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| VISRHUTH MURALIDHARAN | விஷ்ருத் முரளிதரன் | Smart Class | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ANANYA SANKAR | அனன்யா சங்கர் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| AANIKA GOPAL | அனிகா யாஷினி கோபால் | Year 1 | High Achievement | சிறப்பு விருது |
| ADHYAN KARTHIK | ஆத்யன் கார்திக் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ANANYA VENKADESAPERUMAL | அனன்யா வெங்கடேசபெருமாள் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| AUDVIK ARUNKUMAR | ஆத்விக் அருண்குமார் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| AVIRA PRABU | அவிரா பிரபு | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| CHANDINI RAMKUMAR | சாந்தினி ராம்குமார் | Year 1 | Not Evaluated | மதிப்பிடப்படவில்லை |
| DHARSHAN RAMKUMAR | தர்ஷன் ராம்குமார் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| DHIYASHREE RAGUNATHAN | தியாஸ்ரீ ரகுநாதன் | Year 1 | High Achievement | சிறப்பு விருது |
| DHURUV NARESH | துருவ் நரேஷ் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| NILAN KAMAL | நிலன் கமல் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| REENU ARAVIND | ரீனு அரவிந்த் | Year 1 | High Achievement | சிறப்பு விருது |
| PRANESH SASIKUMAR | பிரனேஷ் சசிகுமார் | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| SUPRITHA RAMALINGAM PILLAI | சுப்ரிதா ராமலிங்கம் பிள்ளை | Year 1 | High Achievement | சிறப்பு விருது |
| VANISHAASAKTHI KRISHNAKUMAR | வனிஷாசக்தி | Year 1 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| AMELIA VIMALRAJ | அமீலியா விமல்ராஜ் | Year 2 | Not Evaluated | மதிப்பிடப்படவில்லை |
| RITHVIK SRIDHARAN | ரித்விக் ஸ்ரீகரன் | Year 2 | High Achievement | சிறப்பு விருது |
| SAHASRAN SIVAKUMAR | சஹஸ்ரன் சிவகுமார் | Year 2 | Limited Achievement | தகுதி விருது |

## பாலர் மலர் மார்ஸ்டன்பார்க் தமிழ்ப் பள்ளி முடிவுகள் - 2026

| Student Full Name in English | Student Full Name in Tamil | Class | Grading in English | Grading in Tamil |
|---|---|---|---|---|
| THANISHKA KARTHIKEYAN | தனிஷ்கா கார்த்திகேயன் | Year 2 | Not Evaluated | மதிப்பிடப்படவில்லை |
| YESHVANT GOPINATH | யஷ்வந்த் கோபிநாத் | Year 2 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| DEEKSHA DINESH | தீக்சா தினேஷ் | Year 3 | High Achievement | சிறப்பு விருது |
| HANUMIKA BABU | ஹனுமிகா பாபு | Year 3 | Sound Achievement | பாராட்டு விருது |
| HIRANSHREE MANOJ KUMAR | ஹிரன்ஷ்ரே மனோஜ் குமார் | Year 3 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| JOSHRA RAMESH | ஜோஷ்ரா ரமேஷ் | Year 3 | High Achievement | சிறப்பு விருது |
| KRISH CHIDAMBARAM VIJAYANAND | கிரிஷ் சிதம்பரம் விஜயானந்த் | Year 3 | High Achievement | சிறப்பு விருது |
| LISHARAV NARESH | லிஷரவ் நரேஷ் | Year 3 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| NISHA LENORE PAUL DURAI | நிஷா லெனோர் பால் துரை | Year 3 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| RISHVIN GIRIVASAN | ரிஷ்வின் கிரிவாசன் | Year 3 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| SHAYNA MITZI ANTONY | ஷய்னா மிட்சி | Year 3 | High Achievement | சிறப்பு விருது |
| TANISHKA SHIVAKUMAR | தணிஷ்கா சிவகுமார் | Year 3 | Sound Achievement | பாராட்டு விருது |
| ALAN VIMALRAJ | ஆலன் விமல்ராஜ் | Year 4 | Not Evaluated | மதிப்பிடப்படவில்லை |
| DHARSHVANTH GOPINATH | தர்ஷ்வந்த் கோபிநாத் | Year 4 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| DHEEKSHA SANKAR | தீக்ஷா சங்கர் | Year 4 | High Achievement | சிறப்பு விருது |
| PRANUSH VARUN | பிரனுஷ் வருண் | Year 4 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| PRARTHANA PRABHAKARAN | பிரார்தனா பிரபாகரன் | Year 4 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| RASWANTH BALRAJ SHIVAKUMAR | ரஸ்வந்த் பால்ராஜ் சிவகுமார் | Year 4 | High Achievement | சிறப்பு விருது |
| SARAH RAMESH | சாரா ரமேஷ் | Year 4 | High Achievement | சிறப்பு விருது |
| THIYANAA PRAVEENKUMAR EUREKA | தியானா பிரவீன்குமார் யுரேகா | Year 4 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| ARADHYA ARAVIND | ஆராத்யா அரவிந்த் | Year 5 | High Achievement | சிறப்பு விருது |
| ASHVITHAA SASIKUMAR | அஸ்வதா சசிகுமார் | Year 5 | High Achievement | சிறப்பு விருது |
| DASARATH VETRIVENDAN | தசரத் வெற்றிவேந்தன் | Year 5 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| DHANISHRAAM JEYAKUMAR | தனேஸ்ராம் ஜெயக்குமார் | Year 6 | High Achievement | சிறப்பு விருது |
| YOGESHWAR RAM BALAMURALI | யோகேஷ்வர் ராம் பாலமுரளி | Year 7 | High Achievement | சிறப்பு விருது |
| DHANYASRI LAKSHMI VINODH SHANKAR | தன்யஸ்ரீ லட்சுமி வினோத் சங்கர் | Year 8 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| SAJANI SIVAKUMAR | சஜனி சிவகுமார் | Year 8 | Outstanding Achievement | தனிச்சிறப்பு விருது |
| TANUSHRAAM JEYAKUMAR | தனுஸ்ராம் ஜெயக்குமார் | Year 8 | Sound Achievement | பாராட்டு விருது |

# Minister's Award Winners - 2026



தனுஷ்ராம் ஜெயக்குமார்
Commended
Senior



பிரகதி விஜய குமார்
Merit
Junior

# Balar Malar Tamil Competition Winners - 2026



கவிநிலா விக்னேஷ்
குழந்தைப் பாட்டுப்போட்டி-ஆ பிரிவு
சிறப்பு பரிசு



ஆத்விக் அருண்குமார்
பழமொழி-பொன் மொழிகள்-அ பிரிவு
சிறப்பு பரிசு



தர்ஷன் ராம்குமார்
பழமொழி-பொன் மொழிகள்-அ பிரிவு
சிறப்பு பரிசு



ஷ்யனா மிட்சி
திருக்குறள்-செய்யுள் மனனப்போட்டி-ஆ பிரிவு
சிறப்பு பரிசு



அனன்யா கார்த்திக்
கதை சொல்லும் போட்டி-அ பிரிவு
சிறப்பு பரிசு



ஆராத்யா அரவிந்த்
அழகப்படை எழுத்து அறிவும் போட்டி-அ பிரிவு
சிறப்பு பரிசு



தன்யஸ்ரீ லட்சுமி வினோத் சங்கர்
கட்டுரைப் போட்டி-ஆ பிரிவு
சிறப்பு பரிசு

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Aadhav Sri Hari
High Distinction



Adithyakumaran Senthilnathan
High Distinction



Ananya Karthik
High Distinction



Dharshvanth Gopinath
High Distinction



Maya Shivaraja
High Distinction



Prarthana Prabhakaran
High Distinction



Thiyanaa Praveenkumar Eureka
High Distinction



Dheeksha Sankar
High Distinction



Pranush Varun
High Distinction



Sajani Sivakumar
High Distinction



Dhanyasri Lakshmi Vinodh Shankar
High Distinction

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# மீண்டோ

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் மிண்டோ பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

**"திசை எட்டிலும் தமிழ் மொழி வாழ்க! தமிழினம் வளர்க! தமிழர் பண்பாடு மிளிர்க!."**

உலகின் எந்தத் திசையில் நாம் வாழ்ந்தாலும் நம் உள்ளங்களில் என்றும் உயிரோடு இருப்பது நம் தாய்மொழியும், அதன் வழி வந்த நம் பண்பாடும் மரபும் ஆகும். அந்தத் தமிழ்மொழியின் இனிமையையும் பெருமையையும் அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியில் பாலர்மலர் மிண்டோ பள்ளி தொடர்ந்து பயணித்து வருகிறது.

அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய தமிழ் உறவுகளே, பாலர்மலர் மிண்டோ பள்ளியின் சார்பில் உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாய்மொழியை வெறுமனே கற்றுக்கொடுப்பது மட்டுமல்ல; அதன் மீது அன்பையும், அதன் வரலாற்றின் மீது பெருமையையும், அதன் பண்பாட்டின் மீது பற்றையும் நம் இளைய தலைமுறையினரிடம் விதைப்பதே எமது பயணத்தின் நோக்கமாகும் அந்தப் பொறுப்பைத் தலைமுறையிலிருந்து தலைமுறைக்குக் கொண்டு செல்லும் பணியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தின் ஒவ்வொருவரும் ஏற்றிருக்கும் பங்கு அளப்பரியது.

2017ஆம் ஆண்டு வெறும் 21 மாணவர்களுடன் தொடங்கிய எங்கள் பாலர்மலர் மிண்டோ பள்ளியின் கல்விப் பயணம், இன்று பத்து ஆண்டுகால அர்ப்பணிப்பு, உழைப்பு மற்றும் வளர்ச்சிப் பாதையில், 2026ஆம் ஆண்டில் 105 மாணவர்களின் உற்சாகக் குரல்களோடும், அறிவின் ஒளியோடும். பெருமையுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இந்தப் பத்தாண்டுப் பயணம் என்பது எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சி மட்டுமல்ல; தமிழ் மொழி பண்பாடு மற்றும் கல்வியின் மீது நாம் கொண்டுள்ள ஆழமான பற்றின் அடையாளமாகும். தொடக்க நிலையான KG முதல் மேல்நிலை HSC வரை, மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒரு சிறப்பான கல்விக் கட்டமைப்பை உருவாக்கி, ஆண்டுதோறும் அதனைத் தொடர்ந்து மேம்படுத்தி வருவதில் எமது பள்ளி பெருமை கொள்கிறது.

இந்த வளர்ச்சிப் பயணத்தின் முதுகெலும்பாகத் திகழ்பவர் எமது முதல்வர் திருமதி ஹரிதா நடராஜன் அவர்களும், அவருடன் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் அனைத்து ஆசிரியர்களும் ஆவர். அவர்களின் அயராத உழைப்பு, பொறுப்புணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கான அக்கறை ஆகியவைதான் எமது பள்ளியின் பத்தாண்டு வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளன. அவர்களின் சேவை மற்றும் பங்களிப்பு எமது பள்ளியின் பெருமைக்குரிய அத்தியாயமாகும்.

மேலும், 2019ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து, எமது பள்ளி மாணவர்கள் மேல்நிலைத் தமிழ் HSC தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண்களை பெற்று, ஆண்டுதோறும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றனர் மாணவர்களின் திறமைகளை அடையாளம் கண்டு, அவர்களுக்கு முறையான வழிகாட்டுதலையும் சிறப்பான பயிற்சியையும் வழங்கி, அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த திருமதி ஹரிதா நடராஜன், திரு. அண்ணாமலை சுந்தரம் மற்றும் செல்வன். மகின் வேலுசாமி, செல்வி.

# பாலர் மலர் மிண்டோ பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

இலக்கியா முரளி மற்றும் அனைத்து துணை Hsc ஆசிரியர்களுக்கும் எமது பள்ளியின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்து ஆண்டுகள் வெற்றிப் பயணத்தில், அடுத்த தலைமுறையைத் தமிழோடு இணைக்கும் புதிய அத்தியாயம் இப்போது தொடங்குகிறது.

மிண்டோ பாலர்மலர் பள்ளி, அடுத்த தலைமுறை இளம் ஆசிரியர்களை கல்வித் தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்று வழிநடத்துவதற்குத் தயார்படுத்தி வருகிறது. அவர்களின் திறமைகள், ஆற்றல்கள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்து, எதிர்காலத்தில் பாலர்மலர் சமூகத்தின் வளர்ச்சிக்கும் தலைமைத்துவத்திற்கும் பங்களிக்கும் வகையில் வாய்ப்புகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகிறது.

''விதைத்த விதை முளைத்து, விருட்சமாகி பலருக்கும் நிழல் தருவது போல, இன்று நாம் அளிக்கும் கல்வியும் வழிகாட்டுதலும் நாளைய சாதனைகளாக மலர்கின்றன.''

அந்த வகையில், கடந்த கல்வியாண்டில் எமது பள்ளி மாணவிகள் செல்வி. ஓவியா சம்பந்தம், செல்வி. நிரஞ்சநி தனபால் & செல்வி. தன்யா முத்துசிகப்பி மேல்நிலைத் தமிழ் HSC தேர்வில் Band 6 பெற்று சிறப்பான சாதனையைப் படைத்துள்ளனர். அவர்களது விடாமுயற்சிக்கும், அர்ப்பணிப்பிற்கும், சிறப்பான கல்விச் சாதனைக்கும் எமது பள்ளியின் சார்பில் மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது இந்த வெற்றி, எமது பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்கும் ஒரு சிறப்பான தருணமாகும்.

எமது பள்ளியில் தமிழ் பயின்று HSC தேர்வில் Band 6 பெற்று இந்த ஆண்டு புதிதாக இளம் ஆசிரியையாக தொண்டாற்ற வந்திருக்கும் செல்வி, ஜெய்நீ ஜோனோ ஆல்வின் பிரபாகரதாஸ் க்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும் இவரின் தமிழ் ஆசிரியப்பணி சிறக்க எங்கள் வாழ்த்துக்கள்.

நமது மாணவர்கள் செய்த சிறந்த சில சாதனைகளை பெருமையுடன் பதிவு செய்கிறோம். நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு நடத்திய இளங்கோ வேந்தனார் நினைவுப் போட்டிகளில் வெற்றி பெற்று Distinction & High Distinction பெற்ற மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

அதேபோல், பாலர்மலர் நடத்தும் BMTC போட்டிகளில் வெற்றிபெற்ற வெண்பா பாலாஜி, எஸ்விதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம், சம்ஹிதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம், லக்ஷனா செந்தில்குமார், ஆகியோருக்கும் எங்கள் வாழ்த்துகள்.

ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் (ASOGT) நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்ற அனைவருக்கும் எங்கள் பாராட்டுகள் என்றென்றும் நிலைத்திருக்கின்றன.

இந்த ஆண்டு நமது மாணவர்களை பல்வேறு போட்டிகளுக்கு தயார் செய்து அவர்கள் வெற்றி வாகை

# பாலர் மலர் மிண்டோ பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

கூட உதவிய ஆசிரியர்கள் செல்வி.ஜெய்நீ ஜோனோ ஆல்வின் பிரபாகரதாஸ், திருமதி. ரமணிபாய் நாராயணசாமி, திருமதி. பாமாருக்மணி பாலசுப்பிரமணியன், திருமதி. சமீமா சோமனன், திருமதி. சரண்யா தேவி சத்தியமூர்த்தி, திருமதி. சங்கீதா தவேந்திரா, திருமதி. உஷா ராமச்சந்திரன், திருமதி கார்த்திகா பழனிசாமி மற்றும் பெற்றோர்கள் : திரு. தனபால் கணபதி, திரு. செந்தில்குமார். திருமதி. தீபா, திருமதி. வித்யா ஆகியோருக்கு எனது இதயத்தின் ஆழத்திலிருந்து மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சகச் சான்று பெற்ற அபிஷா வரதராசன் Highly Commended பெற்றிருப்பதை மகிழ்ச்சியுடன் கூறுகிறோம்.

எங்கள் மாணவர்களின் வெற்றிகளும், தமிழ்பற்றும் எங்கள் பள்ளியின் உயிரோட்டமாக இருந்து வருகின்றன. பெற்றோர்கள் தரும் ஊக்கமே எங்கள் வளர்ச்சிக்கான மூலாதாரம்.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி, Sarah Redfern High School, Minto Principal Mrs Lyndy Clowry மற்றும் Administrative Manager Mrs. Marissa De Visscher அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் வழங்கும் அருமையான ஆதரவே நம் நேருக்கு நேர் தமிழ் வகுப்புகளை வெற்றிகரமாக நடத்த உதவுகிறது.

இந்த ஆண்டிற்கான நிர்வாகக் குழு மற்றும் தன்னார்வலர்களின் தன்னலமற்ற சேவை பற்றிச் சொல்லாமல் இந்த அறிக்கையை நிறைவு செய்ய இயலாது. திரு. ரகுநாத் ராம்குமார் (துணைத் தலைவர்). திரு. தனபால் கணபதி (செயலாளர்). திரு. முருகன் சுப்பிரமணி (இணை செயலாளர்). திருமதி. நந்தினி மேட்டூர் சோமசுந்தரம் (பொருளாளர்), திரு. ஜெய் செல்லப்பா (இணைப் பொருளாளர்) ஆகியோர் தன்னலமின்றி நிர்வாகப் பணிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் திரு. மோகன் பாபு. திரு. லோகநாதன் கண்ணையன், திரு. செந்தில்குமார், திரு. சங்கர் கணேஷ் ஆகியோரின் பேராதரவையும் நாம் என்றும் மறவோம்.

நிதிநிலையைப் பொறுத்தவரையில், பள்ளியின் வரவுசெலவுக் கணக்குகள் வாரந்தோறும் முறையாகச் சரிபார்க்கப்பட்டு வருகின்றன. தற்போது செலுத்தப்பட வேண்டிய நிலுவை விலைப்பட்டியல்கள் எதுவும் இல்லை. GST தொகையும் வரவுசெலவு- கணக்குகளில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது 2025ஆம் ஆண்டிற்கான தணிக்கைச் செலவுகளும், 2026ஆம் ஆண்டிற்கான காப்பீடு, உறுப்பினர் கட்டணம், BMAC மற்றும் BMIT தொடர்பான செலவுகளும் பிரதான பள்ளிக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும் 2026ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட ஆண்டு இறுதி நிதி இருப்பை எட்டும் வகையில் நிதிநிலை சீராக முன்னேறி வருகிறது.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமையே நம் பலம்.''

ஒருவரின் முயற்சியால் ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும்; ஆனால் பலரின் ஒருங்கிணைந்த முயற்சியால் ஒரு தலைமுறையையே மாற்ற முடியும். அதுபோல, எமது பள்ளியின் வளர்ச்சியும் ஒருவரின் பங்களிப்பால் மட்டும் உருவானதல்ல. ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நிர்வாகம் மற்றும் எமது தமிழ் சமூகத்தின் ஒற்றுமையான பங்களிப்பே இந்தப் பத்தாண்டுப் பயணத்தின்

# பாலர் மலர் மிண்டோ பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

அடித்தளமாக அமைந்துள்ளது.

தமிழ் மொழி வளர்வது என்பது ஒரு மொழியின் வளர்ச்சி மட்டுமல்ல; அது நமது அடையாளம், பண்பாடு மற்றும் பாரம்பரியம் அடுத்த தலைமுறைக்கும் உயிர்ப்புடன் தொடர்வதற்கான உறுதிப்பாடாகும். எனவே, தமிழின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைவரையும் ஒன்றிணைத்து, ஒரே நோக்கத்துடனும், ஒரே உணர்வுடனும், ஒருமித்த சிந்தனையுடனும் நாம் தொடர்ந்து பயணிப்போம்.

நம் ஒற்றுமை நம் பலமாகட்டும்;
நம் தமிழ்ப்பணி நம் அடையாளமாகட்டும்;
நம் அடுத்த தலைமுறை நம் பெருமையாகட்டும்.

ஒற்றுமையுடன் கைகோர்த்து, தமிழோடு இணைந்து, இன்னும் பல ஆண்டுகள் சிறப்பாகப் பயணிப்போம்.



நன்றி. வணக்கம்.



## Long Service Teachers Award

திரு. தனபால் கணபதி (10 வருடம்)

செல்வி. ஸ்ருதிக்ஷா ராஜசேகர் (5 வருடம்)

திருமதி. ஜெயஸ்ரீ நரசிம்மன் (5 வருடம்)

செல்வி. யஷிலா வேலுசாமி (5 வருடம்)

திருமதி. சங்கீதா தவேந்திரா (5 வருடம்)

## Young Teachers Award

செல்வி. ஜெய்நீ ஜீனோ ஆல்வின் பிரபாகரதாஸ்

# SCHOOL COMMITTEES - 2026

## *Minto* - மிண்டோ

| Committee/Role | Member's Name | பணிக்குழு | பெயர் |
|---|---|---|---|
| President | Mr. Alwin Aruldhas | தலைவர் | திரு. ஆல்வின் பிரபாகரதாஸ் |
| Vice President | Mr. Raghunath Ramkumar | துணைத் தலைவர் | திரு. ரகுநாத் ராம்குமார் |
| Secretary | Mr. Dhanapal Ganapathy | செயலாளர் | திரு. தனபால் கணபதி |
| Joint Secretary | Mr. Murugan subramani | இணை செயலாளர் | திரு. முருகன் சுப்பிரமணி |
| Treasurer | Mrs. Nandini Mettur Somasundharam | பொருளாளர் | திருமதி. நந்தினி மேட்டூர் சோமசுந்தரம் |
| Joint Treasurer | Mr. Jay Chellappa | இணைப் பொருளாளர் | திரு. ஜெய் செல்லப்பா |
| Principal | Mrs. Haritha Natarajan | முதல்வர் | திருமதி. ஹரிதா நடராஜன் |
| | | | |
| Volunteer | Mr. Mohanbabu | தன்னார்வலர் | திரு. மோகன் பாபு |
| Volunteer | Mr. Shankar Ganesh | தன்னார்வலர் | திரு. சங்கர் கணேஷ் |
| Volunteer | Mr. Senthilkumar Marukkutty | தன்னார்வலர் | திரு. செந்தில்குமார் மருகுட்டி |
| Volunteer | Mr. Loganathan Kannaiyan | தன்னார்வலர் | திரு. லோகநாதன் கண்ணையன் |

# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்











# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்








## தமிழ் தாத்தா - உ. வே. சுவாமிநாதையர்

மகாவித்துவான் உ. வே. சுவாமிநாதையர் (1855 - 1942) நவீன தமிழ் இலக்கிய வரலாற்றின் மிக முக்கியமான தூண்களில் ஒருவர் ஆவார். அழிந்துபோகும் நிலையிலிருந்த பழந்தமிழர் இலக்கியங்களை மீட்டெடுத்து அச்சேற்றிய அவரது அரிய பணிக்காக அவர் "தமிழ்த் தாத்தா" என்று அன்போடு அழைக்கப்படுகிறார்.

உ. வே.சா அவர்கள் தமிழ்நாட்டின் உத்தமதானபுரத்தில் பிறந்தார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் மாணவராக இருந்து முறைப்படி தமிழ் கற்றார். பழைய ஓலைச்சுவடிகளைத் தேடித் தொகுப்பதிலும், அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வதிலும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தார்.



அக்காலத்தில் தமிழின் உன்னதக் காப்பியங்களும் சங்க இலக்கியங்களும் எவராலும் அறியப்படாமல், பூச்சிகளாலும் கரையான்களாலும் அழியும் நிலையில் பழைய வீடுகளிலும், மடங்களிலும் முடங்கிக் கிடந்தன. உ.வே.சா அவர்கள் தமிழகத்தில் பட்டிதொட்டியெல்லாம் கால்நடையாகச் சென்று, ஓலைச்சுவடிகளைச் சேகரித்தார்.

உ. வே.சா அவர்கள் மீட்டெடுத்து துல்லியமான குறிப்புகளுடன் அச்சிட்டு வெளியிட்ட இவை முக்கிய நூல்கள்: சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை

உ. வே. சா அவர்களின் வாழ்நாள்ப் பணி தமிழுக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியைத் தந்தது. அவரது இலக்கிய மரபு இன்றும் போற்றப்படுகிறது

உ. வே.சா அவர்களின் சுயசரிதையான "என் சரித்திரம்" பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி தமிழ் சமூகத்தை விவரிக்கும் ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாகும். அவரது நினைவாகச் சென்னையில் உ.வே.சா நூலகம் அமைக்கப்பட்டு இன்றுவரை பல்லாயிரக்கணக்கான சுவடிகளைப் பாதுகாத்து வருகிறது.

ஜோனா அல்வின் (11 வகுப்பு) - மிண்டோ தமிழ் பள்ளி

# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்







**உன்னால் முடியும், கண்ணா.**

மங்கும் பொன்னொளியில் அம்மா அங்கே நின்றுகொண்டிருந்தாள். ஒளி அவள் புடவையின் மடிப்புகளுக்குள் தங்கி, கருமையான தோல்மீது வழிந்தோடியது. என் கொலுசுகள் காற்றோடு மெதுவாக ஒலித்தன.

நான் அலங்கார மேசைக்குச் சென்று, கண்ணாடிக்கு முன் கால் விரல்களின் நுனியில் நின்றேன். எப்போதும் என்னைவிட அம்மாவையே அதிகமாக அடையாளம் கண்டுகொள்ளும் அந்தப் பிரதிபலிப்புக்குள் என்னையும் உயர்த்திக்கொள்ள முயன்றேன்.

முற்தானையைச் சரிசெய்தபோது, அவள் வளையல்கள் சிணுங்கின. என் கண்ணுக்கு முன் இருந்த முடியை காதுக்குப் பின்னால் ஒதுக்கி வைத்தாள். பிறகு என் தாடையை மெதுவாக உயர்த்தி, தோள்களை நேராக நிறுத்தினாள்.

அவள் சிரித்தாள். நானும் சிரித்தேன்.

கண்ணாடி எங்கள் இருவரையும் ஒரே சட்டகத்திற்குள் கொண்டு வந்தது. இந்தக் கணத்திற்காகவே அது காத்திருந்ததுபோல.

என் பாதங்கள் வலித்தன. ஆனால் நான் பின்வாங்கவில்லை. என் தோள்மீது இருந்த அவள் கையின் வெப்பம் என்னை அமைதிப்படுத்தியது. கண்ணாடி எங்களைத் தன்னுள் தாங்கிக்கொண்டிருந்தது — அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலிருந்த தூரத்தை, அம்மாவைவிட அந்தக் கண்ணாடியே நன்றாகப் புரிந்துகொண்டதுபோல.

அவள் எதுவும் சொல்லவில்லை. அந்த மௌனமே உரக்கப் பேசியது.

என் கால் விரல்கள் தரையை நோக்கித் தாழத் தொடங்கியபோது, அவள் மென்மையாகச் சொன்னாள்:

"உன்னால் முடியும், கண்ணா."

அது ஒரு கட்டளையுமல்ல, ஆறுதலுமல்ல. அது ஒரு அங்கீகாரம்.

நான் என்னவாகப் போகிறேன் என்பதை, நான் அறிந்து கொள்வதற்கு வெகுகாலம் முன்பே அவள் கற்பனை செய்திருந்த ஒரு கணம்.

வளர்வது என்றால், தரையில் ஊன்றியபடியே கண்ணாடியை எட்டும் அளவுக்கு உயரமாக வளர்வதுதான் என்று நான் நினைத்தேன்.

இப்போதைக்கு, நான் அவளுடன் அந்தச் சட்டகத்திற்குள் இருந்தேன். அம்மாவுடன். அவளும் என்னை அங்கேயே தாங்கிக்கொண்டிருந்தாள்.

Lakshana Senthilkumar,
HSC Prep Advanced Class,
Balarmalar Tamil School - Minto.



# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்











# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

# மிண்டோ பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

# Minto Kinder Junior



# Minto Kinder Senior



# Minto Year 1



# Minto Year 2



# Minto Year 3



# Minto Year 4



## Minto Year 5



## Minto Year 6



# Minto Year 7



# Minto Year 12



# Minto HSC Pre Basic



# Minto HSC Pre Advanced



# Minto Teachers



# Minto Admin Team



# Minto Volunteer



## எமது ஆசிரிய பெருமக்கள்

| Minto | மிண்டோ |
|---|---|
| Mrs. Haritha Natarajan | திருமதி. ஹரிதா நடராஜன் |
| Mr. Annamalai Meenakshisundaram | திரு. அண்ணாமலை சுந்தரம் |
| Ms. Jaynie Juno Alwin Prabakaradhas | செல்வி.ஜெய்நீ ஜுனோ ஆல்வின் பிரபாகரதாஸ் |
| Ms. Savitha Shanmuga Sundaram | செல்வி. சவிதா சண்முகசுந்தரம் |
| Ms. Srudiksha Rajasekar | செல்வி. ஸ்ருதிக்க்ஷா ராஜசேகர் |
| Ms. Rethanya Suresh Kumar | செல்வி. ரிதன்யா சுரேஷ் குமார் |
| Mr. Mahin Velusamy | செல்வன். மகின் வேலுசாமி |
| Ms. Ilakkiya Murali | செல்வி. இலக்கியா முரளி |
| Mr. Johnson Markraj | திரு. ஜான்சன் மார்க்ராஜ் |
| Mrs. Ramanibai Narayanasamy | திருமதி. ரமணிபாய் நாராயணசாமி |
| Mrs. Sathyavathi Holur Narayan | திருமதி. சத்யவதி ஹோலூர் நாராயண் |
| Mrs. Shanthi Pichappan Sornam | திருமதி. சாந்தி பிச்சப்பன் சொர்ணம் |
| Mrs. Jayasree Narasimhan | திருமதி. ஜெயஸ்ரீ நரசிம்மன் |
| Ms. Yashila Velusamy | செல்வி யஷிலா வேலுசாமி |
| Mr. Arthur Gerard | திரு. ஆர்த்தர் ஜெரார்ட் |
| Mrs. Geetha Sambandam | திருமதி. கீதா சம்பந்தம் |
| Mrs. Devi Murugesan | திருமதி. தேவி முருகேசன் |
| Mrs. Karthika Palanisamy (Lead) | திருமதி. கார்த்திகா பழனிசாமி (Lead) |
| Mrs. Sudha VENKATASUBRAMANIAN | திருமதி. சுதா வேங்கடசுப்ரமணியன் |
| Mrs. Durgadevi Murali | திருமதி. துர்காதேவி முரளி |
| Mrs. Rajani RAVIKUMAR | திருமதி. ரஜனி ரவிக்குமார் |
| Mr. Sambandam Subramanian (Lead) | திரு. சம்பந்தம் சுப்பிரமணியன் (Lead) |
| Mrs. Bamaruckmani Balasubramanian | திருமதி. பாமாருக்மணி பாலசுப்பிரமணியன் (Lead) |
| Mrs. Sameema Somanan | திருமதி. சமீமா சோமனன் |
| Mrs. Saranya Devi Sathyamurthy (Lead) | திருமதி. சரண்யா தேவி சத்தியமூர்த்தி (Lead) |
| Mrs. Shangeetha THAVENDRA (Lead) | திருமதி. சங்கீதா தவேந்திரா (Lead) |
| Mrs. Usha Ramchandran | திருமதி. உஷா ராமச்சந்திரன் |

## பாலர் மலர் மிண்டோ தமிழ்ப் பள்ளி முடிவுகள் - 2026

| Given Name | Family Name | Class | Grade in English | Grade in Tamil |
|---|---|---|---|---|
| Aadhitya | Gopinath AK | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Abhinav | Shankar Ganesh | Kinder Junior | Distinction Award | சிறப்பு விருது |
| Adhav | ArunKumar | Kinder Junior | Distinction Award | சிறப்பு விருது |
| Dhiya | Rajeshkanna | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Iyarkai | SundarRajan | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Jazlyn | Joseph | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Rakshithaa | Damodharan | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Sai | Mohan | Kinder Junior | Distinction Award | சிறப்பு விருது |
| Samyukta | Manikantan | Kinder Junior | Distinction Award | சிறப்பு விருது |
| Venba | Balaji | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Yashmit | Gopinath | Kinder Junior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Deeksha | Karthic sankar | Kinder Senior | Excellent Award | பாராட்டு விருது |
| Harshaa | Thirumoorthy | Kinder Senior | Distinction Award | சிறப்பு விருது |
| Janani | Jagadeesh | Kinder Senior | Excellent Award | பாராட்டு விருது |
| Mitravinda | Sabarish Abhilasha | Kinder Senior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Pragadhie | Raja Subramaniam | Kinder Senior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Pranitha | Gomathi nayagam | Kinder Senior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Sai Aathiran | Ravikulan | Kinder Senior | Distinction Award | சிறப்பு விருது |
| Saisha | Vinay | Kinder Senior | Excellent Award | பாராட்டு விருது |
| Shashtika | Ganeshvikram | Kinder Senior | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Aarav | Subash | Year 1 | Excellent Award | பாராட்டு விருது |
| Hansa | Raghunath | Year 1 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| JOSHIKA | SARAVANA KUMAR | Year 1 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Kathambari | Mahendar | Year 1 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Nithya | Gerard | Year 1 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Shambavi | Sabarish | Year 1 | Excellent Award | பாராட்டு விருது |
| Siva | Murugesan | Year 1 | Excellent Award | பாராட்டு விருது |
| Thejal | Mohanbabu | Year 1 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Venbha | Venkatasubramanian Sudha | Year 1 | Excellent Award | பாராட்டு விருது |
| Vivienne-Gayatri | Chellappa | Year 1 | Participation Award | பங்கேற்பு விருது |
| Yanika | Chellappa | Bridging Class | Achivement Award | தகுதி விருது |
| Adhvik Leon | Subash | Year 2 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Athiraj | Subburaj | Year 2 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Barani | Senthil Kumar | Year 2 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Mithran | Dinesh | Year 2 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Rhiya | Sailakshmi Pirathiban | Year 2 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Vahin | Jeyavinthan | Year 2 | Distinction Award | சிறப்பு விருது |
| Aathanya | Ravikulan | Year 3 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Afrin | Ajmal Raja | Year 3 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Akshan | Loganathan | Year 3 | Excellent Award | பாராட்டு விருது |
| Ashwika | Nagarajan | Year 3 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Darshan | Radhakrishnan | Year 3 | Distinction Award | சிறப்பு விருது |
| Jananyaa | Prabhu | Year 3 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Jaanavi | Raja Subramaniam | Year 3 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Mithra | Kamatchi Vishnu Subramaniam | Year 3 | Distinction Award | சிறப்பு விருது |
| Reyan | sabarish | Year 3 | Distinction Award | சிறப்பு விருது |
| Sara | Raja | Year 3 | Distinction Award | சிறப்பு விருது |
| Sengko | Thillakan | Year 3 | Participation Award | பங்கேற்பு விருது |
| Takshvii | Venkatesan | Year 3 | Distinction Award | சிறப்பு விருது |
| Ananya | Serkadu Giridaran | Year 4 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Esswitha | Veeramachanpatty Kalyanasundaram | Year 4 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Kanaliya | Prabakar | Year 4 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Manikandan | Sambandam | Year 4 | Distinction Award | சிறப்பு விருது |
| Niriksha | Joanna Gerard | Year 4 | Distinction Award | சிறப்பு விருது |
| Nissi | Joel Gerard | Year 4 | Distinction Award | சிறப்பு விருது |
| Prajeni | Manikandan | Year 4 | Achivement Award | தகுதி விருது |
| Aadhesh | Tishikesan | Year 5 | Excellent Award | பாராட்டு விருது |
| Deeksha | Shankar Ganesh | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |
| Jayaditya | Vadlamani | Year 5 | Excellent Award | பாராட்டு விருது |
| Jovan | Travis Joseph | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |
| Mahathi | Rajesh | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |
| Raksha | Yellappa | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |
| Shaaron | Johnson | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |
| Srisha | Vinay | Year 5 | Distinction Award | சிறப்பு விருது |

## பாலர் மலர் மிண்டோ தமிழ்ப் பள்ளி முடிவுகள் - 2026

| Given Name | Family Name | Class | Grade in English | Grade in Tamil |
|---|---|---|---|---|
| Aagna | Arun | Year 6 | Participation Award | பங்கேற்பு விருது |
| Adhavan | Premkumar | Year 6 | Distinction Award | சிறப்பு விருது |
| Akshaya | Damodharan | Year 6 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Arjun | Rajeshkanna | Year 6 | Excellent Award | பாராட்டு விருது |
| Kaavian | Manimaran | Year 6 | Distinction Award | சிறப்பு விருது |
| Sai Raghav | Yellappa | Year 6 | Excellent Award | பாராட்டு விருது |
| Arjun | Serkadu Giridaran | Year 7 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Gowtham | Shankar Ganesh | Year 7 | Distinction Award | சிறப்பு விருது |
| Mithran | Raghunath | Year 7 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Sudarshana | Venkatesan | Year 7 | Distinction Award | சிறப்பு விருது |
| Adhrith | Vishnu Subramaniam | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Kavin | Thavendra | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| PRANAV | Radhakrishnan | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Samhitha | Veeramachanpatty Kalyanasundaram | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Viknesh | Marimuthu | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Vrinda | Marimuthu | HSC Preparation - Basic | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Ashvik | Loganathan | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Kavin | Manimaran | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Lakshana | Senthilkumar | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Neevi Harish | Dhanapal | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Saisurya Roshanan | Suresh | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Shrisurya Yohanan | Suresh | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Yazhini | Gomathi nayagam | HSC Preparation - Advanced | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Harini | Murugan Sujitha | Year 11 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Joana | Josie Alwin Prabakaradhas | Year 11 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Sahana | Rajesh | Year 11 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Aabisha | Varatharasan | Year 12 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |
| Helen | Johnson | Year 12 | High Distingtion Award | தனி சிறப்பு விருது |

# Minister's Award Winners - 2026



அபிஷா வரதராசன்
Senior
Highly Commended

# Balar Malar Tamil Competition Winners - 2026



வெண்பா பாலாஜி
முதல் இடம்
குழந்தைப் பாட்டுப்போட்டி
இ பிரிவு



எஸ்விதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம்
முதல் இடம்
திருக்குறள்-செய்யுள் மனனப்போட்டி-ஈ பிரிவு



சம்ஹிதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம் இரண்டாம் இடம்
கதை எழுதும் போட்டி-அ பிரிவு
சிறப்பு பரிசு, பேச்சுப் போட்டி



லக்ஷனா செந்தில்குமார்
இரண்டாம் இடம்
விவாதம் - ஆ பிரிவு



றியா சாய்லக்ஷ்மி பிரதீபன்
சிறப்பு பரிசு
பழமொழி-பொன் மொழிகள்



தீக்ஷா சங்கர் கணேஷ்
சிறப்பு பரிசு
கதை சொல்லும் போட்டி



கனலியா பிரபாகர்
சிறப்பு பரிசு
அடிப்படை எழுத்து அறிவுப் போட்டி



அபிஷா வரதராசன்
சிறப்பு பரிசு
கட்டுரைப் போட்டி

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Aabisha Varatharasan
Advance
High Distinction



Adhavan Premkumar
Intermediate Lower
High Distinction



Akshaya Damodharan
Intermediate Lower
High Distinction



Ananya Serkadu Giridarani
Basic
High Distinction



Esswitha Veeramachanpatty Kalyanasundaram
Basic
High Distinction



Joana Alwin Prabakaradhas
Advance
High Distinction



Lakshana Senthilkumar
Intermediate Upper
High Distinction



Manikandan Sambandam
Basic
High Distinction



Samhitha Veeramachanpatty Kalyanasundaram
Intermediate Upper
High Distinction

# ASoGT Competition Winners - 2026



**எஸ்விதா வீரமச்சான்பட்டி**
கல்யாணசுந்தரம் பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு
வாய்மொழித் தொடர்பாற்றல் - மத்திய பிரிவு (பெண்கள்)
இரண்டாம் இடம். அம்மாடை எழுத்தறியும் போட்டி -
மத்திய பிரிவு மூன்றாம் இடம்



**சம்ஹிதா வீரமச்சான்பட்டி கல்யாணசுந்தரம்**
பேச்சுப் போட்டி - அதிமேற் பிரிவு (பெண்கள்),
வாய்மொழித் தொடர்பாற்றல் - அதிமேற் பிரிவு (13 வயது),
மின்னே கவிதை மனனப் போட்டி (நிறச்சுரை) -
அதிமேற் பிரிவு (பெண்கள்) முதல் இடம்



**லக்ஷனா செந்தில்குமார்**
வாய்மொழித் தொடர்பாற்றல் -
அதிமேற் பிரிவு (14 வயது)
இரண்டாம் இடம்



**வெண்பா பாலாஜி**
வாய்மொழித் தொடர்பாற்றல் - பாலர் பிரிவு
முதல் இடம், கவிதை மனனப் போட்டி
மின்னே கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) -
பாலர் பிரிவு - (பெண்கள்) இரண்டாம் இடம்



**ஆதித்யா கோபிநாத் ஆதிகேசவன்**
மின்னே கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி) -
ஆரம்பப் பிரிவு ஆண்கள்
மூன்றாம் இடம்

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# நியூகாசில்

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் நியூகாசில் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

**11 ஆண்டுகள் – தமிழ் மொழி, கல்வி மற்றும் பண்பாட்டுச் சேவை**

அன்புடையீர், வணக்கம்!

பாலர் மலர் நியூகாசில் தமிழ்ப் பள்ளியின் 2026 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையைப் பள்ளி நிர்வாகக் குழு, கல்விக் குழு மற்றும் ஆசிரியர்கள் சார்பாக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம். 2015 ஆம் ஆண்டு தொடங்கிய நமது பள்ளி, 2026 ஆம் ஆண்டில் தனது 11 ஆண்டு பயணத்தை நிறைவு செய்கிறது. நியூகாசில் மற்றும் ஹண்டர் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியையும் நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் அறிமுகப்படுத்தி வளர்ப்பதே நமது முக்கிய நோக்கமாகும்.

## தமிழ்க் கல்விப் பணிகள்

2026 ஆம் ஆண்டிலும் மாணவர்களின் வயது மற்றும் கற்றல் நிலைக்கு ஏற்ப தமிழ் வாசிப்பு, எழுத்து, பேச்சு, சொற்களஞ்சியம் மற்றும் பண்பாட்டு அறிவை வளர்க்கும் கல்விப் பணிகளை ஆசிரியர்கள் மேற்கொண்டனர். மாணவர்கள் வகுப்பறைக் கற்றலுடன் பேச்சுப் போட்டி, தமிழ் பாடல்கள், பொன்மொழிகள் மற்றும் மொழித்திறன் சார்ந்த பயிற்சிகளிலும் ஈடுபட்டனர். இந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்த கல்விக் குழுவினருக்கும் பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

## 2026 NSW Minister's Awards – சிறப்புச் சாதனை

இந்த ஆண்டின் மிக முக்கியமான பெருமைகளில் ஒன்று, நமது மாணவர்கள் நியூ சவுத் வேல்ஸ் Minister's Awards நிகழ்வில் பெற்ற சிறப்பான அங்கீகாரமாகும். விருது பெற்ற இரு மாணவர்களையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

| மாணவர் பெயர் | விருது | பிரிவு |
|---|---|---|
| Kavin Dev | Commended Award | Senior Category |
| Rithvi Jeeva | Highly Commended Award | Junior Category |

இந்த மாணவர்களின் சாதனைகளுக்குப் பின்னால் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்கள், கல்விக் குழு, நிர்வாகக் குழு மற்றும் தொடர்ந்து ஊக்கமளித்த பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மாணவர் திறன் வளர்ச்சி மற்றும் போட்டிகள்

தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்கும் வகையில் பேச்சு, எழுத்து மற்றும் பண்பாட்டுச் செயல்பாடுகளுக்கான பயிற்சிகள் ஊக்குவிக்கப்பட்டன. 2026 ஆம் ஆண்டு தமிழ் போட்டிகளுக்காக மாணவர்களைத் தயார்படுத்திய ஆசிரியர்களின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

## சமூகப் பங்களிப்பு மற்றும் நூலக முயற்சி

2017 ஆம் ஆண்டின் Specific Project Grants முயற்சியின் ஒரு பகுதியாக BMNC மாணவர்களால் 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ் வாசிப்புப் புத்தகங்கள், 2026 ஆம் ஆண்டில் Cameron Park Sugarloaf Library-க்கு வழங்கப்பட்டன. குழந்தைகளின் படைப்பாற்றலையும் தமிழ் வாசிப்பு வளங்களையும் சமூகத்துடன் பகிர்ந்துகொள்ளும் இம்முயற்சி நமது பள்ளிக்குப் பெருமை சேர்க்கிறது.

# பாலர் மலர் நியூகாசில் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

**பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் சமூக ஒற்றுமை**

தமிழ் மொழியுடன் இணைந்த கலை, இலக்கியம், இசை, நாடகம் மற்றும் பாரம்பரிய நிகழ்ச்சிகள் மூலம் குழந்தைகளின் திறமைகளையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பதில் BMNC தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்பு இத்தகைய நிகழ்வுகளின் அடித்தளமாகும்.

2026 ஆம் ஆண்டுக்கான தீபாவளி சமூகக் கொண்டாட்டம் நவம்பர் 8 ஆம் தேதி Pioneer Hall, Wallsend-இல் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல், 11 ஆண்டு பயணத்தைக் கொண்டாடும் BMNC கலை இலக்கிய விழா மற்றும் ஆண்டுவிழா நவம்பர் 21 ஆம் தேதி அதே அரங்கில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட நாளில் இந்நிகழ்ச்சிகள் எதிர்வரும் நிகழ்வுகளாகும்.

**நன்றியுரை**

நமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நேரத்தையும் உழைப்பையும் அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள், கல்விக் குழு உறுப்பினர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கலாச்சார ஒருங்கிணைப்பாளர்கள், பெற்றோர்கள், தன்னார்வலர்கள் மற்றும் BMNC-க்கு ஆதரவளிக்கும் சமூக அமைப்புகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வரும் ஆண்டுகளிலும் தமிழ் மொழியை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும், மாணவர்களின் சாதனைகளை வளர்க்கவும், நியூகாசில் சமூகத்தில் ஒற்றுமையுடன் செயல்படவும் தொடர்ந்து உறுதியுடன் இருப்போம்.

நன்றி.

பாலர் மலர் நியூகாசில் பள்ளி நிர்வாகக் குழு
நியூகாசில் - 2026



சாந்தி ராமசாமி
துணை முதல்வர்



பிரியகாந்தன் தெட்சிணாமூர்த்தி
தலைவர்

# Long Service Teachers Award

Mr. Dineshkumar Manivannan (11 Years)

Mrs. Vijayalakshmi Perumal (11 Years)

Mr. Ganesh Natarajan (9 Years)

Dr. Ashok Dharmalingam (8 Years)

Mr. Devasenapathy Sambanthamoorthy (7 Years)

Mrs. Shaanthe Ramaswamy (7 Years)

Mr. Karthikeyan Veerakumar (7 Years)

Mrs. Chandraveni Ayyasamy (6 Years)

Mr. Hari Gnana Sudha Duraiswamy (5 Years)

Mrs. Thenmozhi Muthusamy (2 Years)

Mr. Priyagandhan Deshinamoorthi

Mrs. Kavitha Ramadass

Mr. Jeeva Ramaswamy

Mrs. Sangeetha Parthasarathy

# SCHOOL COMMITTEES - 2026

## Newcastle நியூகாசில்

| Committee/Role | Member's Name | பணிக்குழு | பெயர் |
|---|---|---|---|
| Principal | Mr. Dineshkumar Manivannan | முதல்வர் | திரு. தினேஷ்குமார் மணிவண்ணன் |
| Vice Principal | Mrs. Shaanthe Ramasawamy | துணை முதல்வர் | திருமதி. சாந்தி ராமசாமி |
| President | Mr. Priyagandhan Deshinamoorthi | தலைவர் | திரு. பிரியகாந்தன் தெட்சிணாமூர்த்தி |
| Vice-President | Mrs. Hari Gnana Sudha Duraiswamy | துணைத் தலைவர் | திருமதி. ஹரி ஞான சுதா துரைசுவாமி |
| Secretary | Mr. Ganasampath Thirumalaisamy | செயலாளர் | திரு. ஞானசம்பத் திருமலைசாமி |
| Join-Secretary | Mr. Devasenapathy Sambanthamoorthy | இணைச் செயலாளர் | திரு. தேவசேனாபதி சம்பந்தமூர்த்தி |
| Treasurer | Mr. Gnanasekeran Ponnuswamy | பொருளாளர் | திரு. ஞானசேகரன் பொன்னுசாமி |
| Joint Treasurer. | Mr. Nethrajeith Srinivasalu | இணைப் பொருளாளர் | திரு. நேத்ரஜீத் ஸ்ரீனிவாசலு |

# நியூகாசில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்











# நியூகாசில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்







| இலக்கங்கள் | |
|---|---|
| 1 | ஒன்று |
| 10 | பத்து |
| 100 | நூறு |
| 1000 | ஆயிரம் |
| 10000 | பத்தாயிரம் |
| 100000 | நூறாயிரம் |
| 1000000 | பத்துநூறாயிரம் |
| 10000000 | கோடி |
| 100000000 | அற்புதம் |
| 1000000000 | நிகற்புதம் |
| 10000000000 | கும்பம் |
| 100000000000 | கணம் |
| 1000000000000 | கற்பம் |
| 10000000000000 | நிகற்பம் |
| 100000000000000 | பதுமம் |
| 1000000000000000 | சங்கம் |
| 10000000000000000 | வெள்ளம் |
| 100000000000000000 | அந்நியம் |
| 1000000000000000000 | அர்த்தம் |
| 10000000000000000000 | பரார்த்தம் |
| 100000000000000000000 | பூரியம் |
| 1000000000000000000000 | பிரமகற்பம் |



# நியூகாசில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்










# நியூகாசில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# நியூகாசில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



## Newcastle Pre Kinder



## Newcastle Year 3



## Newcastle Year 5 & 6




## Newcastle Year 7



## Newcastle Year 8 & 9



## Newcastle Fast Track



# Newcastle Teachers



## எமது ஆசிரிய பெருமக்கள்

| Newcastle | நியூகாசில் |
|---|---|
| Mrs. Sangeetha Parthasarathy | திருமதி. சங்கீதா பார்த்தசாரதி |
| Mrs. Thenmozhi Muthusamy | திருமதி. தேன்மொழி முத்துசாமி |
| Mr. Priyagandhan Deshinamoorthi | திரு. பிரியகாந்தன் தெட்சிணாமூர்த்தி |
| Mr. Devasenapathy Sambanthamoorthy | திரு. தேவசேனாபதி சம்பந்தமூர்த்தி |
| Mrs. Shaanthe Ramaswamy | திருமதி. சாந்தி ராமசுவாமி |
| Dr. Ashok Dharmalingam | திரு. அசோக் தர்மலிங்கம் |
| Mr. Hari Gnana Sudha Duraiswamy | திரு. ஹரி ஞான சுதா துரைஸ்வாமி |
| Mrs. Chandraveni Ayyasamy | திருமதி. சந்திரவேணி அய்யாசாமி |
| Mr. Jeeva Ramaswamy | திரு. ஜீவா ராமசாமி |
| Mr. Dineshkumar Manivannan | திரு. தினேஷ்குமார் மணிவண்ணன் |
| Mrs. Vijayalakshmi Perumal | திருமதி. விஜயலட்சுமி பெருமாள் |
| Mrs. Kavitha Ramadass | திருமதி. கவிதா ராமதாஸ் |
| Mr. Karthikeyan Veerakumar | திரு. கார்த்திகேயன் வீரகுமார் |
| Mr. Ganesh Natarajan | திரு. கணேஷ் நடராஜன் |

# Minister's Award Winners - 2026



ரித்வி ஜீவா
Highly Commended
Junior



கவின் தேவ்
Commended
Senior

# Balar Malar Tamil Competition Winners - 2026



கவின் தேவ்
பழமொழி-பொள் மொழிகள்
இரண்டாம் இடம்



அருட்குவை அசோக்
பழமொழி-பொள் மொழிகள்
மூன்றாம் இடம்

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Pranavi Jeeva
High Distinction



Devasena Ganesh
High Distinction



Aarushi Priyagandhan
High Distinction



Akshanth Johan
Arul Ananthan
High Distinction



Rithvi Jeeva
High Distinction



Thanvi Ramakrishnan
High Distinction



Arutkuvai Ashok
High Distinction



Kavya Dev
High Distinction



Kavin Dev
High Distinction



Aaradhana Ganesh
High Distinction



Charvi Ramakrishnan
High Distinction



Vihana Pillai
High Distinction



Ishana Pillai
High Distinction



Vidushi Vijayakumar
High Distinction



Saeshanth
Bhaskar Babu
High Distinction

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# இனிய

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் ஓரிம்பா பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

வணக்கம்

" சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம் "
– ஔவையார்

ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளியின் முதலாவது ஆண்டு அறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம். தமிழ்மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கில் தொடங்கப்பட்ட எமது பள்ளி, முதல் ஆண்டிலேயே குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.

ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி 2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டது. இப்பகுதியின் முதலாவது இந்திய மொழிப் பள்ளி என்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

பல்வேறு வயதுடைய, ஆரம்பக்கட்ட தமிழ் அறிவைக் கொண்ட குழந்தைகள் அனைவரும் மிகுந்த ஆர்வமுடன் பள்ளியில் சேர்ந்தனர். அவர்களின் தொடர் பங்கேற்பே பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக அமைந்தது.

ஆரம்பத்தில் 11 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட எமது பள்ளி, பெற்றோர் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் பேராதரவால் தற்போது 17 மாணவர்களாக வளர்ந்துள்ளது.

முதல் ஆண்டிலேயே எமது மாணவர்கள் நான்கு முக்கிய போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

- பாலர் மலர் போட்டிகள்
- ASoGT தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்
- சிட்னி முருகன் கோவில் போட்டிகள்
- தமிழ் இலக்கிய மன்றப் போட்டிகள்

இப்போட்டிகளில் மாணவர்கள் தங்கள் தனித்திறமையையும் தன்னம்பிக்கையையும் சிறப்பாக வெளிப்படுத்தினர்.

மேலும் பல குழந்தைகளுக்குத் தமிழ் கற்கும் வாய்ப்பளித்து, அவர்களின் மொழித்திறனை மேம்படுத்துவதே பள்ளியின் முதன்மை நோக்கமாகும். தமிழ்மொழி, பண்பாடு மற்றும் மரபைப் பேணி, மாணவர்கள் தங்கள் அடையாளத்தைப் பெருமையுடன் வளர்க்கும் சூழலை உருவாக்குவதே எமது நீண்டகால இலக்காகும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

# பாலர் மலர் ஓரிம்பா பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

குழந்தைகளின் கற்றலையும் பள்ளியின் வளர்ச்சியையும் ஆதரித்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் தமிழ்ச் சமூக நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவரின் ஆதரவுடன் எமது பள்ளி தொடர்ந்து வளர்ந்து, தமிழ்மொழிக்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் என உறுதியாக நம்புகிறோம்.

தமிழைக் கற்போம் ! தமிழால் இணைவோம் !
தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவோம் !



நன்றி,
பள்ளி நிர்வாகம்
ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

Vilasini P

# SCHOOL COMMITTEES - 2026

## *Ourimbah* - ஓரிம்பா

| Committee/Role | Member's Name | பணிக்குழு | பெயர் |
|---|---|---|---|
| President | Mrs. Vilasini Pugazhendhi | தலைவர் | திருமதி. விலாசினி புகழேந்தி |
| Secretary | Mrs. Mary Neeharika Gadalli | செயலாளர் | திருமதி. மேரி நிஹாரிகா கதலி |
| Treasurer | Mr. Siva Balasubramanian | பொருளாளர் | திரு. சிவா பாலசுப்ரமணியன் |
| | | | |
| | | | |
| | | |

# ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









பருவநிலைகள்

ஒரு வருடத்தில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து பல்வேறு பருவகாலங்கள் உள்ளன. பொதுவாக ஒரு வருடம் நான்கு முக்கிய பருவங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவை வசந்த காலம், கோடை காலம், இலையுதிர் காலம் மற்றும் கனிர்காலம் ஆகும்.

வசந்த காலம் மிகவும் அழகான பருவமாகும். இந்தக் காலத்தில் மரங்களில் புதிய இலைகள் தோன்றுகின்றன. பூக்கள் மலர்கின்றன. வானிலை இனிமையாக இருக்கும். பறவைகள் மகிழ்ச்சியாகப் பாடுகின்றன.

கோடை காலத்தில் சூரியன் மிகவும் பிரகாசமாக இருக்கும். பகல் நேரம் நீளமாக இருக்கும். நாம் குளித்து நீர், பழச்சாறுகள் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவற்றை விரும்பி சாப்பிடுகிறோம். இந்தக் காலத்தில் தண்ணீரை அதிகமாகக் குடிக்க வேண்டும்.

இலையுதிர் காலத்தில் மரங்களின் இலைகள் மஞ்சள், ஆரஞ்சு மற்றும் பழுப்பு நிறமாக மாறி கீழே விழுகின்றன. வானிலை படிப்படியாக குளிர்ந்து விடத்தொடங்குகிறது. இயற்கை அழகாகக் காட்சியளிக்கிறது.

குளிர்காலத்தில் வானிலை மிகவும் குளிராக இருக்கும். சில இடங்களில் பனி பெய்யும். மக்கள் சூடான ஆடைகளை அணிந்து கொள்கிறார்கள். சூடான உணவுகளையும் பானங்களையும் விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு பருவமும் தனித்தன்மை அழகையும் சிறப்பையும் கொண்டுள்ளது. பருவகாலங்களின் மாற்றம் இயற்கையை மேலும் அழகாக மாற்றுகிறது. நாம் இயற்கையை நேசித்து பாதுகாக்க வேண்டும்.

- அவ்வை
முன்னாள் வகுப்பு
பாலர் மலர் ஓரிம்பா
தமிழ் பள்ளி



கவிமணி விபுலானந்தர்
(1892–1947)

1. சுவாமி விபுலானந்தர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு எனும் ஊரில் 1892 ஆண்டு பிறந்தார்.

2. இவரது இயற்பெயர் மயில்வாகனர் ஆகும்.

3. இவர் தமிழ் அறிஞர் மொழிகளில் புலமை பெற்றிருந்ததுடன் விரிவுரையாளர் சுவாமிகளும் மற்றும் சிறந்த ஆசிரியராகவும் பணியாற்றினார்.

4. தமிழ் மீதும் இசை மீதும் மிகுந்த பற்றுக் கொண்டு யாழ் நூல் எனும் இசை ஆராய்ச்சி நூலை எழுதினார்.

5. தமிழ்க்கலையின் வரலாறு, தமிழ் இலக்கியம், தமிழ் இசை வேதாந்த சித்தாந்தம் போன்ற பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல்வேறு கட்டுரைகளைச் சிறந்த முறையில் எழுதியுள்ளார்.

6. இலங்கையில் மாணவர்களுக்கு ஆரிய முறையில் பாடம் போதிப்பதற்காக சுவாமி விபுலானந்தர் சங்கத்தை நிறுவி மேலும் தமிழ் தொண்டுகளை ஆற்றினார்.

7. சென்னை இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து நீண்ட சேவை புரிந்து மிஷனின் பல ஆங்கில பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார்.

8. இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் மேற்கொண்டிருந்த கல்விப்பணிகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் தமிழகத்தில் திருப்பராய்த்துறை ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்தார் 1947 இல் மறைந்தார்.

அதிரா பாலர்
ஆண்டு-03
ஓரிம்பா தமிழ்ப் பாடசாலை

# ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









திருவள்ளுவர் ஓர் இந்தியத் தமிழ்க் கவிஞரும்
தத்துவஞானியும் ஆவார். அறம், அரசியல்
பொருளாதாரம் ஆகியவை குறித்த சிந்தனைகளின்
தொகுப்பான திருக்குறளின் ஆசிரியராகவே அவர்
மிகவும் அறியப்படுகிறார். இந்நூல் தமிழ் இலக்கியத்தின்
ஒப்பற்ற பெரும் போற்றப்படும் படைப்பாகத்
தருதப்படுகிறது.

இவர் சில சமயங்களில் தெய்வப்புலவர்
("தெய்வீகக் கவிஞர்"), வள்ளுவர், பொய்யாமொழிப்
புலவர், ஞானவெட்டியான், தெய்வாப் போர் புலவது
ஐயன் என்றும் அழைக்கப்படுகிறார். திருவள்ளுவர்
133 அதிகாரங்களில் 1330 திருக்குறள்களை இயற்றினார்.
ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள்
உள்ளன.

ப்ரணய்
மகேஷ்



# ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









# ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்










# ஓரிம்பா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



# Ourimbah Kids




# Ourimbah Year 1



## Ourimbah Year 3



## Ourimbah Year 4



# Ourimbah Teachers



# Ourimbah Volunteers, Admin & Teachers



# Ourimbah Executives



# Ourimbah Admin and Teachers Team



# Ourimbah School



| எமது ஆசிரிய பெருமக்கள் | |
|---|---|
| *Ourimbah* | ஓரிம்பா |
| Mrs. Vilasini Pugazhendhi | திருமதி. விலாசினி புகழேந்தி |
| Mrs. Saipriya Rajagopalan | திருமதி. சாய்பிரியா ராஜகோபாலன் |
| Mr. Santhoshkumar Ranganathan | திரு. சந்தோஷ்குமார் ரங்கநாதன் |
| Mrs. Divya Parmeshwari Sivakumar | திருமதி. திவ்யா பரமேஸ்வரி சிவகுமார் |
| Mr. Sasikumar Sadasivam | திரு. சசிகுமார் சதாசிவம் |
| Mrs. Mythili Balakumar | திருமதி. மைதிலி பாலகுமார் |
| Mrs. Rathi Raamachandran | திருமதி. ரதி ராமச்சந்திரன் |

# Balar Malar Tamil Competition Winners - 2026



சஹான் செந்தில்ராஜா
குழந்தைப் பாட்டுப்போட்டி - அ பிரிவு
சிறப்புப் பரிசு



சகானா செந்தில்ராஜா
பழமொழி-பொன்மொழிகள்-அ பிரிவு
இடை நிலை
சிறப்பு பரிசு



ஸ்ரேயா வைஷ்ணவி சசிகுமார்
பழமொழி-பொன்மொழிகள்-ஈ பிரிவு
சிறப்பு பரிசு

# ASoGT Competition Winners - 2026



**சஹான் செந்தில்ராஜா**
வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்ப நிலை
Grade B
வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்ப நிலை
Grade A



**சகானா செந்தில்ராஜா**
விசேட கவிதை மனனப் போட்டி (ஆத்திசூடி)
ஆரம்ப நிலை Grade A முன்றாம் பரிசு
வாய்மொழித் தொடர்பாற்றல் - ஆரம்ப நிலை
Grade A முதலாம் பரிசு



**ஸ்ரேயா வைஷ்ணவி சசிகுமார்**
வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் நிலை
Grade B
கவிதை மனனப் போட்டி- கீழ்ப் நிலை (பெண்கள்)
Grade B



**ஆருஷ் ஷண்முகன் விஜய் பாபு**
விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்)
மத்திய நிலை - ஆண்கள்
Grade C

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் பாரமட்டா பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

அன்பிற்குரிய பாலர்மலர் தமிழ் உறவுகளே, வணக்கம்!

தமிழ்மொழியையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் உயரிய நோக்கத்துடன் தொடங்கப்பட்ட பாலர்மலர் பாரமட்டா தமிழ்ப் பள்ளியின் 2026ஆம் ஆண்டறிக்கையை உங்களுடன் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். சமூகத்தின் நீண்டநாள் கனவாக உருவான இப்பள்ளி, ஆசிரியர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்களின் கூட்டு முயற்சியால் சிறப்பாக முன்னேறி வருகிறது.

## பள்ளியின் தோற்றமும் வளர்ச்சியும்

பாரமட்டாவில் ஒரு தமிழ்ப் பள்ளி அமைய வேண்டும் என்பது நமது சமூகத்தின் நீண்டநாள் விருப்பமாகும். இதனை நனவாக்கும் நோக்கில், **திருமதி. கெஜலக்ஷ்மி ஜெயக்குமார்** அவர்கள் 2024ஆம் ஆண்டிலும், பின்னர் 2025 பிப்ரவரி மாதத்திலும் பாலர் மலர் நிர்வாகக் குழுவிடம் கோரிக்கை முன்வைத்தார். தொடர்ந்து, 2025 ஜூன் மாதத்தில் நண்பர்களையும் தமிழ் உறவுகளையும் மாணவர் சேர்க்கைக்கான விருப்பப் பதிவை மேற்கொள்ள அழைத்தார். இந்த அழைப்பிற்குச் சமூகத்தினர் அளித்த பேராதரவு, பள்ளியைத் தொடங்குவதற்கான வலுவான அடித்தளமாக அமைந்தது.

இதன் தொடர்ச்சியாக, பாரமட்டாவில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளிக் கிளையைத் தொடங்கும் யோசனை **திரு. ஜெயக்குமார் பாண்டியன்** அவர்களிடம் முன்வைக்கப்பட்டது. அவர், சக ஆசிரியரான **திரு. அன்பழகன் தேவராஜ்** அவர்களுடன் இணைந்து, தேவையான திட்டமிடல், தன்னார்வலர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு, சமூகத்தின் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்போடு 2026ஆம் ஆண்டில் பள்ளியை நிறுவினர்.

முழுமையாகத் தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பால் இயங்கும் நமது பள்ளி, சமூக ஒற்றுமைக்கும் விடாமுயற்சிக்கும் சான்றாகத் திகழ்கிறது. பள்ளிக்கு வரும் குழந்தைகளின் குதூகலமும் பெற்றோர்களின் மகிழ்ச்சியும் இந்த உழைப்பிற்குக் கிடைத்த அரிய பலன்களாகும்.

'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.'

என்ற திருக்குறளுக்கேற்ப, அனைவரது கூட்டு முயற்சியால் நனவான நமது சமூகத்தின் கனவே இப்பள்ளி.

பள்ளியை நிறுவுவதற்கு ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கிய பின்வரும் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்:

- திரு. ஆன்ட்ரு சார்ல்டன் (Dr. Andrew Charlton) – ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் (Federal Member of Parliament).
- திருமிகு. டோனா டேவிஸ் (Ms. Donna Davis) – நியூ சவுத் வேல்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் (Member of the New South Wales Parliament).

# பாலர் மலர் பாரமட்டா பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

• திருமிகு. ஜெனிபர் ரைலி (Ms.Jennifer Riley) – பாரமட்டா பொதுப் பள்ளி முதல்வர் (Principal Parramatta Public School).

• திரு. ஸ்டீபன் பிரவுன் (Mr.Stephen Brown) – பாரமட்டா பொதுப் பள்ளி நிர்வாக மேலாளர் (Business Manager, Parramatta Public School).

• திருமிகு. காரா மதீசன் (Ms. Kara Matheson) – Hunter Community Languages அமைப்பின் செயல் அலுவலர் (Executive Officer, Hunter Community Languages).

• பாலர்மலர் நிர்வாகக் குழுவினர் மற்றும் பாரமட்டா கிளை நிர்வாகக் குழுவினர் (The Balarmalar Executive Committee and the Balarmalar Parramatta Branch Committee)

• பெற்றோர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சமூக ஆதரவாளர்கள் (Parents, volunteers and community supporters)

## மாணவர் சேர்க்கையும் ஆசிரியர்களின் பங்களிப்பும்

பாலர்மலர் பாரமட்டா தமிழ்த் தொடக்கப் பள்ளியில் 140 மாணவர்களும், தமிழ் உயர்நிலைப் பள்ளியில் 12 மாணவர்களும் என மொத்தம் 152 மாணவர்கள் தமிழைக் கற்று வருகின்றனர்.

20க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், மிகுந்த அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் மாணவர்களுக்குத் தமிழைக் கற்பித்து வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையின் கற்றல் தேவையையும் கருத்தில் கொண்டு, மொழித்திறனையும் தன்னம்பிக்கையையும் வளர்ப்பதுடன், தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் மீதான பற்றையும் வலுப்படுத்துகின்றனர். ஆசிரியர்களின் தன்னலமற்ற கல்விப்பணி நமது பள்ளியின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகிறது.

## முனைவர் இளங்கோ வேந்தனார் தேர்வு 2026

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு நடத்திய 2026ஆம் ஆண்டு முனைவர் இளங்கோ வேந்தனார் தேர்வில், நமது பள்ளியைச் சேர்ந்த 45 மாணவர்கள் பங்கேற்றனர். அவர்களில் 25 மாணவர்கள் மிகுஉயர் சிறப்புச் சித்தி (High Distinction) பெற்று, பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

மாணவர்களின் விடாமுயற்சி, ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மற்றும் பெற்றோர்களின் தொடர்ந்த ஊக்கம் ஆகியவற்றின் பலனாக இச்சாதனை அமைந்துள்ளது. தேர்வில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அமைச்சர் விருது

அமைச்சர் விருதிற்காக ஐந்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், இரண்டு மாணவர்கள் இவ்விருதிற்குப் பரிந்துரைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரான **செவ்வியன் அன்பழகன்** தகுதிச்சிறப்புவிருது (Merit Award) பெற்றுள்ளது நமது பள்ளிக்குக் கிடைத்த சிறப்பான அங்கீகாரமாகும்.

# பாலர் மலர் பாரமட்டா பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

விருது பெற்ற மாணவருக்கும், பரிந்துரைக்கப்பட்ட மாணவர்களுக்கும் எமது பாராட்டுகள். இத்தகைய அங்கீகாரங்கள், மாணவர்கள் மேலும் ஆர்வத்துடனும் தன்னம்பிக்கையுடனும் தமிழ்க் கல்வியில் சிறந்து விளங்க ஊக்கமளிக்கின்றன.

## பாலர்மலர் தமிழ்ப் போட்டிகள் 2026

பாலர்மலர் தமிழ்ப் போட்டிகளில் நமது மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, தமிழ்மொழித் திறன், நினைவாற்றல், படைப்பாற்றல் மற்றும் மேடைத் திறனை வெளிப்படுத்தினர்.

எட்டு வகையான போட்டிகளில் மொத்தம் 56 மாணவர்கள் பங்கேற்றனர். குறிப்பாக, குறுநாடகத்தில் 15 மாணவர்களும், பழமொழி-பொன்மொழிகள் போட்டியில் 12 மாணவர்களும், இளையோர் வினாடி வினாவில் 10 மாணவர்களும் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பழமொழி – பொன் மொழிகள் பிரிவில் **சிதிக்கஷா சித்தரஞ்சன் - முதல் இடமும்**, குழந்தைப் பாட்டுப்போட்டிப் பிரிவில் **ஆத்யா இளவேனில் முதல் இடமும்** பெற்றது போற்றுதற்குரியது.

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் இப்போட்டிகளுக்காக அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், துணைநின்ற பெற்றோர்களுக்கும் எமது நன்றிகள்.

## ASoGT தேர்வுகள் 2026

2026ஆம் ஆண்டு நடைபெற்ற ASoGT தேர்வுகளில் 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று, விருதுகளைப் பெற்று, நமது பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

முக்கியமாக விசேட எழுத்தறிவுப் போட்டி – **கீழ்ப் பிரிவில் சாய்வி வெங்கடேசன் முதல் இடமும்**, வாய்மொழித் தொடர்பாற்றல் – **மேற் பிரிவில் இன்தமிழரசி ஜெயக்குமார் முதல் இடமும்** பெற்று சுழற்கேடயம் பெற்றனர்.

மாணவர்களின் உழைப்பிற்கும் தமிழ்க் கல்வியின் மீதான ஆர்வத்திற்கும் கிடைத்த அங்கீகாரமாக இச்சாதனை அமைந்துள்ளது. விருதுகள் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது பாராட்டுகள். அவர்களின் கல்விப் பயணம் மேலும் பல சாதனைகளுடன் தொடர வாழ்த்துகிறோம்.

## வெல்லும் சொல் 2026

கம்பன் கழகம் ஆஸ்திரேலியா நடத்திய 'வெல்லும் சொல் 2026' நிகழ்வில், நமது பள்ளியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் பங்கேற்றனர்.

குறுகிய காலத்தில் தயாராகி, தங்களது தமிழ்ப் பேச்சுத் திறனை வெளிப்படுத்திய இம்மாணவர்கள் பாராட்டுகளையும் அங்கீகாரத்தையும் பெற்றனர். அவர்களின் ஆர்வமும் தன்னம்பிக்கையும் பாராட்டுக்குரியவை. மாணவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும் எமது நன்றிகள்.

## அரையாண்டுப் பெற்றோர் கூட்டம்

நமது பள்ளியின் அரையாண்டுப் பெற்றோர் கூட்டம் 29 ஆகஸ்ட் 2026 அன்று பாரமட்டா பொதுப்

# பாலர் மலர் பாரமட்டா பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

பள்ளியின் கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளியின் வரலாறு, நிர்வாகம், நிதி, கல்வி, தகவல் தொழில்நுட்பம், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்த அறிக்கைகள் பகிரப்பட்டன. பெற்றோர்கள் தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கினர். அவர்களிடமிருந்து கிடைத்த நேர்மறையான கருத்துகள், பள்ளியின் வளர்ச்சிப் பணிகளுக்கு மேலும் ஊக்கமளித்தன.

நிர்வாகிகள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்பால் வெற்றிகரமாக நடைபெற்ற இக்கூட்டம், பள்ளிக்கும் குடும்பங்களுக்கும் இடையிலான உறவையும் கூட்டுப் பொறுப்புணர்வையும் வலுப்படுத்தியது.

## ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் திறன் மேம்பாடு

நமது பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களில், தங்களது நேரவசதி மற்றும் ஆர்வத்திற்கேற்ப, தமிழ்க் கற்பித்தலையும் நிர்வாகச் செயல்பாடுகளையும் மேம்படுத்த உதவும் SICLE அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சி வகுப்புகள், குழந்தைப் பாதுகாப்புப் பயிற்சிகள், தலைமைத்துவ மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவற்றில் பங்கேற்றனர்.

இப்பயிற்சிகள், மாணவர்களின் தேவைக்கேற்பக் கற்பித்தல், பாதுகாப்பான கற்றல் சூழலை உருவாக்குதல், பாடத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் பொறுப்பான நிர்வாகத்தை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்குத் துணைபுரிகின்றன. தன்னார்வத்துடன் இப்பயிற்சிகளில் பங்கேற்றுத் தங்கள் திறன்களை வளர்த்துக்கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

## பள்ளிகள் இயங்கும் இடங்களும் எதிர்காலத் திட்டங்களும்

பாலர்மலர் பாரமட்டா தமிழ்த் தொடக்கப் பள்ளி தற்போது பாரமட்டா பொதுப் பள்ளியிலும், தமிழ் உயர்நிலைப் பள்ளி ஹாரிஸ் பார்க் சமூக மையத்திலும் இயங்கி வருகின்றன.

தற்போதைய இடவசதிக்கேற்ப, தொடக்கப் பள்ளியில் அதிகபட்சமாக 140 மாணவர்களையும், உயர்நிலைப் பள்ளியில் 20 மாணவர்களையும் மட்டுமே சேர்க்க முடிகிறது. தமிழ்க் கல்விக்கான சமூகத்தின் ஆர்வத்தையும் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில், 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கைக்காகக் காத்திருப்புப் பட்டியலில் உள்ளனர்.

மேலும் பல குழந்தைகளுக்குத் தமிழைக் கற்கும் வாய்ப்பை வழங்கும் நோக்கில், 2027ஆம் ஆண்டில் இரு பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கைக்கான இடங்களை அதிகரிக்க நிர்வாகக் குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அத்துடன், இரு பள்ளிகளையும் பாரமட்டா பொதுப் பள்ளி வளாகத்திலேயே நடத்துவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

தேவையான அனுமதிகளும் இடவசதிகளும் கிடைக்கும் பட்சத்தில், இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் காத்திருக்கும் மாணவர்களுக்குச் சேர்க்கை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வசதியான, ஒருங்கிணைந்த கல்விச் சூழலை உருவாக்க முடியும்.

# பாலர் மலர் பாரமட்டா பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

## நன்றியுரை

நமது பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தமிழ்த் தொடக்கப் பள்ளி மற்றும் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள். உங்கள் அர்ப்பணிப்பும் அன்பான வழிகாட்டுதலும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

பள்ளியின் அன்றாடச் செயல்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்கும் தகவல் தொழில்நுட்பக் குழுவினர், நிர்வாகக் குழுவினர் மற்றும் தன்னார்வலர்கள், தங்களது நேரத்தையும் திறமையையும் மனமுவந்து வழங்கி வருகின்றனர். அவர்களின் தன்னலமற்ற சேவையை நன்றியுடன் போற்றுகிறோம்.

தொடர்ந்து ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கும் பாலர்மலர் செயற்குழுவினருக்கும், இடவசதி மற்றும் நிர்வாக ஒத்துழைப்பை வழங்கும் பாரமட்டா பொதுப் பள்ளியின் முதல்வர், நிர்வாக மேலாளர் மற்றும் நிர்வாகத்தினருக்கும், ஹாரிஸ் பார்க் சமூக மையத்திற்கும் எமது சிறப்பான நன்றிகள்.

ஆர்வத்துடன் தமிழைக் கற்கும் மாணவர்கள், அவர்களின் கற்றலுக்குத் துணைநிற்கும் பெற்றோர்கள், பள்ளியின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், சமூக உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும், நமது குழந்தைகளின் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் அடையாளத்தைப் பேணும் இக்கல்விப் பயணத்திற்கு வலிமை சேர்க்கிறது.

## நிறைவுரை

சமூகத்தின் நீண்டநாள் கனவாகத் தொடங்கி, 152 மாணவர்கள் தமிழைக் கற்கும் கல்விக் குடும்பமாக நமது பள்ளி வளர்ந்துள்ளது. மாணவர்களின் கல்விச் சாதனைகள், கலை மற்றும் மொழிப் போட்டிகளில் பங்கேற்பு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, பெற்றோர்களின் ஒத்துழைப்பு ஆகியவை இந்தப் பயணத்தின் சிறப்பான அடையாளங்களாகும்.

இதுவரை பெற்றுள்ள முன்னேற்றம் அனைவரது கூட்டு உழைப்பின் பலனாகும். இதே ஒற்றுமையுடனும் பொறுப்புணர்வுடனும் தொடர்ந்து செயல்பட்டு, மேலும் பல குழந்தைகளுக்குத் தமிழ்க் கல்வி வாய்ப்பை வழங்குவோம். தமிழை அறிவுடனும் அன்புடனும் கற்று, பெருமையுடன் பயன்படுத்தும் தலைமுறையை உருவாக்க இணைந்து பணியாற்றுவோம்.

**தமிழால் இணைவோம்; கல்வியால் உயர்வோம்; தலைமுறைகள் தோறும் தமிழைச் செழிக்கச் செய்வோம்!**

நன்றி,



P. Jayakumar

ஜெயக்குமார் பாண்டியன்
தலைவர்
பாலர் மலர் பாரமட்டா தமிழ்ப் பள்ளி

D. Anbu

அன்பழகன் தேவராஜ்
செயலாளர்
பாலர் மலர் பாரமட்டா தமிழ்ப் பள்ளி



# SCHOOL COMMITTEES - 2026

## Parramatta - பரமட்டா

| Committee/Role | Member's Name | பொறுப்பு | பெயர் |
|---|---|---|---|
| President | Mr. Jayakumar Pandiyan | தலைவர் | திரு. ஜெயக்குமார் பாண்டியன் |
| Secretary | Mr. Anbazhagan Devaraj | செயலாளர் | திரு. அன்பழகன் தேவராஜ் |
| Treasurer | Mr. Suthakar Balakrishnan | பொருளாளர் | திரு. சுதாகர் பாலகிருஷ்ணன் |
| | | | |
| Balarmlar Parramatta Tamil School - Admin Team - பாலர் மலர் பரமட்டா தமிழ்ப் பள்ளி – நிர்வாகக் குழு | | | |
| Admin Lead | Mr. Shanmugavel Sampath | நிர்வாகத் தலைவர் | திரு. சண்முகவேல் சம்பத் |
| Admin Team | Mrs. Soundaravalli Madheswaran | நிர்வாகக் குழு | திருமதி. சௌந்தரவல்லி மாதேஸ்வரன் |
| Admin Team | Mrs. Ramya Aruldhas | நிர்வாகக் குழு | திருமதி. ரம்யா அருள்தாஸ் |
| Admin Team | Mr. Arun Shankar Balasubramanian | நிர்வாகக் குழு | திரு. அருண் சங்கர் பாலசுப்பிரமணியன் |
| Admin Team | Mr. Suresh Appao Gangatharan | நிர்வாகக் குழு | திரு. சுரேஷ் அப்பாவு கங்காதரன் |
| Admin Team | Mr. Vishnu Nadan | நிர்வாகக் குழு | திரு. விஷ்ணு நாதன் |
| | | | |
| Balarmalar Parramatta Tamil School – IT Team - பாலர் மலர் பரமட்டா தமிழ்ப் பள்ளி – தகவல் தொழில்நுட்பக் குழு | | | |
| IT Lead | Mr. Ravichandhiran Chandrasekaran | தகவல் தொழில்நுட்பத் தலைவர் | திரு. ரவிச்சந்திரன் சந்திரசேகரன் |
| | | | |
| Art and Cultural Team - கலை மற்றும் பண்பாட்டுக் குழு | | | |
| Art and Cultural Coordinator | Mrs. Krithika Rajendran | கலை மற்றும் பண்பாட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் | திருமதி. கிருத்திகா ராஜேந்திரன் |
| Art and Cultural Team | Mrs. Ambika Rajavelu | கலை மற்றும் பண்பாட்டுக் குழு | திருமதி. அம்பிகா ராஜவேலு |
| Art and Cultural Team | Mrs. Sarayu Murugesan | கலை மற்றும் பண்பாட்டுக் குழு | திருமதி. சரயு முருகேசன் |
| Art and Cultural Team | Mrs. Praveen Padmanaban | கலை மற்றும் பண்பாட்டுக் குழு | திரு. பிரவீன் பத்மநாபன் |
| Art and Cultural Team | Mrs. Farhana Mohaideen | கலை மற்றும் பண்பாட்டுக் குழு | திருமதி. பர்ஹானா மொகைதீன் |
| Art and Cultural Team | Mrs. Vijayalakshmi Karuppaiah | கலை மற்றும் பண்பாட்டுக் குழு | திருமதி. விஜயலட்சுமி கருப்பையா |
| | | | |
| School Assembly Team - பள்ளிக் கூட்ட ஒருங்கிணைப்பு குழு | | | |
| Assembly Coordinator | Mrs. Lalitha Anbazhagan | பள்ளிக் கூட்ட குழு ஒருங்கிணைப்பாளர் | திருமதி. லலிதா அன்பழகன் |
| Assembly Team | Mrs. Saranya Natarajan | பள்ளிக் கூட்ட குழு | திருமதி. சரண்யா நடராஜன் |
| | | | |
| School Magazine Team - பள்ளி இதழ் குழு | | | |
| Magazine Coordinator | Mrs. Abinaya Thiagarajan | பள்ளி இதழ் குழு ஒருங்கிணைப்பாளர் | திருமதி. அபிநயா தியாகராஜன் |
| Magazine Team | Mrs. Preethy Radhakrishnan | பள்ளி இதழ் குழு | திருமதி. ப்ரீத்தி ராதாகிருஷ்ணன் |
| Magazine Team | Mrs. Sivambika Selvam | பள்ளி இதழ் குழு | திருமதி. சிவாம்பிகா செல்வம் |
| Magazine Team | Mrs. Saranya Natarajan | பள்ளி இதழ் குழு | திருமதி. சரண்யா நடராஜன் |

# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



Guru Arpanaa Hariharashankar (Year 3)




Ishaan Supaskaran (Year 1)






# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்










# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



Kayan Arun Kumar (Year 1)







# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்



Devarupasree Pandian (Year 1)



Prithvi Arulmurugan (Year 5)





Thanvik Sai Balaji (Kindy)

# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்










# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

# பாரமட்டா பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்






# Parramatta Kindergarden Class A



# Parramatta Kindergarden Class B



# Parramatta Kindergarden Class C



# Parramatta Year 1



# Parramatta Year 2



# Parramatta Year 3



# Parramatta Year 4



# Parramatta Year 5



# Parramatta Year 6



# Parramatta Year 7



## Parramatta Year 8



## Parramatta Year 9



## Parramatta Primary School Bridging Class A



## Parramatta Primary School Bridging Class B



## Parramatta Primary School Bridging Class C



## Parramatta Primary School Bridging Class D



# Parramatta High School Bridging Class



# Parramatta Primary School Teachers



# Parramatta High School Teachers



# Parramatta Admin Team



# Parramatta Excecutive Committee



# எமது ஆசிரிய பெருமக்கள்

## Parramatta — பாரமட்டா

### Balarmalar Parramatta Primary School -பாலர் மலர் பரமட்டா தொடக்கப் பள்ளி

| | | | |
|---|---|---|---|
| Primary School Principal | Mr. Sanjeev Prabhu Shanmugam | தொடக்கப் பள்ளி முதல்வர் | திரு. சஞ்சீவ் பிரபு சண்முகம் |
| Teacher | Mrs. Anusuya Mathiyazhagan | ஆசிரியர் | திருமதி. அனுசுயா மதியழகன் |
| Teacher | Mr. Balaguru Muralidharan | ஆசிரியர் | திரு. பாலகுரு முரளிதரன் |
| Teacher | Mr. Naseerudden V A B | ஆசிரியர் | திரு. நசீருத்தீன் வி ஏ பி |
| Teacher | Mr. Anbazhagan Devaraj | ஆசிரியர் | திரு. அன்பழகன் தேவராஜ் |
| Teacher | Mrs. Lalitha Anbazhagan | ஆசிரியர் | திருமதி. லலிதா அன்பழகன் |
| Teacher | Mrs. Maheswari Shanmugam | ஆசிரியர் | திருமதி. மகேஸ்வரி சண்முகம் |
| Teacher | Mrs. Nanthini Parthiban | ஆசிரியர் | திருமதி. நந்தினி பார்த்திபன் |
| Teacher | Mrs. Preethy Radhakrishnan | ஆசிரியர் | திருமதி. ப்ரீத்தி ராதாகிருஷ்ணன் |
| Teacher | Mrs. Rachel Christa Baby | ஆசிரியர் | திருமதி. ரேச்சல் கிறிஸ்டா பேபி |
| Teacher | Mrs. Rafiq Taj Abdul Rasul | ஆசிரியர் | திருமதி. ர:பிக் தாஜ் அப்துல் ரசூல் |
| Teacher | Mrs. Rajalakshmi Murugesan | ஆசிரியர் | திருமதி. ராஜலட்சுமி முருகேசன் |
| Teacher | Mrs. Rathipriya Selvaraj | ஆசிரியர் | திருமதி. ரதிப்ரியா செல்வராஜ் |
| Teacher | Mrs. Saranya Natarajan | ஆசிரியர் | திருமதி. சரண்யா நடராஜன் |
| Teacher | Mrs. Sindhu Murugesan | ஆசிரியர் | திருமதி. சிந்து முருகேசன் |
| Teacher | Mrs. Sitakumari Dineshkumar | ஆசிரியர் | திருமதி. சீதாகுமாரி தினேஷ்குமார் |
| Teacher | Mrs. Sivambika Selvam | ஆசிரியர் | திருமதி. சிவாம்பிகா செல்வம் |
| Teacher | Mrs. Subashree Ravi | ஆசிரியர் | திருமதி. சுபஸ்ரீ ரவி |
| Teacher | Mrs. Tharani V | ஆசிரியர் | திருமதி. தாரணி வி |

### Balarmalar Parramatta High School - பாலர் மலர் பரமட்டா உயர்நிலைப் பள்ளி

| | | | |
|---|---|---|---|
| High School Principal | Mrs. Gajalakshmi Jayakumar | உயர்நிலைப் பள்ளி முதல்வர் | திருமதி. கஜலட்சுமி ஜெயக்குமார் |
| Teacher | Mrs. Kamakshi Viswanathan | ஆசிரியர் | திருமதி. காமாட்சி விஸ்வநாதன் |
| Teacher | Mrs. Karthika Manickavasagam | ஆசிரியர் | திருமதி. கார்த்திகா மாணிக்கவாசகம் |
| Teacher | Mr. Aravindan Ramasami | ஆசிரியர் | திரு. அரவிந்தன் ராமசாமி |

### Balarmalar Parramatta Volunteers - பாலர் மலர் பரமட்டா தன்னார்வலர்கள்

| | | | |
|---|---|---|---|
| Volunteer | Mr. Chandramohan Subramanian | தன்னார்வலர் | திரு.சந்திரமோகன் சுப்பிரமணியன் |
| Volunteer | Mrs. Reena Rose Raj Joswin Paul | தன்னார்வலர் | திருமதி.ரீனா ரோஸ் ராஜ் ஜோஸ்வின் பால் |
| Volunteer | Mrs. Amutha Kalichamy | தன்னார்வலர் | திருமதி. அமுதா காளிச்சாமி |
| Volunteer | Mr. Sathish Tamilselvan | தன்னார்வலர் | திரு.சதீஷ் தமிழ்செல்வன் |
| Volunteer | Mrs. Lokapriya Thangavel Shanmugar | தன்னார்வலர் | திருமதி. லோகப்ரியா தங்கவேல் சண்முகம் |
| Volunteer | Mr. Raghavan Iyengar | தன்னார்வலர் | திரு.ராகவன் ஐயங்கார் |
| Volunteer | Mr. Arun Kumar | தன்னார்வலர் | திரு.அருண் குமார் |
| Volunteer | Mrs. Deepika Dhandapani | தன்னார்வலர் | திருமதி. தீபிகா தண்டபாணி |
| Volunteer | Mrs. Geetha Krishnamoorthy | தன்னார்வலர் | திருமதி. கீதா கிருஷ்ணமூர்த்தி |
| Volunteer | Mr. Gokul Jayakumar | தன்னார்வலர் | திரு.கோகுல் ஜெயக்குமார் |
| Volunteer | Mr. Karumalaiyan S | தன்னார்வலர் | திரு.கருமலையான் S |
| Volunteer | Mr. Kumaresan Muniyappan | தன்னார்வலர் | திரு.குமரேசன் முனியப்பன் |
| Volunteer | Mr. Manikandan Ganesan | தன்னார்வலர் | திரு.மணிகண்டன் கணேசன் |
| Volunteer | Mrs. Nishanthi Supaskaran | தன்னார்வலர் | திருமதி.நிஷாந்தி சுபாஸ்கரன் |
| Volunteer | Mrs. Pavithra Devi Baskaran | தன்னார்வலர் | திருமதி.பவித்ரா தேவி பாஸ்கரன் |
| Volunteer | Mrs. Rajalakshmi V | தன்னார்வலர் | திருமதி.ராஜலட்சுமி வி |
| Volunteer | Mrs. Ramya Sathish | தன்னார்வலர் | திருமதி.ரம்யா சதீஷ் |
| Volunteer | Mr. Sasikumar Marimuthu | தன்னார்வலர் | திரு.சசிகுமார் மாரிமுத்து |
| Volunteer | Mr. Sathish Perumal | தன்னார்வலர் | திரு.சதீஷ் பெருமாள் |
| Volunteer | Mr. Selvaraj Kandasamy | தன்னார்வலர் | திரு.செல்வராஜ் கந்தசாமி |
| Volunteer | Mr. Selvarasu V | தன்னார்வலர் | திரு.செல்வராசு வி |
| Volunteer | Mrs. Valliammai Lakshmanan | தன்னார்வலர் | திருமதி.வள்ளியம்மை லட்சுமணன் |

# Minister's Award Winners - 2026



செவ்வியன் அன்பழகன்
Merit

# Balar Malar Tamil Competition Winners - 2026



ஆத்யா இளவேனில்
முதல் இடம்
குழந்தைப் பாட்டுப்போட்டி
ஆ பிரிவு



சிதிக்ஷா சித்தரஞ்சன்
முதல் இடம்
பழமொழி-பொன் மொழிகள்
அ பிரிவு



சம்யுக்தா சூரியா
உஷாநந்தினி
இரண்டாம் இடம்
திருக்குறள்-செப்புரள் மனனப்போட்டி-ஈ பிரிவு



இளம்பரிதி அன்பழகன்
சிறப்பு பரிசு
கதை சொல்லும் போட்டி-இ பிரிவு



செவ்வியன் அன்பழகன்
சிறப்பு பரிசு
அடிப்படை எழுத்து அறிவுப் போட்டி
அ பிரிவு



ஸ்ரீமத் சஞ்சீவ் பிரபு
சிறப்பு பரிசு
அடிப்படை எழுத்து அறிவுப் போட்டி
ஆ பிரிவு



நிதர்சனா ஜெயக்குமார்
சிறப்பு பரிசு
அடிப்படை எழுத்து அறிவுப் போட்டி

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Abdush Shahid Naseerudeen
High Distinction



Adhvikaa Balaji
High Distinction



Akshara Vijay
High Distinction



Anneka Karthikeyan
High Distinction



Diya Kamesh
High Distinction



Harshini Pothiraj
High Distinction



Ilamparithi Anbazhagan
High Distinction



Inthamizharasi Jayakumar
High Distinction



Jessica Suthakar
High Distinction



Judith Reny Winhart Joswin Paul
High Distinction



Lavisha Karumalaiyan
High Distinction



Mithran Arun Udaya Kumar
High Distinction



Nidharsana Jayakuma
High Distinction



Ponnila Chandramohan
High Distinction



Prisha Ramesh
High Distinction



Prithvi Arulmurugan
High Distinction

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Rithvikpriya Sharavanan
High Distinction



Rudrakshana Ravichandhiran
High Distinction



Saaive Vengatesan
High Distinction



Sashrika Arun Shankar
High Distinction



Sevviyan Anbazhagan
High Distinction



Shri Abhinayaa Satheesh Babu
High Distinction



Smriti Raghavan
High Distinction



Srimat SanjeevPrabu
High Distinction

# ASoGT Competition Winners - 2026



**இன்தமிழரசி ஜெயக்குமார்**
First Prize (Grade A) in Senior, Verbal Communication Third Prize (Grade A) Senior Writing Competition (Grade A ) Senior Special Poetry( Thirukkural)



**இளம்பரிதி அன்பழகன்**
பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (ஆண்கள்) இரண்டாம் போட்டி வாய்மொழித் தொடர்பாற்றல் - மேற் பிரிவு (10 வயது ஆண்கள்) அப்பாட எழுத்தறியும் போட்டி - மேற் பிரிவு Grade A



**செவ்வியன் அன்பழகன்**
பேச்சுப் போட்டி - மேற் பிரிவு (ஆண்கள்) இரண்டாம் போட்டி வாய்மொழித் தொடர்பாற்றல் - மேற் பிரிவு (11 வயது ஆண்கள்) அப்பாட எழுத்தறியும் போட்டி - மேற் பிரிவு Grade A



**ருத்ராக்சனா ரவிச்சந்திரன்**
Special Solo Performance - Grade B
Verbal Communication central division - Grade B



**நிதர்சனா ஜெயக்குமார்**
Advanced Senior Division Basic Writing Competition Second Prize (Grade A)



**சாய்வி வெங்கடேசன்**
விசேட எழுத்தறியும் போட்டி - கீழ்ப் பிரிவு, தேசிய விசேட எழுத்தறியும் போட்டி - கீழ்ப்பிரிவு First Prize(Grade A) கவிதை மனனப் போட்டி - கீழ் பிரிவு (பெண்கள்) Grade A



**ஜுடித் ரெனி வின்ஹார்ட்**
Special Poetry (Thirukkural) - Intermediate division - Grade A
வாய்மொழித் தொடர்பாற்றல் Intermediate division - Grade B



**சஞ்சிதசாசனா ஜெயக்குமார்**
Poetry Competition - Grade B
Special Poetry (Aathisoodi) - Grade C



**ரித்விக்பிரியா சரவணன்**
Special Poetry (Thirukkural) Intermediate division - Grade A
Speech Competition Intermediate division - Grade A



**கவின் ராஜகோபால்**
விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) - மத்திய பிரிவு - Grade A
பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு - Grade A Third Prize (Selected for Nationals)



**அரவிந்த் கிருஷ்ணா தயாகுமரன்**
வாய்மொழித் தொடர்பாற்றல் - கீழ்ப் பிரிவு (ஆண்கள் - 9 வயது First Prize(Grade A) , விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) - மத்திய பிரிவு - ஆண்கள் - இறுதிப் போட்டி, கவிதை மனனப் போட்டி - கீழ் பிரிவு (ஆண்கள்) இறுதிப் போட்டி (Grade A)

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# தூவேக்கர்ஸ் ஹில்

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி

# பாலர் மலர் குவேக்கர்ஸ் ஹில் பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

"அன்புடன் பண்புடன் பொறுப்புடன் செயல்படுவோம்"

பேரன்புடையீர்! அனைவருக்கும் அன்பான வணக்கம்.

தாயாகிய தமிழைச்சிறு வாயாகிய தமிழச்
சேயாகிய தானுந்தகு தெளிவாகவே நாளும்
வாயாகியே கையாகியே மனமாகியே பூவுங்
காயாகியே கனியாகிடக் கற்றேயறி வுற்றாள்.

– புலவர் குழந்தை, இராவண காவியம்

தமிழ் எமக்குத் தாயாகவும், வழிகாட்டியாகவும், வாழ்வியல் நெறியாகவும் விளங்குகிறது. தமிழ்த் தாயின் பிள்ளைகளாகிய எமது மாணவர்கள், தமிழறிவிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் ஆழ்ந்து பயின்று, அறிவிலும் ஆளுமையிலும் தொடர்ந்து வளர்ந்து வருகின்றனர்.

தமிழ்மொழி, தமிழர் பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் உயரிய நோக்கத்துடன் இயங்கி வரும் பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகம், குவேக்கர்ஸ் ஹில், இவ்வாண்டு தனது 18ஆம் ஆண்டு கல்விச் சேவையை பெருமையுடன் தொடர்கிறது.

250-க்கும் மேற்பட்ட மாணவர்களும், 26 அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களும் இணைந்து பயணிக்கும் எமது பள்ளி, தாய்மொழிக் கல்வியை வளர்ப்பதோடு மட்டுமல்லாது, மாணவர்களின் திறமைகள், பண்புகள் மற்றும் தலைமைத்துவ ஆளுமையையும் மேம்படுத்த உறுதியாகச் செயல்பட்டு வருகிறது.

### சாதனையாளர் விருதுகள்

இவ்வாண்டிற்கான நியூ சவுத் வேல்ஸ் கல்வி அமைச்சின் சமூக மொழிப் பள்ளிகளுக்கான சாதனையாளர் விருதைப் பெற்ற செல்வி ரியானா ஹாஜி மற்றும் செல்வன் சாய் வள்ளியப்பன் கார்த்திக் ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### தமிழ்ப் போட்டிகள்

இவ்வாண்டு பாலர் மலர் தமிழ்ப் போட்டிகளில் பங்கேற்று தங்கள் பிரிவுகளில் சிறப்பிடம் பெற்ற செல்வி உர்வீ பரத், செல்வி திவிஷா ராம்குமார், இரண்டாம் இடம் பெற்ற செல்வி சிவானி மோகன்தாஸ் மற்றும் மூன்றாம் இடம் பெற்ற செல்வி நக்ஷத்திரா ஆகியோருக்கு எங்களது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

### தமிழ் மொழி வழிபாட்டுக் கூட்டங்கள்

மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது பல்வேறு எண்ணங்களுடனும் சிந்தனைகளுடனும் வரக்கூடும். அவர்களை நற்சிந்தனைகளுடன் கல்விச் சூழலுக்குள் அழைத்துச் செல்லும் நோக்கில், ஒவ்வொரு வாரமும் அனைத்து மாணவர்களும் வழிபாட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழ் மொழி வாழ்த்தைப் பாடினர். மேலும், வகுப்பு வாரியாகப் பொறுப்பேற்று மாணவர்களே கூட்டங்களை நடத்திச் சென்றதன் மூலம் அவர்களது தன்னம்பிக்கையும் தலைமைத்துவத் திறன்களும் மேம்பட்டன.

# பாலர் மலர் குவேக்கர்ஸ் ஹில் பள்ளியின்
# 2026 ஆம் ஆண்டறிக்கை

### "பேசும் புத்தகங்கள்' நிகழ்ச்சி"

கடந்த ஆண்டுகளின் தொடர்ச்சியாக, மாணவர்களின் வாசிப்புத் திறனையும் கேட்டறிதல் திறனையும் மேம்படுத்தும் நோக்கில், 'பேசும் புத்தகங்கள்' என்ற சிறப்பு வாசிப்பு அமர்வு இவ்வாண்டும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இந்த முயற்சியின் மூலம், மாணவர்கள் தமிழ் மொழியின் நுட்பத்தையும் நயத்தையும் உணர்ந்து, தன்னம்பிக்கையுடன் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

### நூலக வள மேம்பாடு

மாணவர்கள் பலதரப்பட்ட நூல்களை வாசித்து பொது அறிவையும் மொழித்திறனையும் வளர்த்துக்கொள்ளும் வகையில், இவ்வாண்டு எமது நூலகத்திற்கு மேலும் பல புதிய நூல்கள் சேர்க்கப்பட்டன. மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கும் சுயகற்றலுக்கும் நூலகம் ஒரு வளமான களமாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது.

### மாணவர் ஊக்குவிப்பு திட்டம்

மாணவர்களின் நல்வாழ்வு, தன்னம்பிக்கை மற்றும் சுயமரியாதையை மேம்படுத்தும் நோக்கில், இவ்வாண்டும் தகுதியான மாணவர்களுக்கு பல்வேறு பாராட்டு விருதுகள் வழங்கப்பட்டன. வகுப்பறையில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு நட்சத்திரங்கள் வழங்கப்படுவதுடன், தொடர்ந்து சிறப்பாகச் செயல்படும் மாணவர்கள் ஆண்டின் இறுதியில் சிறப்பு அங்கீகாரங்களையும் பெற்றனர்.

### பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு

மாணவர்களின் கல்வி முன்னேற்றம், கற்றல் தேவைகள் மற்றும் நடத்தை சார்ந்த விடயங்கள் குறித்து விரிவாகப் பகிர்ந்து கொள்ளும் வகையில், இவ்வாண்டும் பெற்றோர் ஆசிரியர் நேருக்கு நேர் சந்திப்புகள் நடத்தப்பட்டன.

### தொழில்நுட்பத்தின் பயன்பாடு

ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் தொடர்பில் இருக்கவும், மாணவர்களின் வகுப்பறைச் செயல்பாடுகளை பெற்றோர்கள் தொடர்ந்து அறிந்து கொள்ளவும் நீளாவிழிழ செயலி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### திட்ட அடிப்படையிலான கற்றல்

மாணவர்கள் தமிழ்மொழியை ஆழமாகக் கற்று, உண்மையான சூழல்களில் பயன்படுத்தும் திறனை வளர்க்கும் நோக்கில் திட்ட அடிப்படையிலான கற்றல் முறை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. மாணவர்கள் சிறு குழுக்களாக இணைந்து தமக்குப் பிடித்த தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து ஆராய்ந்து, பருவ இறுதியில் நடைபெற்ற திட்டப்பணி அரங்கேற்ற நாளில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் தங்கள் கற்றலை விளக்கமாகப் பகிர்ந்தனர்.

### மாணவர் மன்றம்

மாணவர் மன்றம் பள்ளிச் சமூகத்தில் தொடர்ந்து செயற்பாட்டுமிக்க பங்கை வகித்து, பள்ளி மொழி வழிபாட்டுக் கூட்டங்கள் மற்றும் திட்டப்பணி அரங்கேற்ற நிகழ்வுகளை திறம்பட ஒருங்கிணைத்து

# பாலர் மலர் குவேக்கர்ஸ் ஹில் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

நடத்தியது. இதன் மூலம் மாணவர்களின் தலைமைத்துவம், பொறுப்புணர்வு மற்றும் பள்ளிச் செயல்பாடுகளிலான ஈடுபாடு மேலும் வலுப்பெற்றது.

**வளங்கள் மற்றும் வசதிகள்**

இவ்வாண்டு அனைத்து மாணவர்களுக்கும் புதிய பள்ளிப் பைகள் வழங்கப்பட்டன. மேலும், கற்பித்தல் மற்றும் கற்றலை மேம்படுத்தும் நோக்கில் கூடுதல் ஆசிரியர்களுக்கு புதிய மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

அத்துடன், திட்டப்பணி அரங்கேற்றங்கள் மற்றும் பள்ளி வழிபாட்டுக் கூட்டங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில், 120 அங்குலத் திரை மற்றும் உயர்தர ஒளிப்படக் காட்சிக்கருவி (Projector) வாங்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன.

அறிமின் அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார் வாய்ச் சொல்.

– நாலடியார்

அறநெறி, பணிவு, பொறுமை மற்றும் பெரியோரின் அறிவுரையை மதித்துப் போற்றும் உயரிய வாழ்வியல் பண்புகளை எடுத்துரைக்கும் இப்பாடல், எமது கல்விப் பயணத்தின் அடிப்படை விழுமியங்களை அழகாக பிரதிபலிக்கிறது.

எங்கள் பள்ளியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பின்னால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான பங்களிப்பு உள்ளது. குறிப்பாக, பல பெற்றோர்கள் ஆசிரியர்களாகவும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தன்னார்வத் தொண்டாற்றி வருவது எமது பள்ளியின் மிகப்பெரிய பலமாகும்.

பள்ளியின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்து வரும் எங்கள் மாணவச் செல்வங்கள், ஆசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் தலைமுறைகள் தழைத்து வளர, அனைவரின் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் தொடர வாழ்த்துகின்றோம்.

இங்ஙனம்,
தமிழ்ப் பள்ளி நிர்வாகிகள்
பாலர் மலர் தமிழ்க் கல்விக் கழகம், குவேக்கர்ஸ் ஹில்

## Long Service Teachers Award

திரு. வேல்முருகன் பாண்டியன் (15 வருடம்)

திரு. வெங்கட்ராமன் பாலகிருஷ்ணன் (15 வருடம்)

திருமதி. கவிதா கலியமூர்த்தி (5 வருடம்)

## Young Teachers Award

திரு. நிதின் கார்த்திக்

## MANAGEMENT COMMITTEE - நிர்வாகிகள் குழு - 2026

### *Quakers Hill* - குவேக்கர்ஸ் ஹில்

| *Name* | பெயர் |
|---|---|
| Mrs. Anusha Raghavan | திருமதி. அனுஷா ராகவன் |
| Mrs. Anuradha Natarajan | திருமதி. அனுராதா நடராஜன் |
| Mr. Aravind Sai | திரு. அரவிந்த் சாய் |
| Mrs. Jayashree Narayanan | திருமதி. ஜெயஸ்ரீ நாராயணன் |
| Mr. Karthik Thiruppathy | திரு. கார்த்திக் திருப்பதி |
| Mrs. Rajeswari Krishnamoorthy | திருமதி. ராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி |
| Mr. Ramesh Nagendra Pillai | திரு. ரமேஷ் நாகேந்திர பிள்ளை |
| Mr. Sakthe Balan Vadivel | திரு. சக்தி பாலன் வடிவேல் |
| Mrs. Sivagami Karthik | திருமதி. சிவகாமி கார்த்திக் |
| Mrs. Suganya Subash | திருமதி. சுகன்யா சுபாஷ் |
| Mr. Velmurugan Pandian | திரு. வேல்முருகன் பாண்டியன் |
| Mr. Venkatraman Balakrishnan | திரு. வெங்கட்ராமன் பாலகிருஷ்ணன் |

# குவேக்கர்ஸ் ஹில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# குவேக்கர்ஸ் ஹில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்












# குவேக்கர்ஸ் ஹில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்

# குவேக்கர்ஸ் ஹில் பாலர் மலர் தமிழ்ப் பள்ளி குழந்தைகளின் படைப்புகள்









## குவேக்கர்ஸ் ஹில் இளம் பாலர் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி பாலர் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட பாலர் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி ஒன்றாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட ஒன்றாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி இரண்டாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட இரண்டாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி மூன்றாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட மூன்றாம் வகுப்பு




## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி நான்காம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட நான்காம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முன்மாதிரி ஐந்தாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் முறைப்பட்ட ஐந்தாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் ஆறாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் ஏழாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் எட்டாம் வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் உயர்நிலை வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் சூட்டிகை வகுப்பு



## குவேக்கர்ஸ் ஹில் ஆசிரியர்கள் குழு



## குவேக்கர்ஸ் ஹில் நிர்வாக குழு



## எமது ஆசிரிய பெருமக்கள்

| *Quakers Hill* | குவேக்கர்ஸ் ஹில் |
|---|---|
| Miss. Aarthi Kavitha Veeraraghavan | செல்வி. ஆர்த்தி வீரராகவன் கவிதா |
| Mr. Akash Venkatraman | செல்வன். ஆகாஷ் வெங்கட்ராமன் |
| Mr. Damodharan Rajalingam | திரு. தாமோதரன் ராஜலிங்கம் |
| Mr. Nitin Karthik | திரு. நிதின் கார்த்திக் |
| Mr. Prabhakaran Chinnaiyan | திரு. பிரபாகரன் சின்னையன் |
| Mr. Rajasekaran Ravichandran | திரு. ராஜசேகரன் ரவிச்சந்திரன் |
| Mr. Velmurugan Pandian | திரு. வேல்முருகன் பாண்டியன் |
| Mr. Venkatraman Balakrishnan | திரு. வெங்கட்ராமன் பாலகிருஷ்ணன் |
| Mrs. Abitha Natarajan | திருமதி. அபிதா நடராஜன் |
| Mrs. Anuraadha Devi Muruganandam | திருமதி. அனுராதா தேவி முருகானந்தம் |
| Mrs. Anuradha Natarajan | திருமதி. அனுராதா நடராஜன் |
| Mrs. Anushri Ekambaram | திருமதி. அனுஸ்ரீ ஏகாம்பரம் |
| Mrs. Dhivya Chinnasamy | திருமதி. திவ்யா சின்னசாமி |
| Mrs. Kavitha Kaliamurthy | திருமதி. கவிதா கலியமூர்த்தி |
| Mrs. Loganayaki Ramasamy | திருமதி. லோகநாயகி ராமசாமி |
| Mrs. Padma Priya Ravi Shankar | திருமதி. பத்மபிரியா ரவிசங்கர் |
| Mrs. Rajeswari Krishnamoorthy | திருமதி. ராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி |
| Mrs. Seethalakshmi Subramanian | திருமதி. சீதாலட்சுமி சுப்பிரமணியன் |
| Mrs. Shanmuga priya Chinnadurai | திருமதி. சண்முக பிரியா சின்னதுரை |
| Mrs. Sivagami Karthik | திருமதி. சிவகாமி கார்த்திக் |
| Mrs. Solaiammal Venkatasami | திருமதி. சோலையம்மாள் வெங்கடசாமி |
| Mrs. Venmathi Pandian | திருமதி. வெண்மதி பாண்டியன் |
| Mrs. Vigneswari Boominathan | திருமதி. விக்னேஸ்வரி பூமிநாதன் |
| Ms. Binu Thanappapillai | திருமதி. பினு தானப்பப்பிள்ளை |
| Ms. Jayashree Suresh | திருமதி. ஜெயஸ்ரீ சுரேஷ் |
| Ms. Poorani Durai Ganesan | திருமதி. பூரணி துரை கணேசன் |

# பாலர் மலர் குவேக்கர்ஸ் ஹில் தமிழ்ப் பள்ளி முடிவுகள் – 2026

## இளம் பாலர் வகுப்பு - திருமதி. வெண்மதி பாண்டியன், திருமதி. பிது தானப்பப்பிள்ளை & திருமதி. நிவ்யா சின்னசாமி

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| ஆதிரா இளங்கோவன் | ஆத்யா அருணசுரேந்தர் | ஆத்விக் ராஜன் | ஆதித்யன் இளவரசன் | மாலா லக்ஷ்மி கெமெனி |
| ஆத்யா நந்த குமார் | அபிநயா சீனிவாசன் | அஸ்வின் சீனிவாசன் | அன்பறன் மகேஷ் குமார் | நிலன் நவின் |
| ஆத்யா வசந்த் | ஜான்வி கோகுல் கிருஷ்ணா | மாறன் ராஜகுமார் | | சாயனா திலக் |
| ஆருத் கே பைரா | காருண்ய கௌரி சங்கர் | தனவிக் பிள்ளை | | |
| அலீஷ் சுரேஷ் | லிசாலினி பாலாஜி | | | |
| ஜோஹன்னா அரோக்கியா | மயோன் துவாரக் ராஜசேகரன் | | | |
| வியன் தேவேந்திரன் | நித்திலா ஆவது விஜயா பாஸ்கர் | | | |
| | பரிபாலன் மோகன் பாபு | | | |
| | ரியா கௌசிக் | | | |
| | சஹானா ஹரிஷ் | | | |
| | சாய்ஆத்விக் கண்ணன் | | | |
| | சாதனா ஜெகதீசன் | | | |
| | தான்விக் ஜன பஞ்சாட்சரம் | | | |
| | தமிழ் அமுதன் | | | |
| | வைஷ்வி பிரசாந்த்குமார் | | | |
| | | | | |

## பாலர் வகுப்பு - திருமதி. ஜெயஸ்ரீ சுரேஷ், செல்வி. ஆர்த்தி வீரராகவன் கவிதா & திருமதி. லோகநாயகி ராமசாமி

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| அன்றிவா மனோஜ்வசந்தன் | ஆத்விக் பெண்ட்லிமரி | ஆதித்யா நாயர் | அருவி | |
| அறம் விஜயவேல் | ஆத்விக் மகேஷ் | நவிலன் ராகேஷ் | துருவ் விஜய் பாலு | |
| தீத்யா ஜெகநாத் | தியா தினேஷ் | ரியாசினி | | |
| கௌதம் ப்ரீத் விஜய் விராராஜ் | குருவரன் ஹரி கிருஷ்ணன் | ருத்ரதேவ் ராஜேஷ் | | |
| குருசரண் ராதாகிருஷ்ணன் | க்ருஷ் | சாஹிநி பாரத் | | |
| இளன் விஜயசேகரன் | நக்ஷத்திரா | ஷ்ரேயா சாய் | | |
| ஜோஷ்னா ரவீன் | சுபிசன் மணிகண்டன் | | | |
| ஜோஷினி நவீன் | | | | |
| கேஷவ் ராஜ்குமார் | | | | |
| லயஸ்ரீ | | | | |
| நர்த்தன் செந்தில் குமார் | | | | |
| நைரா நந்தகுமார் | | | | |
| பிரகதி கார்த்திக் | | | | |
| சாத்விக் தினேஷ் குமார் | | | | |
| சாய்ப்ரித்விக் புருஷோத்தம் | | | | |
| தன்விக் ஆனந்த பாலன் | | | | |
| | | | | |

## ஒன்றாம் வகுப்பு - திருமதி. அனுராதா நடராஜன் & திருமதி. விக்னேஸ்வரி பூமிநாதன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| ஆத்விக் மனோஜ் | சேத்னா ரகுபதி | அகில்சரண் வினோத் | | |
| தக்சேஷ் கார்த்திக் விஜய் விராராஜ் | தியா சதீஸ்பாபு | ஈஷா நந்தூரி | | |
| மீரா சஞ்ஜீவி | இவானா இயல் நோயல் | இர்ஷத் அலி | | |
| ப்ரனிதி ராம்குமார் | ஈஷான் கிஷோர் | கிரிஷா தங்கப்பன் | | |
| ராகமித்ரா விஜயராஜா | ஜனவ் கிஷோர் குமார் | விங்கிட் அய்யன் விக்னேஷ் | | |
| ரேச்சல் அருண் | கவின் சாய் காசி | மகிழ்யுகன் சிவபிரகாஷ் | | |
| சகஷ்ரா கணேஷ்பாண்டி | கயல் ஜெய்கணேஷ் | மிருதுளா குமார் | | |
| தேஜஸ்வி | மதுவந்தினி | | | |
| உர்வி பரத் | நியா | | | |
| | ராகவர்த்தினி கார்த்திகேயன் | | | |
| | ரியா நவின் | | | |
| | ரயன் ஜோ | | | |
| | சாத்விக் திருமலை | | | |
| | சிவானி மோகன்தாஸ் | | | |
| | வேதா ராதாகிருஷ்ணன் | | | |
| | வுகா ஸ்ராவ்னி | | | |
| | | | | |

## இரண்டாம் வகுப்பு - திருமதி. அனுராதா தேவி முருகானந்தம் & திருமதி. சீதாலட்சுமி சுப்பிரமணியன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| அக்ஷர | ஆருஷி கார்திகராஜா | அக்ஷரா சங்கர் | நேத்ரா நாயர் | ஆதித்யா |
| அனீகா நாகராஜன் | கிறிஸ்டாப் ஆர்லோ ஜோசப் | தக்சன் சக்திவேல் | | அஹானா சந்தோஷ் |
| தேவா சோமசுந்தரம் | ஹரிஷ் கோகுலன் | இனியா பிருபா | | அர்ஜுன் ராதாகிருஷ்ணன் கோதண்டராமன் |
| நியா நீபக் | ரிஷிகா ஜன பஞ்சாட்சரம் | கவிநயா | | வரிஷாஹரி |
| எவ்லின் வெஸ்லி | பர்வாஸ் சாய் சிந்தலா | மகிமா தங்கதுரை | | |
| இனியா விஜயசேகரன் | தாண்வி | நிவாந்த் அசோக் | | |
| கவின் தேவேந்திரன் | வேதஸ்ரீ விஜய் பாரத் | உமையாள் சுந்தரேஸ்வரன் | | |
| மாயா | யாதியா ஹரிநாத் | | | |
| ரித்தி ஹரிஷ்ங்கர் | | | | |
| தாரா ராம்பிரகாஷ் | | | | |
| | | | | |

## மூன்றாம் வகுப்பு - திருமதி. அனுஸ்ரீ ஏகாம்பரம் & திருமதி. அபிதா நடராஜன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| மகிழினி மகேஷ் குமார் | ஜேன் எஸ்தர் பெலிக்ஸ் | அத்ரித் கார்த்திகேயன் | தன்வி கோவிந்த் | |
| ப்ரணவ் பாலாஜி சாந்தி பிரியா | ஜெசிக்கா பெலிக்ஸ் | லோஹான் ஜவனீபன் | | |
| ரஜீனா | சுடர்வீ தாமோதரன் | மனஸ்வி கார்த்திகேயன் | | |
| ஸம்ரிட் ஸுரெஷ் | டான்யா பாலசந்தர் | மௌலிஷ் | | |
| விஷ்வா | துளசி அரவிந்த் | ருத்ரா ஆவுது விஜயா பாஸ்கர் | | |
| | எமிமா ஸ்டீபன் | | | |

## நான்காம் வகுப்பு - திருமதி. பத்மபிரியா ரவிசங்கர் & திருமதி. சண்முக பிரியா சின்னதுரை

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| நிவானி மோகன்தாஸ் | ஆதிய ஸ்ரீ கோயம்புத்தூர் ஹரிபிரசாத் | நியா அரவிந்த குமார் | | |
| எஸ். வி. ராகவ் | ஆராதனா | ஹரீஷ் ஆறுமுக ராஜா | | |
| | நந்தினி சோமசுந்தரம் | மேதினி நீவா காத்திகேயன் | | |
| | ரொஷ்வின்னா ஜோண்டெல் ஒய்ஸ் | சாஷா மோகன் | | |
| | சாய் தானஸ்ரயன் மோகன் பாபு | விஹான் சதீஷ் | | |
| | ஸ்ரீநேஷ் சங்கர் | | | |
| | சூர்யாதேவ் ராஜேஷ் | | | |
| | தனிஷ் முத்து குமரன் | | | |
| | வேத் கௌசிக் | | | |
| | வெற்றி ராஜ்குமார் | | | |
| | விட்டல் முகுட் | | | |

# பாலர் மலர் குவேக்கர்ஸ் ஹில் தமிழ்ப் பள்ளி முடிவுகள் – 2026

## ஐந்தாம் வகுப்பு - திருமதி. கவிதா கலியமூர்த்தி & திரு. தாமோதரன் ராஜலிங்கம்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| ஆத்விகா ஆனந்த் அக்கய்யா | ஆரவ் அருண் சுரேந்தர் | ஹன்சினி ராகேஷ் | | |
| ஆஷிக் ஷான் ஜோசப் | எரிக் லெஸ்லி | விராத் வசந்த் | | |
| பவிஷ்ய ஸ்ரீகிருஷ்ணன் | குஹன் பரணி | | | |
| தேவ தர்சன் நிரஞ்சன் குமார் | சாத்விக் தீபக் | | | |
| தர்ஷா கிஷோர் குமார் | | | | |
| ஹேசல் ஹில்டன் | | | | |
| மித்ரவிந்தா சிவப்பிரகாஷ் | | | | |
| பரிதி பாண்டியன் | | | | |
| ரியானா ஹாஜி | | | | |
| சாலிஹா | | | | |
| சிவா சாய் | | | | |
| விஷ்வேஸ்வர் நரேஷ்குமார் | | | | |
| வியன் தாமோதரன் | | | | |

## ஆறாம் வகுப்பு - திரு. பிரபாகரன் சின்னையன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| அனிருத் பாலாஜி | ஜெய்ஷனா தங்கதுரை | ஷஹபி முசாபர் சிக்கந்தர் | | தியா அசோக்குமார் |
| கயல் விழி | காவ்யா ஜெயக்குமார் | சைஃப் முசாபர் சிக்கந்தர் | | |
| யோஜித் பாலசந்தர் | மேதா கஜீபன் | | | |
| | மிதின் ராமர் | | | |
| | ஸ்ரீநிகா பத்மநாபன் | | | |
| | ஸ்ரீஷா ஆறுமுக ராஜா | | | |
| | தன்வி பாலாஜி | | | |
| | வித்தவ் அருனாச்சலாம் | | | |

## ஏழாம் வகுப்பு - திருமதி. ராஜேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| அக்ஷித்தா செந்தில் குமார் | அரஜுன ஷங்கர் | தரஷினி இராஜவேல் | | |
| தன்வந்த் ஜெய்கணேஷ் | ஹர்ஷவர்தன் நரேஷ்குமார் | ஜனா தீபக் | | |
| திவிஷா ராம்குமார் | மிதுன் குமார் | மணியன் பிரதீபன் பிரபாகரன் | | |
| ஷரவ்யா நித்யா சுரேஷ் | ரோஹன் பாலா ஆனந்த பாலன் | நிலானி வெண்பா சக்தி பாலன் | | |
| வித்யத் கிருஷ்ண நாகராஜன் | ருத்விகா சாய் | ரஷ்மிதா விஜய் | | |
| | சாக்ஷி ராம்பிரகாஷ் | விஷ்வசரணா சுந்தரேஸ்வரன் | | |
| | சன்விகா மகேஷ் | | | |

## எட்டாம் வகுப்பு - திருமதி. சோலையம்மாள் வெங்கடசாமி & திருமதி. பூரணி துரை கணேசன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| தசரத் பாலாஜி | அனன்யா இராமச்சந்திரன் | மிருணாள் | | |
| பிரணவ ஹரிஷங்கர் | அனிகா பரணி | பொற்கமலி ஜெயக்குமார் | | |
| ஷெரவின் ஜெரோம் சுபாஷ் | அஷ்வின் | தனீஷ் மோகன் ராஜ் | | |
| | அவனீஷ் நாகவிஜயன் | | | |

## இளநிலை வகுப்பு - திருமதி. சிவகாமி கார்த்திக், திரு. வெங்கட்ராமன் பாலகிருஷ்ணன் & திரு. வேல்முருகன் பாண்டியன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| அமுதா மணி | அக்ஷிதா பிரகாஷ் | | | |
| ஹரிஹரசுதன் வினோத் | ஸஹானா கிருஷ்ணா | | | |
| மகிழ் ராமர் | சுவாணிகா ஸ்ரீரஞ்சன் | | | |
| சாய் வள்ளியப்பன் கார்த்திக் | | | | |
| திரிநேத்ரா பாலாஜி | | | | |
| யாழினி மோகன் ராஜ் | | | | |

## குட்டிகை வகுப்பு - திரு. ராஜசேகரன் ரவிச்சந்திரன், திரு. நிதின் கார்த்திக் & செல்வன். ஆகாஷ் வெங்கட்ராமன்

| தனிச்சிறப்பு விருது | சிறப்பு விருது | பாராட்டு விருது | தகுதி விருது | பங்கேற்ப்பு விருது |
|---|---|---|---|---|
| கௌசிக் கௌரி சங்கர் | தருண இராஜவேல் | ஹரிணி பிரசாந்த்குமார் | கணிவ் முத்துக்கருப்பன் கார்த்திக் | கபிர் கார்த்திக் |
| முகுந்த் பழனிவேலு ரேவதி | கவின் நடராஜன் கார்த்திக் | நிசாந்த் | கற்பகாம்பாள் ராம் | சஞ்சீவ் சுரேஷ் |
| | ஸ்ரீ அருணா அருண்குமார் | தவான் ஜவனதீபன் | முஹம்மத் அலி | |
| | | | ருத்திரன் பழனிவேலு ரேவதி | |
| | | | சஹஸ்ர மித்ரா ஜூட்டு குரிய பிரசன்னா | |

# Minister's Award Winners - 2026



ரியானா ஹாஜி
Junior
Commended



சாய் வள்ளியப்பன் கார்த்திக்
Senior
Commended

# Balar Malar Tamil Competition Winners - 2026



உர்வீ பரத்
குழந்தைப் பாட்டுப்போட்டி - அ பிரிவு
முதல் பரிசு



நக்ஷத்திரா
குழந்தைப் பாட்டுப்போட்டி - அ பிரிவு
மூன்றாம் பரிசு



சிவானி மோகன்தாஸ்
மழலைமொழி-பொன் மொழிகள்-இ பிரிவு
இரண்டாம் பரிசு



திவிஷா ராம்குமார்
கதை சொல்லும் போட்டி-ஆ பிரிவு
இரண்டாம் பரிசு
அழகுபடை எழுத்து அறிவுப் போட்டி-ஆ பிரிவு
முதல் பரிசு



வியன் தாமோதரன்
திருக்குறள்-செய்யுள் மனனப்போட்டி-அ பிரிவு
சிறப்பு பரிசு



நிலானி மோகன்தாஸ்
திருக்குறள்-செய்யுள் மனனப்போட்டி-இ பிரிவு
சிறப்பு பரிசு

# Dr. Ilango Memorial Exam High Distinction Achievers - 2026



Lohaann Javanatheepan
Basic
High Distinction



Sudarvi Damodharan
Basic
High Distinction



Nilanee Mohandoss
Basic
High Distinction



Mukund Palanivelu
Revathi Basic
High Distinction



Ruddran Palanivelu
Revathi Basic
High Distinction



Viyan Damodharan
Intermediate Lower
High Distinction

பாலர் மலர் தமிழ் கல்விக் கழகம்




# செவன்ஹில்ஸ்

# பாலர் மலர் தமிழ்ப் பள்ளி




## PETAL & BLOOM FLORALS

We create handcrafted floral arrangements for all occasions, including bridal and baby garlands, flower ornaments, door decorations, and bouquets. Our fresh, vibrant flowers add charm and joy to every celebration !

- Bouquets
- Bridal Bouquets
- Bridal Garlands
- Bridal Doli
- Door Decoration
- Flower Ornaments For Hair and Hand
- Flower Strings
- Flower Petals
- Loose Flowers (Puja)

SCAN ME — Instagram

SCAN ME — Facebook

SCAN ME — What's app

**FRESH FLOWER DELIVERY TO YOUR DOORSTEP**

Terms & Conditions Apply!

**Email:**
petalnbloomflorals@gmail.com

**Phone:**
+61468637333

**Phone:**
+61 480 541 249

**Website:**
www.petalandbloomflorals.com.au

**Address:**
206B Crown St, Grantham Farm, NSW 2765

**Find us on:**

# பாலர் மலர் செவன்ஹில்ஸ் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளி 33ஆம் ஆண்டு அறிக்கை - 2026

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

- திருவள்ளுவர், திருக்குறள் 391

கல்வி என்பது கற்றலோடு நிறைவுபெறுவதில்லை; கற்றதை வாழ்வில் நிலைநிறுத்தும் போதே அதன் உண்மையான பயன் மலர்கிறது. வள்ளுவரின் இவ்வழிகாட்டுதலை நெஞ்சில் ஏந்தி, தமிழ் மொழி, பண்பாடு, அடையாளம் ஆகியவற்றை அடுத்த தலைமுறையிடம் உயிர்ப்புடன் கொண்டு சேர்க்கும் பணியில் பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளி தொடர்ந்து பயணிக்கிறது.

எமது பள்ளியுடன் அன்பாலும் அர்ப்பணிப்பாலும் இணைந்துள்ள மாணவர், பெற்றோர், ஆசிரியர், நூலக அணியினர், தன்னார்வலர், ஆதரவாளர் அனைவருக்கும் எமது சிரம் தாழ்ந்த வணக்கம். 2026ஆம் ஆண்டில் எமது பள்ளி மேற்கொண்ட பயணத்தையும் சாதனைகளையும் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

## வளர்ந்து விரியும் பாலர் மலர் செவன்ஹில்ஸ் குடும்பம்

மாணவர் சேர்க்கை செயல்முறை முன்கூட்டியே தொடங்கப்பட்டு, தடையற்ற நடைமுறைகள் மூலம் சேர்க்கை செயல்பாடு எளிதாக்கப்பட்டது.

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

-திருவள்ளுவர், திருக்குறள் 396

என்று வள்ளுவர் கூறுவது போல, மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போலவே, கற்கக் கற்க அறிவும் பெருகுகிறது. இந்த கூற்றினுக்கேற்ப 2026ஆம் ஆண்டிலும் பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளி தொடர்ச்சியான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இன்று 700-க்கும் மேற்பட்ட மாணவச் செல்வங்களுடனும், 100-க்கும் அதிகமான அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களுடனும் எமது தமிழ்ப்பணி சிறப்பாகத் தொடர்கிறது.

எண்ணிக்கையில் வளர்வதோடு மட்டுமல்லாமல், உறவிலும் நோக்கத்திலும் எமது பள்ளிக் குடும்பம் வலுப்பெற்றுள்ளது. குடும்பம் வலுப்பெற்றுள்ளது. குறிப்பாக, பாலர் மலரில் கல்வி கற்று வளர்ந்த முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்களாக மீண்டும் இணைவது எமக்குப் பெருமைக்குரிய நிகழ்வாகும். இது ஒரு பள்ளியின் வளர்ச்சி மட்டுமல்ல; தலைமுறைகளை இணைக்கும் தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்ச்சியின் அழகிய சான்றாகும்.

## கற்றலின் எல்லைகளை விரிவுபடுத்துதல்

இந்த ஆண்டு பாடத்திட்டத் திட்டமிடலும் பாட வடிவமைப்பும் மேலும் வலுப்படுத்தப்பட்டு, NESA பாடத்திட்டக் கட்டமைப்பின் வழிகாட்டுதல்களோடு இணைந்த கற்றல் அனுபவங்கள் விரிவாக்கப்பட்டன. படித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் என்ற மொழித் திறன்களோடு, சிந்தித்தல், பகுத்தாய்தல்,

# பாலர் மலர் செவன்ஹில்ஸ் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

படைத்தல், தொடர்புகொள்ளல், ஒத்துழைத்தல் மற்றும் தன்னம்பிக்கையுடன் கருத்தை வெளிப்படுத்தல் போன்ற திறன்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. வம் வழங்கப்பட்டது. மொழியை ஒரு பாடமாக மட்டும் அல்லாது, மாணவரின் சிந்தனைக்கும் அடையாளத்திற்கும் எதிர்காலத்திற்கும் வலிமை சேர்க்கும் கருவியாகக் காண்பதே எமது கல்வி நோக்கமாகும்.

மாணவர்களின் தமிழ் வாசிப்புத் திறனையும் அறிவுத்திறனையும் வளர்க்கும் நோக்கில் நூலகத்திற்குப் புதிய புத்தகங்கள் வாங்கப்பட்டன. மேலும், HSC மாணவர்களின் பயன்பாட்டிற்காக க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதிகள் கொள்முதல் செய்யப்பட்டன.

### கலையும் தமிழும் இணைந்த கற்றல்

கலை ஒருங்கிணைந்த மொழிக் கற்பித்தல் முறை – Art Integrated Language Teaching (AILT) – அனைத்துப் படிநிலைகளிலும் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. மணற்கலை, தமிழ்க் கலை வடிவங்கள், நாடகப் பட்டறைகள் மற்றும் சித்திரக் கவிப் பட்டறைகள் போன்ற பல்வேறு கலை அனுபவங்கள் தமிழ் மொழிக் கற்றலுடன் இணைக்கப்பட்டன.

இதன் மூலம் மாணவர்கள் தமிழைக் கற்பதோடு மட்டுமல்லாது, தமிழில் சிந்திக்கவும், படைக்கவும், தங்கள் உணர்வுகளையும் கருத்துகளையும் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்தவும் புதிய வாய்ப்புகளைப் பெற்றனர்.

### இளம் எழுத்தாளர்களின் குரல்

இளம் எழுத்தாளர் திட்டம் இந்த ஆண்டும் சிறப்பாகத் தொடர்ந்தது. அதன் இரண்டாம் கட்டத்தில், 24 மாணவர்கள் எழுதிய நூல்கள் வெளியிடப்பட்டன. மாணவர்களின் கற்பனை, படைப்பாற்றல் எழுத்து, மொழி வெளிப்பாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்ப்பதில் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளது.

மாணவர்களின் சொற்களில் தமிழ் புதிய வடிவம் பெறும் இம்முயற்சி, எமது பள்ளியின் பெருமைக்குரிய கல்வித் திட்டங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

### HSC தமிழில் பெருமைமிகு தடம்

2025ஆம் ஆண்டு HSC தமிழ்த் தேர்வில் எமது பள்ளி மாணவர் செல்வன். பொன் விமலராகவன் விஜயன் அவர்கள் மாநில அளவில் முதலிடம் பெற்று, பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளிக்குப் பெருமை சேர்த்தார். அவருக்கு எமது மனமார்ந்த பாராட்டுகள்.

2026ஆம் ஆண்டில் 22 மாணவர்கள் HSC தமிழ்த் தேர்வை எழுதத் தயாராக உள்ளனர். உயர்நிலைத் தமிழ் கற்றல் பாதையை வலுப்படுத்தி, மாணவர்கள் தங்கள் மொழித் திறனை கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளோடு இணைத்துப் பயணிக்க உதவுவது எமது தொடர்ச்சியான நோக்கமாகும். தேர்வெழுதவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்.

# பாலர் மலர் செவன்ஹில்ஸ் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

**போட்டிகள்: திறமைகளுக்கான மேடைகள்**

2026ஆம் ஆண்டில் எமது மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் ஆர்வத்துடனும் திறமையுடனும் பங்கேற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்தனர்.

- பாலர் மலர் கல்விக் கழகப் போட்டிகளில் 209 மாணவர்கள் பங்கேற்று பல வெற்றிகளையும் அங்கீகாரங்களையும் பெற்றனர்.
- ASOGT போட்டிகளில் பல மாணவர்கள் பங்கேற்று பாராட்டத்தக்க பரிசுகளைப் பெற்றதுடன், 20-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேசிய அளவிலான போட்டிக்குத் தேர்வாகி சிறப்பான சாதனையைப் பதிவு செய்தனர்.
- வெல்லும் சொல் பேச்சுப் போட்டியில் ஒன்பது அணிகள் பங்கேற்றன; அவற்றில் ஓர் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.
- மந்திரி விருதில் மூத்த பிரிவில் செல்வன். யோகன் சரவணகுமார் கோமதி அவர்கள் Commended அங்கீகாரத்தையும், இளைய பிரிவில் செல்வி. அனன்யா ஆனந்த் அவர்கள் Highly Commended அங்கீகாரத்தையும் பெற்றனர்.

இந்த மேடைகள் மாணவர்களின் தமிழ்மொழித் திறனோடு பொதுப்பேச்சு, குழுப்பணி, தலைமைத்துவம், தொடர்பாடல் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றையும் வளப்படுத்தியுள்ளன.

**சமூக மேடைகளில் தமிழ்**

சமுதாய மொழிப் பள்ளிகளின் EXTRAVAGANZA 2026 நிகழ்வில் எமது மாணவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். அதேபோல், NSW Premier's இரவு விருந்தில் நடைபெற்ற Harmony Choir 2026 நிகழ்வில் தமிழ் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பையும் எமது மாணவர்கள் பெற்றனர்.

பள்ளி வகுப்பறையைத் தாண்டி, பரந்த சமூக மேடைகளிலும் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை பெருமையுடன் எடுத்துச் செல்லும் அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவது எமது பணியின் முக்கிய அங்கமாகும்.

**தன்னார்வலர்களே எமது வலிமை**

பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளி என்பது கட்டடங்களால் மட்டும் உருவான நிறுவனம் அல்ல; தன்னலமற்ற மனிதர்களால் உயிர்பெறும் குடும்பம். ஆசிரியர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், பெற்றோர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின்நேரம், உழைப்பு, அன்பு ஆகியவையே எமது பள்ளியின் உண்மையான அடித்தளம்.

இளம் ஆசிரியர்களின் சேர்க்கையும் முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்களாகத் திரும்பிவரும் தொடர்ச்சியும், பாலர் மலர் செவன்ஹில்ஸ் தமிழ்ப் பள்ளியின் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்கச் செய்கின்றன.

**2027: வேர்களில் வலிமை, சிறகுகளில் உயரம்**

மேலும் உறுதியான அடித்தளங்களை உருவாக்கி சிறப்பை நோக்கிச் செல்லுதல்' என்ற எமது

# பாலர் மலர் செவன்ஹில்ஸ் பள்ளியின் 2026 ஆம் ஆண்டறிக்கை

வியூகத்தின் அடிப்படையில், 2027ஆம் ஆண்டில் புதுமையான கற்பித்தல் முறைகள், ஆசிரியர் மேம்பாடு, மாணவர் தலைமைத்துவ வாய்ப்புகள் மற்றும் பண்பாட்டு ஈடுபாட்டை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

